B2
022



WITH COURAGE AND FAITH

# முத்தமிழ் விழா - 2017

## அண்ணாமலைக் கனடா வளாக மாணவர் அமைப்பு








# தமிழ்த் தாய் வாழ்த்து

”நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்து துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்றுபல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
உன் சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே!

# உள்ளடக்கம்

**1. வாழ்த்துரைகள்:**


1.1. பேரா. செ. மணியன், உபவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1.2. முனைவர். க. முத்துராமன், பீடாதிபதி, நுண்கலை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1.3. முனைவர் மு. அருள், பணிப்பாளர் புறநிலைக் கல்வி, அண்ணாமலைப்பல்கலைக்கழகம்

1.4. பெருமதிப்பிற்குரிய க. ஆனந்தசங்கரி, பாராளுமன்ற அங்கத்தவர், லிபரல் கட்சி.

1.5. பெருமதிப்பிற்குரிய லோகன் கணபதி, மார்க்கம் நகரசபை உறுப்பினர்

1.6. பெருமதிப்பிற்குரிய நீதன் ஷண், ரொறண்டோ நகரசபை உறுப்பினர்

1.7. பெருமதிப்பிற்குரிய தயா தேவநாயகம், தலைவர், அண்ணாமலைக் கனடா வளாகம்.

1.8. பேராசிரியர். இ. பாலசுந்தரம். தலைவர், அண்ணாமலைக் கனடா வளமாணவர் அமைப்பு.

1.9. முனைவர் செ. ஸ்ரீதாஸ், நிருவாகப் பொறுப்பாளர், அண்ணாமலைக் கனடா வளாகம்


**2. கட்டுரைகள்:**


2.1 சங்க காலப் புலவர்களும் அவர்களது ஆளுமைகளும் - பேராசிரியர் இ. பாலசுந்தரம்

2.2 NATTUVANGAM - ART OF THE NATTUVANAR - Dr. Mrs. Uma Anand

2.3 கீழடி அகழ்வாய்வும் மதுரைக் காஞ்சியும் - முனைவர் செ. சிறிதாஸ்

2.4 சைவ மடங்களும் ஆதீனங்களும் - முனைவர் ந. முத்துக்குமாரன்

2.5 Shakespeare and Sage Vipulananda - Mr. Sinniah Sivanesan

2.6 அவசர உலகில் எம் வாழ்க்கையை மேம்படுத்தும் யோகக்கலை –
திரு. சிவலிங்கம் ஜெயறஜீன்

2.7 கர்னாடக இசைப் பாரம்பரியத்தில் வாத்திய இசை - திரு. சிவசம்பு ஸ்ரீதாஸ்

2.8 கோயில் கலைகளின் காப்பகம் - திருமதி அற்புதராணி கிருபராஜ்

2.9 சிறுவர்களுக்கான யோகாசனம் - மகிந்தன் இராசையா

2.10 Meditation & Relaxation - Mrs. Subashini Nagulananthan

2.11 நடனத்திலே நெறியாள்கை - திருமதி. சூரியகலா சந்திரிகா ஜீவானந்தன்

2.12 சித்தர்கள் கண்ட தத்துவ முத்துகள் - திருமதி யோகா அருள்சுப்பிரமணியம்

2.13 கனடாவில் அடுத்த தலைமுறைத் தமிழரும் தமிழும் - திரு. சுகந்தன் வல்லிபுரம்

2.14 இறக்கின்ற போதெல்லாம் பிறக்கின்ற வரம் வேண்டும்! - திரு. சி. சண்முகராஜா

2.15 போரே மீண்டும் வாராதே! - திரு. சபா. அருள்சுப்பிரமணியம்

# அண்ணாமலைக் கனடா வளாகம்
## நிர்வாக உறுப்பினர்களும் விரிவுரையாளர்களும்

| | |
|---|---|
|  | **திரு. தயா தேவநாயகம்**<br>தலைவர், அண்ணமலை கனடா வளாகம் |
|  | **முனைவர். செல்வநாயகி ஸ்ரீதாஸ்**<br>நிருவாகப் பொறுப்பாளர், விரிவுரையாளர் தமிழ்த்துறை |
|  | **முனைவர். உமா ஆனந்த்**<br>பொறுப்பாளர், நடனம் |
|  | **திரு. ந. வெங்கடேஷ்**<br>துறைத் தலைவர், வாய்ப்பாட்டு |
|  | **முனைவர். ந. முத்துக்குமரன்**<br>துறைத் தலைவர், வாத்திய இசை |
|  | **பேராசிரியர். இ. பாலசுந்தரம்**<br>துறைத் தலைவர், தமிழ்த்துறை |
|  | **திரு. சி. ஜெயரஜீன்**<br>துறைத் தலைவர், யோகா |
|  | **திரு. சி. சிவநேசன்**<br>விரிவுரையாளர், ஆங்கிலம், தமிழ்த்துறை |
|  | **திரு. பொ. விவேகானந்தன்**<br>விரிவுரையாளர், தமிழ்த்துறை |
|  | **திரு. இ. மகிந்தன்**<br>விரிவுரையாளர், தமிழ்த்துறை |
|  | **திருமதி. சூரியகலா ஜீவானந்தன்**<br>உதவி விரிவுரையாளர், நடனம் |

# நிகழ்ச்சி நிரல்

அண்ணாமலைக் கனடா வளாக மாணவர் அமைப்பு வழங்கும்

## முத்தமிழ் விழா

காலம்: ஜூலை 08, 2017 தொடக்கம்: 5.00 மணி

இடம்: வேதிக் கலாச்சார மண்டபம், 4349 14வது வீதி, மார்க்கம்

1. **மங்கல விளக்கேற்றல்**

2. **தமிழ்த் தாய் வாழ்த்து, கனேடிய கீதம்:** கிருஷான் தனஞ்செயன்

   **அகவணக்கம்**

3. **வரவேற்புரை:** திரு. சண்முகராஜா சின்னத்தம்பி

4. **நடனம் – புஷ்பாஞ்சலி:** கணேச பஞ்சாட்சரரத்தினம்

   தயாரிப்பு: திருமதி. சூரியகலா ஜீவானந்தம்

5. **உரை:** பேராசிரியர். இ. பாலசுந்தரம்,

   தலைவர் அண்ணாமலைக் கனடா வளாக மாணவர் அமைப்பு,

6. **உரை:** திரு. ஹரி ஆனந்தசங்கரி, லிபரல் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்

7. **கவிதை:** திரு. சபா. அருள்சுப்பிரமணியம்

8. **வாத்திய இசை:** நெறியாள்கை: திரு. T. N. பாலமுரளி

9. **தலைவர் உரை:** திரு. தயா தேவநாயகம், அண்ணாமலைக் கனடா வளாகம்.

10. **பிரதம விருந்தினர் உரை:** திரு. வி. புருஷோத்தமன்,

    அண்ணாமலைக் கனடா வளாகக் கணக்காய்வாளர் (Auditor)

11. **வாய்ப்பாட்டு:** திருமதி. விஜயலக்சுமி சீனிவாசகம்,

    செல்விகள். சரிகா நவநாதன், ஸ்ருதி பாலமுரளி.

12. **நடனம் – நந்திச் சொல்லு:** தயாரிப்பு: திருமதி. சூரியகலா. ஜீவானந்தம்

13. **உரை:** முனைவர். செல்வநாயகி ஸ்ரீதாஸ்,

நிருவாகப் பொறுப்பாளர் அண்ணாமலைக் கனடா வளாகம்

14. **யோகா:** பிராணாயாமம் செய்முறை விளக்கம்: திருமதி. மாலினி முரளீதரன்

15. **நடனம் – சொக்கநாதர் கௌத்துவம்:** தயாரிப்பு: திருமதி வனிதா. குகேந்திரன்.

16. **உரை:** செல்வி. வனிதா. நாதன்,

யோர்க் பிராந்திய கல்விச் சபை உறுப்பினர்.

17. **உரை:** திரு. நீதன் ஷண்,

நகரசபை உறுப்பினர்

18. **நன்றியுரை:** திரு. T. N. பாலமுரளி.

19. **நடனம் – தசாவதாரம்:** தயாரிப்பு – திருமதி அற்புதராணி. கிருபராஜ்

20. **கவிதை:** திரு. சண்முகராஜா

21. **யோகா: • 108 ஆசனங்கள், • ஹத யோகா**

நெறியாள்கை: திரு. ஜெயரஜீன் சிவலிங்கம்

22. **உரை:** திரு. லோகன் கணபதி,

நகரசபை உறுப்பினர்

23. **நடனம் – அர்த்தநாரீஸ்வரர்:**

தயாரிப்பு செல்விகள் சிந்தியா ஸ்ரீரங்கன், கீர்த்தனா அருளானந்தராஜா.

24. **கவிதை:** தீவகம் இராஜலிங்கம்.

25. **நாடகம் – தூதும் துணிவும்:** எழுத்தாக்கம்: துறையூரான்.

தயாரிப்பு: பேரா. இ. பாலசுந்தரம், துறையூரான்

26. **நடனம் – தில்லானா:** தயாரிப்பு திருமதி. சூரியகலா ஜீவானந்தம்

27. **தேவாரத்துடன் நிகழ்ச்சிகள் இனிதே நிறைவேறுகிறது.**

**சுபம்**



**Prof. S. Manian** M.Sc., Ph.D.
Vice-Chancellor

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
**ANNAMALAI UNIVERSITY**
(State University-Accredited with 'A' Grade by NAAC)
ANNAMALAINAGAR - 608 002, CHIDAMBARAM, TAMIL NADU, INDIA.

## MESSAGE

The Directorate of Distance Education of the Annamalai University collaborates with Annamalai Canada Inc. in providing instruction in the Tamil language and the traditional Tamil Arts, mainly for the benefit of the second and third generation children of Tamil immigrants in Canada.

The Annamalai University, while sharing this desire to bring home all attributes of this ancient language fortified with rich literature unsurpassed, together with its contribution to the development of the Arts congratulates the Annamalai Canada Campus for mirroring the parent University's ideals and for its extra efforts at taking into its wings satellite Organizations and Institutions all over the globe where such initiatives are extended by coordinating Examinations at all levels for candidates in various countries.

I consider it a great privilege to send Greetings to the Annamalai Canada Campus on this occasion at which Testimonials are being awarded to Candidates who have been successful at various Examinations in years past. While applauding the unique initiatives of the Canada Campus I wish a successful Convocation ceremony befitting all efforts of the Annamalai Canada Campus which leaves no stone unturned to propagate Tamil Language and culture in the midst of alien cultures.

**(S. MANIAN)**


World Saiva Mission

# Annamalai University

(State University –Accredited with "A" Grade b

Dr. K. Muthuraman
Dean, Faculty of Fine Arts
Annamalai University
Chidambaram –Tamilnadu, India.
drkmau@gmail.com
Cell: 919843957652



Date: 27-06-2017

## Message

I am very much delighted to know that the Annamalai Canada Campus organizes "Muththamizh Vizha" on 8 July 2017 in Toronto, Canada, and brings out a souvenir on the momentous occasion.

The Directorate of Distance Education of Annamalai University, in collaboration with the Annamalai Canada Campus, has been offering certificate, diploma, undergraduate and postgraduate programmes of study to the second and third generation children of Tamil immigrants in Canada, extending an opportunity for learning Tamil, Music, Dance, and Yoga to hundreds of thousands of music-aspirants across Canada. I am really happy to know that the Annamalai Canada Campus has been a bridge for South Asian students to pursue higher studies and continue their passion for learning while not having to travel abroad.

I congratulate Dr. Mrs. S. Sridas, the Administrator of the Annamalai Canada Campus and the other organizers of Muththamizh Vishay, which is aimed at showcasing individual and group talents in music and dance, and also distributing certificates to the successful candidates in the university examinations

I am confident that the Muththamizh Vishay will be a source of inspiration and motivation to the participants and audience.

I wish the organizers and participants all success in the Muththamizh Vizha.

(Dr. K. Muthuraman)


அண்ணாமலைக் கனடா
ANNAMALAI CANADA CAMPU



# ANNAMALAI UNIVERSITY
(Accredited with 'A' Grade by NAAC)
DIRECTORATE OF DISTANCE EDUCATION

**Dr.M.Arul, M.B.A., Ph.D.,**
**Director**
Directorate of Distance Education
Annamalai University
Annamalainagar – 608 002
Mobile : 73391 76777



28.06.2017

## வாழ்த்துச் செய்தி

உலக தமிழர்களின் முன்னேற்றத்தில் கனடாவில் இயங்கும் **'அண்ணாமலை கனடா வளாகம்'** என்பது பெருமைக்குரிய நிறுவனமாகும். இந்நிறுவனம் அண்ணாமலைப் பல்கலைக்கழக தொலைதூரக்கல்வி இயக்கத்தோடு இணைந்து (புரிந்துணர்வு ஒப்புதல்) 2008 ஆம்ஆண்டு முதல் இளங்கலை தமிழ், முதுகலை தமிழ், இசைத்துறை, யோகா போன்ற பட்டமேற்படிப்பு வகுப்புகளை நடத்தி கனடா நாட்டு மாணவர்களுக்குக் கல்விச்சேவை புரிந்துவருகிறது. அவ்வகையில் ஜுலை மாதம் இந்நிறுவனம் **"முத்தமிழ் விழா"** நடத்துவது அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ் மொழியின் அடையாளப்படுத்தல்களையும், கலை மற்றும் பண்பாட்டு விழுமியங்களை இவ்விழாவின் மூலம் உலகுக்கு வெளிப்படுத்தவும் முனைந்துள்ளது. காலக்கணிப்பில் கல்வியின் வழி செயல்படும் இந்நிறுவனம் மேலும் மேலும் தமது பங்களிப்பை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன் சேர்ந்து பணியாற்ற வேண்டி வாழ்த்துகிறேன்.

'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற அமுதமொழிக்கு ஏற்ப ஒற்றுமையுடன், இன உணர்வு நீங்கி இன்ப வாழ்வு ஏற்படவும், இந்தவிழா வழி வகுக்கும் என்று நம்புகிறேன்.

வாழ்த்துக்கள்

மு. அருள்


ANNAMALAI CANADA CAMPUS
WITH COURAGE AND FAITH
416-777-2822


அண்ணாமலைக் கனடா வளாகம்
ANNAMALAI CANADA CAMPUS
WITH COURAGE AND FAITH
416-777-2822

House of Commons
Chambre des communes
Canada
Gary Anandasangaree
Member of Parliament
Scarborough – Rouge Park

July 8th, 2017

## Greetings from Gary Anandasangaree

## Member of Parliament for Scarborough-Rouge Park, Toronto, Canada

I would like to extend my warmest greetings to everyone participating in the inaugural *Muththamzhil Vizhla* hosted by Annamalai Canada Campus.

As we celebrate Canada 150, we reflect on our nation's rich diversity and multiculturalism. This is represented best by organizations such as Annamalai Canada, which acts as a shining example across the country of the strength we draw by celebrating our diverse cultures and heritage. This program reminds us during our 150th celebrations that we are strong not in spite of our difference, but because of them.

I extend my best wishes to the countless volunteers, organizers and participants for all your hard work and dedication in celebrating our rich diversity.

CANADA 150

Yours very truly,

Gary Anandasangaree
Member of Parliament
*Scarborough-Rouge Park*

*Ottawa*
Room 1110, The Valour Building, Ottawa, Ontario K1A 0A6
Tel.: 613-992-1351 Fax.: 613-992-1373
Gary.Anand@parl.gc.ca

*Constituency Office*
3600 Ellesmere Road -Unit 3, Scarborough, Ontario, M1C 4Y8
Tel.: 416 -283-1414
Gary.Anandasangaree.C1@parl.gc.ca




வளாகம்
CAMPUS

MARKHAM



June 28, 2017

**Logan Kanapathi**
*Councillor, Ward 7*

# GREETINGS FROM THE CITY OF MARKHAM

On behalf of the Mayor and the Members of Markham Council, I am very pleased to extend my best wishes to **Annamalai Canada Campus** on their very first **Muththamizh Vizha** on July 8, 2017.

The Annamalai Canada Campus has allowed South Asian students who are passionate about pursuing higher level education from Annamalai University to earn their degree without having to travel abroad to India. Students have been able to explore, understand and appreciate the Tamil language and culture, an opportunity that would have been limited if not for Annamalai Canada Campus. The Annamalai Canada Campus is playing a vital role in ensuring that future generations will stay connected and knowledgeable in the rich and vibrant Tamil language and culture. I am confident that through your efforts, you will continue to inspire, empower, encourage, and engage all members of our community.

I wish all the guests attending tonight's function a pleasant evening! To the performers, best wishes for a memorable performance! To Annamalai Canada Campus, I wish you continued success in all your future endeavours.

Sincerely,

**Logan Kanapathi**
City of Markham - Councillor

**The Corporation of the City of Markham** · 101 Town Centre Boulevard, Markham, Ontario L3R 9W3
Tel: 905.479.7748 · Fax: 905.479.7763 · e-mail: lkanapathi@markham.ca · www.markham.ca

TORONTO
Ward 42, Scarborough–Rouge River

Councillor Neethan Shan

City Hall
100 Queen Street West, Suite B23
Toronto, Ontario M5H 2N2

Tel: 416-392-4078
Fax: 416-696-4159
Email: Councillor_Shan@toronto.ca



Saturday, July 8, 2017

Dear Esteemed Readers:

I am pleased to offer my warmest greetings to everyone attending this evening's *Muththamzhil Vizhla* hosted by Annamalai Canada Campus.

I want to congratulate Annamalai Canada Campus for their continued efforts in providing South Asian Canadian students with the skills and training from Annamalai University India in order to develop their talent in dance, music, language, and yoga – here in Toronto. What an extraordinary task!

This evening, let us celebrate the noble determination of Annamalai Canada Campus to instill students with a love and appreciation of authentic South Asian arts. Please accept my wishes for a truly enjoyable evening.

Sincerely,

Neethan Shan
Toronto City Councillor
Ward 42 - Scarborough Rouge River

311

July 08, 2017



**Thaya Thevanayagam**
President,
Annamalai Canada Campus

**LADIES AND GENTLEMEN:**

It gives me great pleasure to welcome you all to this celebration of Tamil and Tamil culture. It is so important for us to have these opportunities to connect with our community; after all – successful community inclusion and growth go hand in hand. I wanted to start by thanking you for joining us tonight; your support and presence here is indicative of the steps we've made in the right direction, and of the possibilities of what could be as we continue on this path together.

Annamalai Canada Campus is embarking on several initiatives that are planned to elevate the quality and standard of our beloved language in the coming years. I will keep you in the fold as they come to fruition. For now, we are proud of the work that we have accomplished thus far and will continue to work tirelessly to improve and develop further.

It is important for us as a Centre to enter this phase after more than a decade of operation knowing that students make the biggest difference. A large number of our current and former students are now teachers/ educators themselves and it is of the utmost relevance to include them in the conversation as we look into the future. I am delighted to say that this year's festivities have largely been the hard work of our alumni association. This shift is indicative of our direction forward; student involvement is paramount.

In closing let me say that our people have the same resilience as our language. Tamil has a vast body of ancient literature which is still taught and learned today after thousands of years. Think about all the changes that have happened in that time. The rate in which the world changed in the last 200 Millennia should indicate that change will paint over tradition with ease. However, If I were to start a debate about Sangam literature or Silappathigaaram right here at this moment, most of you will be able to contribute; that is the strength of our heritage. We are a group that holds onto our identity strongly. Let us carry forward the same audacity and courage as we have done throughout our existence.

Once again thank you.

08. 07. 2017

**பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி**
தலைவர்,
அண்ணாமலைக் கனடா வளாகம் மாணவர் அமைப்பு
balasundarame@yahoo.com



# வாழ்த்துச் செய்தி

கனடாவின் 150ஆவது பிறந்த தினக் கொண்டாட்டம் நடைபெறவுள்ள இவ்வேளையில் அண்ணாமலைக் கனடா வளாக மாணவர் அமைப்பும் அதிற் பங்குகொள்வதோடு, தனது மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறது.

அண்ணாமலைக் கனடா வளாகம் மாணவர் அமைப்பின் தலைவர் என்னும் தகைமையில் இவ்விழா மலருக்கு வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வளாகத்திலே தமிழ், இசை, நடனம், யோகா ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இளங்கலைமானி, முதுகலைமானி, முனைவர் பட்டப் படிப்புக்கான கற்கை நெறிகள் வழங்கப்படுகின்றன. நுண்கலைப் பாடங்கள் அண்ணமலைப் பல்கலைக்கழக ஆசிரியர்களால் கோடைவிடுமுறைக் காலத்தில் கற்பிக்கப்படுகின்றன. இவற்றுடன் நுண்கலைப் பாடங்களில் தர அடிப்படையிலான தேர்வுகளும் நடத்தப்படுகின்றன.

தமிழ், யோகா ஆகிய பாடங்களுக்கான பகுதிநேர வகுப்புக்கள் எமது வளாகத்தில் நடைபெறுகின்றன. பல நூறு மாணவர்கள் இவ்விரு பாடங்களிலும் கற்று வருகிறார்கள். தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. யோகா கல்வித்துறையில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர் பட்டங்கள் பெற்றுள்ளனர். இப்போதும் பெருந்தொகையான மாணவர் யோகா கற்று வருகின்றனர்.

இவ்வளாகம் 2006ஆம் ஆண்டு ஆரம்பித்த நாள் முதலாக இவ்வளாகத்தில் தமிழ்த்துறையை ஆரம்பித்து அதன் தலைவராகச் செயற்படுவதோடு, மாணவருக்குப் பாடங்களைக் கற்பித்தும் வருகின்றேன். இத்தகு நல்லதொரு பணியை ஆரம்பித்து வைத்தேன் என்பதில் எனக்குப் பெருமிதமுண்டு.. சுவாமி விபுலாநந்தர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதன் முதலாகத் தமிழ்த்துறையை ஆரம்பித்து வைத்து அதன் முதல் தமிழ்ப் பேராசிரியராகக் கடமை புரிந்தார் என்ற செய்தியையும் இங்குப் பதிவுசெய்தல் பொருத்தமாகும். 2006ஆம் ஆண்டு முதல் இற்றைவரை தொடர்ச்சியாக இக்கல்விச் சேவையைத் தன்னார்வத் தொண்டு அடிப்படையில் நானும், என்னுடன் கற்பிக்கும் ஏனைய விரிவுரையாளர்களும் மேற்கொண்டுவருகின்றோம் என்பது வியப்பைத் தரும் செய்தியாகும். தமிழ்மொழியும் தமிழ்ப் பண்பாடும் என்னிரு கண்கள் போன்றவை. எம்மவர் புலம்பெயர்ந்து வாழும் இக்கனடா நாட்டிலே தமிழ்மொழியைப் பட்டப் படிப்பு நிலையில் மாணவருக்குப் போதித்து, அவர்கள் இந்நாட்டில் தமிழ்மொழிக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் பணி செய்யும் வகையில்

அவர்களைக் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக நெறிப்படுத்தி வருகின்றேன். இதுவரை 12 மாணவர் தமிழ்த்துறையில் முதுகலைமானிப் பட்டம் பெற்றுள்ளனர். ஒருவர் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

அண்ணாமலைக் கனடா வளாகத்தில் கற்றுப் பட்டம் பெற்ற மாணவரும், தற்போது இவ்வளாகத்திற் கல்வியைத் தொடரும் மாணவரும் ஆசிரியர்களும் இணைந்து, இவ்வாண்டு **"அண்ணாமலைக் கனடா வளாகம் மாணவர் அமைப்பு"** என்ற பெயரில் ஓர் அமைப்பை இவ்வாண்டு உருவாக்கியுள்ளனர். அதன் தலைவராக என்னை எல்லோரும் விருப்புடன் நியமித்து, இவ்வமைப்பை வழிநடத்தும் பெரும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்துள்ளனர். தமிழ், நடனம், இசை, யோகா ஆகிய நான்கு துறைகளைச் சேர்ந்த மாணவரின் கூட்டு முயற்சியினால் மிகக் குறுகிய காலத்தில் இந்த முத்தமிழ் விழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அவர்களது பெருமுயற்சியினால் விழாச் சிறப்பிதழும் வெளியிடப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

எமது வளாகத்தில் நடைபெறும் தமிழ், நடனம், இசை, யோகா ஆகிய கற்கைநெறிகளில் நீங்களும் இணைந்துகொள்ளலாம். தனியார் நுண்கலைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர் இவ்வளாகத்திலே தம்மைப் பதிவுசெய்து உயர்பட்டங்களைப் பெறுவதற்கு அரிய வாய்ப்புள்ளது என்பதை மாணவருக்கும் பெற்றோருக்கும் அறியத்தருகின்றேன். தமிழும் தமிழ்ப் பண்பாடும் இந்நாட்டில் நிலைத்து நிற்பதற்கு ஏற்ற வகையில் அண்ணாமலைக் கனடா வளாகம் பணி செய்வதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

கனடாவில் அண்ணாமலைக் கனடா வளாகம் மேலும் மேலும் வளர்ச்சி பெற்று, உயர்கல்வி நிலையமாகத் திகழும் வகையில் எல்லோரும் உறுதியுடனும் ஆர்வத்துடனும் செயலாற்ற வேண்டுமென வாழத்துகின்றேன்.



*பட்டினி கிடந்தது பசியால் மெலிந்து*
*பாழ்பட நேர்ந்திடினும்*
*கட்டி இழுத்து கால்கை முறித்து அங்கம்*
*பிளந்து இழந்து துடிதிடினும் பொங்கு*
*தமிழை பேச மறப்பேனோ...............*

பாரதி



ஜூலை 08, 2017

**முனைவர். திருமதி. செ. ஸ்ரீதாஸ்**
நிருவாகப் பொறுப்பாளர்
அண்ணாமலைக் கனடா வளாகம்

# வாழ்த்துச் செய்தி

அண்ணாமலைக் கனடா வளாகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கல்வித் திட்டங்களைக் கனடாவில் எடுத்து வந்து, கனடா வளாகத்துடன் இணைந்து கொள்ளும் கனேடிய மற்றும் புலம்பெயர் நாடுகளில் வாழும் மாணவர்களைத் தேர்வுகளுக்குத் தயார் செய்து, தேர்வுகளை நடாத்தி, மாணவர்களுக்குப் பட்டமளிப்பு விழாவும் செய்து வைக்கின்றது. அண்ணாமலைக் கனடா வளாகத்தில் இணைந்து கொள்ளும் மாணவர்கள் அனைவரும், தோற்றும் தேர்வுகள் அனைத்தும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினால் திட்டமிடப்பட்டு, அண்ணாமலைப் பேராசிரியர்களால் நேரடியாகவே நடாத்தப்பட்டு, அவர்களாலேயே சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

இந்தியாவில், தமிழ் மொழிக் கல்வியிலும் பரதநாட்டியம், இசை முதலாய கலைகளிலும் முன்னிலை வகிக்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் என்று கூறிக்கொள்வதில் நாம் அனைவரும் பெருமை கொள்கிறோம். கனடா நாட்டிலிருந்து இந்தியா சென்று இதே கல்வியைக் கற்பதில் கனடியத் தமிழர்களுக்கு இருக்கக்கூடிய பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்துக் இடர்ப்பாடுகளும் நாம் அறிந்ததே. இவ் இடர்ப்பாடுகள் அனைத்தையும் கடந்து தமிழர் பண்பாடு உங்கள் வாசல் படியேறி வந்து உங்கள் கதவுகளைத் தட்டுகின்றது. வரவேற்றுப் பலன் அடைவது உங்கள் தனிப்பட்ட கொள்கை.

நாம் புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழையும் தமிழர் கலைகளையும் பண்பாட்டினையும் வளர்த்தெடுப்பதிலும் அதனை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்வதிலும் நாம் அனைவரும் காட்டுகின்ற அக்கறை கட்டாயமாக உரிய பலனைத் தரும் என்பதில் நாம் அசைக்கமுடியாத நம்பிக்கை வைக்கவேண்டும். பல வயது வந்த இளைஞர்கள் தாம் உரிய வயதில் தமிழ் கற்கவில்லையே என இன்று அங்கலாய்க்கிறார்கள். அவர்கள் தமிழ் கற்பதில் மிக்க ஆர்வம் காட்டினாலும் அவர்கள் குடும்பச் சூழல் அவர்கள் ஆர்வத்திற்கு முட்டுக்கட்டையாக அமைந்து விடுகிறது. சிலர் எம்மிடம் உதவி நாடி வருகிறார்கள். அவரவர் ஆர்வத்தின் தரத்தின் அடிப்படையில் அவர்கள் பலனையும் காண்கிறார்கள்.

நாம் வாழும் பல்லின பல்கலாச்சாரச் சூழலில், அரசியல், மருத்துவம், வணிகம், வங்கி முதலிய பொதுமக்களுடன் தொடர்புடைய தொழில் வாய்ப்புக்களை நாடுபவர்களுக்குத் தாய்மொழி அறிவு மிகவும் வாய்ப்பாகவும் மொழி அறிவு இன்மை ஒரு குறையாகவும் கணிக்கப்படுகிறது. இன்று அரசியலில் நுழைய முற்படுபவர்கள் தமிழ் கற்க முன்வருகிறார்கள். மக்கள் தொடர்பு சாதனங்களில் பணிபுரிபவர்கள் தமிழையும் தமிழர் பண்பாட்டையும் அறியாது அத்துறையில் நீண்ட காலம் பணியாற்றமுடியாது.

அண்ணாமலைக் கனடா வளாகத்தில் தமிழ் கற்க வரும் மாணவர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ரொறொண்டோ கல்விச் சபையினால் நடாத்தப்படும் தமிழ் வகுப்பில் ஆசிரியராகப் பணியாற்றும் வயோதிபப் பருவத்தில் இருப்பவர்கள்

இளைப்பாறும் காலம் வெகு தொலைவில் இல்லை. அவர்கள் இளைப்பாறி வெளியேறும் போது அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்குரிய தமிழ் ஆசிரியர் சமூகம் ஒன்று தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

தமிழ்ப் பட்டப் படிப்பினால் என்ன பலன் என்று கேட்கும் இளைஞர்கள் ஒரு விடயத்தைக் கவவனத்தில் கொள்ளவேண்டும். தன் தாய்மொழியை அறிந்திருக்க வேண்டியது ஒவ்வொரு தனிமனிதனதும் கடமையாகும். 3000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப் பழமை மிக்க உயரிய மொழி ஒன்றின் சொந்தக்காரர் என்று எம்மைக் கூறிக் கொள்வதில் நாம் பெருமை கொள்ளவேண்டும். இளைய தலைமுறையினர், தமது தாய்மொழியின் பெருமையும் பழமையும் பெறுமதியும் தெரியாத காரணத்தினாலேயே அவர்கள் அதனை அலட்சியம் செய்கிறார்கள், சிலர் வெறுக்கிறார்கள், சிலர் தம்மைத் தமிழராக அடையாளம் காட்டிக் கொள்வதற்கு வெட்கப்படுகிறார்கள். இது அவர்களது தவறல்ல. தமிழ் மொழியின் பெருமையை, பழமையை, செழுமையை அவர்கள் ஒவ்வொருவருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டியது எமது தலையாய கடமையாகும். ஒவ்வொரு தமிழ்க் குழந்தையும் தனது இனத்தின் பெருமை பற்றிய அறிவுடையதாக வளர்க்கப்படவேண்டும். தனது இனத்தின் வரலாறு தெரிந்த ஒவ்வொரு குழந்தையும் தன்னைத் தமிழன் என்று அடையாளம் காட்டிக் கொள்வதைப் பெருமையாகக் கொள்ளும். அதனை அறியாதவர்கள் தமது அடையாளத்தைத் தொலைத்தவர்கள் ஆவார்கள்.

**"தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா"** என்று ஒவ்வொரு தமிழ் மகனும் கூறிக் கொள்ளவேண்டும்.

எமக்கென்று ஒரு நாடு அற்ற நாம், நமக்குக் கிடைத்த நாட்டை நமதாக்கிக் கொள்வோம். எமது மொழி, பண்பாட்டை வளர்த்துக் கொள்வதற்கு அரசு பெரு நிதியம் செலவிடுகிறது. தமிழ்ப் பெற்றாருக்கு ஒரு வேண்டுகோள். உங்கள் குழந்தைகளைத் தமிழ் வகுப்புக்களுக்கு அனுப்பி வையுங்கள். அந்த வகுப்புக்களைக் குழந்தைகள் பராமரிப்பு இடமாகக் கருதவேண்டாம். ஒவ்வொரு தாயும் தன் குழந்தை தமிழ் வகுப்பில் என்ன படித்து வருகிறான் என்பதைக் கவனிக்க வேண்டும். தமிழ் வகுப்புக்களில் ஆசிரியர் சொல்லித் தருவதை வீட்டிலும் சொல்லித் தரவேண்டும். உங்கள் சொற்ப முயற்சி குழந்தையின் தமிழ் கற்கும் ஆர்வத்தைத் தூண்டிவிடுவதாக அமையும்.

தஞ்சம் கொடுத்த இந் நாட்டில் நாம் தடம் பதித்துக் கால் நூற்றாண்டுகள் கடந்து விட்டன. தமிழ் மக்கள் தனி மனிதராகவும் சமூக அமைப்புக்களாக இணைந்தும் தாம் இழந்தவற்றை மீளப் பெறுவதற்கும் தம் சமூகத்தை மீள்உருவாக்கம் செய்வதற்கும் முயன்று ஓரளவுக்கு வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். இம் முயற்சியில் அண்ணாமலைக் கனடா வளாகத்தின் பங்கும் குறிப்பிடத்தக்கது.
இந்தப் பாரிய அமைப்பின் நிர்வாகப் பொறுப்பாளி என்ற முறையில் ஒரு சில தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

1. அண்ணாமலைக் கனடா வளாகத்தில் பணிபுரியும் விரிவுரையாளர்கள் அனைவருமே தொண்டர்கள். அவர்கள் அனைவருமே பாராட்டுக்கு உரியவர்கள்.
2. அவர்கள் தொண்டுக்குப் பிரதியாக நீங்கள் எதாவது செய்வதாக இருந்தால் அவர்கள் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள்.
3. தமிழையும் பரதநாட்டியத்தையும் இசையையும் கற்க முயலும் ஒவ்வொரு மாணவனும் ஏதோ ஒரு வகையில் தனது சமூகத்திற்குச் சேவை செய்தவன் ஆகிறான்.

**மொழியால் இணைவோம், மொழிக்காக இணைவோம்.**


தமிழரின் நிர்வாகத்தில்
எமது நிலையத்திலே கண் பரிசோதிக்கப்படும்
Nilax optical
☑Designer eye glasses
☑safety eye glasses
☑contact lenses
☑Designer sun glasses
Limited time Offer
$50 Eye exam
First 10 Custermers only (Per Doctor Visit)
FREE Eye exam
with purchase of complete glass
Over $349.00
BUY ONE GET ONE FREE
(416) 298- 2111
(KENNEDY/FINCH)
3852 FINCH AVE EAST
UNIT # G04 TORONTO, ON M1T 3T9
S.V.Latha
Optician
Sri Ganesh
Manager

# சங்க காலப் புலவர்களும் அவர்களது ஆளுமைகளும்

பேராசிரியர் இ. பாலசுந்தரம்
தமிழ்த்துறைத் தலைவர், அண்ணாமலை கனடா வளாகம்.



சங்க இலக்கியப் பொருள்மரபு, பாடல் அமைப்பு, புலவரது ஆளுமைகள் என்பன பற்றி ஆய்ந்து நோக்கம்போது, அக்காலப் புலவர்கள் கல்விச் சான்றோர்களாகக் காணப்படுகின்றனர். மன்னன் பாண்டியன் ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன் புலவனாகப்பாடும் செய்யள் ஒன்றை நோக்கலாம்:

"உற்றுழி யுதவியும்உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே ( புறம்.183:1-2)

எனத் தான் பாடிய பாடலிலே கல்விக்கு முதன்மை கொடுப்படுகிறது. புலவர்கள் சமூகச் சிற்பிகளாக, சமூகத்திற்கு நல்ல அறிவூட்டுபவர்களாக, கல்வியிற் சிறந்த சான்றோர்களாக விளங்கினர். கல்வியும் கவிதையும் இளம் மாணாக்கருக்குப் புகட்டப்பட்டன. புலவர்களிற் சிலர் பேர்பெற்ற ஆசிரியர்களாகவும் செயற்பட்டுள்ளனர். புலவர்கள் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கியதால் தங்கள் சம காலத்தவரால் பாரட்டும் பெற்றுள்ளனர். சான்றாகக் கபிலர் என்ற புலவரைப் பற்றி இளங்கீரனார் வருமாறு பாராட்டுவதை நோக்கலாம்:

"செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்.." (புறம் -53:11-12)

பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கிய செய்யுளியற்றும் செவ்விய நாவினையும், மிக்க கேள்விச் செல்வமும், விளங்கிய புகழும் உடைய கபிலன் எனப் பாராட்டப்படுகிறார்.

சங்கப் புலவர்களில் ஆண்பாற் புலவர்களும், பெண்பாற் புலவர்களும் காணப்படுகின்றனர். அவர்கள் பிறந்த இடங்கள் கிராமங்களாக, நகரங்களாக, பட்டிதொட்டிகளாக, பலவேறுபட்ட ஊர்களாக இருந்திருக்கின்றன. அவர்கள் செய்த தொழில்கள் வேறுபட்டனவாகக் காணப்படுகின்றன. புலவர்கள் அரச குலத்திலிருந்தும், உழவர் குடியிலிருந்தும், வணிக வகுப்பிலிருந்தும், மற்றும் பல்வேறு தொழில்கள் புரிபவர்களாகவும் காணப்படுகின்றனர். புறநானூற்றுச் செய்யுட்களைப் பாடிய 147 புலவர்களில் 15 பெண்பாற் புலவர்களும், 11 அரசர்களாகவுள்ள 11 புலவர்களும் உள்ளனர். மேலும் மருத்துவர், தச்சர், கொல்லர், குயவர் என அமைகின்றனர். இவ்வாறான பல்வகைத் தொழில்கள் புரிந்தோர் செய்யுள் இயற்றும் ஆற்றல் பெற்றிருந்தனர் என்பது அக்காலத்துக் கல்வியையும் கவிதை இயற்றியோரின் ஆளுமைகளையும் வெளிப்படுத்துகின்றன.

சங்கப் புலவர்களைச் சான்றோர்கள் என வழங்குவது மரபாகும். அவர்களது சான்றாண்மைக்கும், உலக நோக்கிற்கும், அவர்கள் பெற்றிருந்த இலக்கியக் கல்வியும் சமூக ஒப்புரவாண்மையும் காரணம் ஆயின. பெரும்பாலான சங்கப் புலவர் மன்னரையும் வள்ளல்களையும் சார்ந்தே வாழ்ந்தனர். அவர்கள் வழங்கிய பரிசுப்பொருட்கள், சன்மானம் என்பவற்றின் அடிப்படையில் புலவர், ஆடற் கலைஞர்கள் மற்றும் இசைக்கலைஞர்கள் ஆகியோரது வாழ்க்கை அமைந்தது. ஆயினும் அவர்கள் அரசர்களாலும் பெரியோர்களாலும் உயர்நிலையில் வைத்து மதிக்கப்பட்டனர். அரசர்களுக்கிடையே போர் - பகை ஏற்பட்டிருந்த போதெல்லாம் அவர்களைச் சமன்செய்து சீர்தூக்கிச் சமாதானப்படுத்தும் பணியிலும் புலவர்கள் பெரிதும் ஈடுபட்டு வந்துள்ளனர். இப்புலவர்கள் உலக நோக்கில் கருத்தோட்டமுள்ள சிந்தனைகளை முன்வைப்ரோகவும் செயற்பட்டனர். தமிழ் நாட்டில் கல்வியும் கவிதையம் ஒரு தனி வகுப்பினருக்கோ, குறிப்பிட்ட தொழில் செய்கின்றவர்களுக்கோ மட்டும் சொந்தம் அல்ல என்பதை

ஆண்பாற் புலவர்களதும் பெண்பாற் புலவர்களதும் பெயர்களும், அவர்கள் செய்த தொழில்களும் சான்றுபடுத்துகின்றன. ஆனால் தங்கள் அறிவையும் சிந்தனையையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துவதற்குரிய ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவமாகச் செய்யளைக் கையாண்டனர்.

சங்ககாலப் புலவர்களில் ஔவையார் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். அவர் அரச சபைகளிலே பெரு வரவேற்பும் செல்வாக்கும் பெற்றவர்; அரசர்களுடனும் குறுநில மன்னருடனும் நட்புறவு கொண்டாடியவர். அவர் தமிழ்ச் சமூகத்தின் ஆற்றல் மிக்க கல்விமானாகத் திகழ்ந்தார். சங்க காலத்துப் புலவர், பாணர், அரசர், குறுநில மன்னர் ஆகியோர் அடிக்கடி சந்தித்து, தமிழ் நாட்டில் பண்பாடு, மொழி, இலக்கிய ஒருமைப்பாடு என்பவற்றை நிலைத்திருக்கச் செய்தனர். அரசர், குறுநில மன்னர் ஆகியோரிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் நிலையான அரசையும் உண்டாக்கப் புலவர் பெரிதும் பாடுபட்டனர்..

பாணன் என்ற சொல் இசை, நடனம், நாடகம் என்ற பொருள்களைக் குறிக்கின்ற பண் என்ற வேர்ச்சொல்லில் இருந்து பிறந்ததாகும். பாணர் காலத்து கலைகளும், வீர ஒழுக்கவியலும், இசை வளர்ச்சியும், நன்னெறிச் செல்வமும், அறிவில் நிறைவும் பேணப்பட்டு வந்தன. வீர ஒழுக்கக் கோட்பாட்டிலிருந்து படிப்படியாக உயர்ந்த உலகச் சிந்தனைகள் வளரலாயின. பாணர்கள் எப்போதும் தம் குடும்பத்துடனும் தன் குழுவுடனும், கலைப் பயணத்தை மேற்கொண்டனர். பாணன் தன் குழுவுடன் அவையோரை மகிழ்வூட்டுவான், நடிப்பான், பாடுவான், நடனம் புரிவான், இசைக் கருவிகளுடன் எப்போதும் செல்வான். பாணன் சமூகத்தின் குரலாகத் தொனிப்பான். பாணர்கள் மக்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டியங்குவர். பாணன் மன்னரையும் வள்ளல்களையும் புகழ்ந்து பாடுவதோடு, வீர அறிவுரைகொண்ட, வீர உணர்ச்சியைத் தூண்டுகின்ற செய்யுள்களையும் பாடுவான். படை வீரர்களுக்கு ஊக்கத்தை ஊட்டப் போர்க்களத்திலும் பாணர் காணப்படுவர்.

புலவர் என்ற சொல், பொது அறிவு, பகுத்தறிவு, கல்வி போன்ற பொருட்களைத் தருகின்ற வேர்ச் சொல்லில் இருந்து பிறந்ததாகும். புலவர்கள், பாணர்கள் போலன்றித் தனித்தே தம் பணியை மேற்கொண்டனர். பாணர் பாடி அவையோரை மகிழ்விக்கப், புலவரோ தம் பாடல்களால் மக்களுக்கு அதிகாரம் பெற்றவர் போன்று அறிவுரை புகட்டுவர். அவர்கள் கல்வியிலும் அறிவிலும் சிறந்து காணப்பட்டனர். கவி புனையம் திறன் பெற்று விளங்கினர். புலவர்கள் தம் பெயரை முன்னிறுத்தி தம் சொந்த அனுபவங்களையும் சமூகத்தில் தாம் கண்டறிந்த விடயங்களையும் அவதானித்து மக்களுக்கு நல்லனவற்றைப் போதிப்பனவாக அவர்களது பாடல்கள் அமைந்திருக்கும். சொந்தப் பெயரிலேயே பாவியற்றினர். இவர்கள் பொதுவாக அரண்மனைகளிலேயே காணப்படுவர். மற்றும் தன்னுடைய சக புலவர்களுடனும் அறிஞர் களுடனும் காணப்படுவர். புலவர்கள் அரசர்களைப் புகழ்ந்து பாடும்போதிலும் மனித ஒழுக்கத்திற்குச் சார்ந்ததாக, அறநெறிக்கு உகந்ததையே பாடினர். புலவர்களுக்குப் போர்க் களத்தில் இடமில்லை. ஆனால் அமைதியின் தூதுவர்களாக, அரசனின் நண்பராக அரசனுக்குத் தம் விசுவாசத்தைக் காட்டும் முறையிலும் போர்க்களத்தில் காணப்பட்டனர்.

தமிழ்ப் பண்பாடும், கல்வியும் வளர்ச்சி பெற்றிருந்த காலத்திலேயே இப்புலவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதைச் சங்க இலக்கியத்திலுள்ள எட்டுத்தொகை பத்துப்பாட்டு மூலம் அறியப்படுகின்றது. புலவர்கள் எண்ணிக்கையில் அதிகரித்துக் காணப்பட்டனர். முச்சங்க காலங்களிலும் 440 ????????? புலவர்கள் வாழ்ந்தனர் என இறையனார் களவில் குறிப்பிடுகிறது. கே. என். சிவராசபிள்ளை ஒரு தலைமுறைக்கு 40 புலவர் என்ற அடிப்படையில் 459 புலவர்கள் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்ததாகக் கணித்துத் தம் நூலிற் விளக்கியுள்ளார். தனிநாயக அடிகள் புலவர்களின் எண்ணிக்கை பற்றிக் குறிப்பிடும்போது, அரண்மனைகளில் பல புலவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அக்காலத்தில் கல்வி கற்கும்முறை கவிதைக் கலையாக இருந்துள்ளது. சங்க காலத்துப் புலவர்களின் பல்வேறு தனிதர்தனிச் செய்யுள்களும் செய்யுட் பகுதிகளும் அழிந்துள்ள என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். எனவே சங்க காலத்தில் 500 க்கும்

மேற்பட்ட புலவர் வாழ்ந்திருக்க வேண்டும் எனக் கொள்வது தவறாகாது. அண்மையில் மு. அப்பாஸ்மந்திரி (2006) 552 சங்கப் புலவர்களின் பெயர்களை வெளியிட்டுள்ளமையும் கருத்திற் கொள்ளத் தக்கதாகும்.

சங்க காலத்தில் புலவர்களுக்குரிய பணிகளும் சமூகத்தில் மிகுதியாகவே காணப்பட்டன. புலவர்கள் தம் காலத்தில் சமூதாயத்திற்கு ஆற்றிய மரபுசார் கல்வியும், மரபு சார்பற்ற கல்வியும் ஏராளம். அவர்களுடைய மரபு சார்பற்ற கல்வி (Informal Education) அறநெறி வழிகாட்டியாகவும் சமுதாயத்திற்குச் சட்டவிதிகளை வழங்குவதாகவும், சமுதாயத்தின் ஆலோசகராகவும் அமைந்தன. தமிழ்ச் சமுதாயத்தில் புலவர்கள் பெற்றிருந்த சிறப்புயர் நிலைப்பாட்டைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அரண்மனைகளிலும் விருந்துபசாரங்களிலும் புலவர்களை வரவேற்று கௌரவித்தார்கள்; அரசியல் விவகாரங்களில் அடிக்கடி தலையிட்டார்கள். பாணர். எதிரிகளின் படை வலிமை கண்டும், போரால் விளையும் தீமையை அறிந்தும் போரைத் தடுக்கும்படி அரசர்களுக்கு அறிவுரை வழங்கினர். தமிழ் வேந்தரின் ஒற்றுமைக்காகப் பெரிதும் உழைத்தார்கள். அரசர்களுக்கிடையே ஒற்றுமையை வளர்த்தார்கள். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் உழவர்களுக்கு எதிராக பளுவான வரியை விதித்திருந்தான். அந்த வரிச் சுமையைக் வெள்ளைக்குடிநாகனார் என்ற புலவர் குறைக்கும்படி அரசனை வேண்டுவதைப் புறநானூற்றுப் பாடல் வரிகள் வருமாறு கூறுகிறது:

"நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே....
நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பார மோம்பிக்
குடிபுறந் தருகுவை யாயின்
அடிபுறந் தருகுவர் அடங்காதேரே" (புறம: 35: 12, 31-34) ..

'நாட்டு வளமும் பெருமையும் மிக்க வேந்தே, தீயோர் சொற்கேளாது, உழவுத்தொழிலாளரின் வரிச் சுமையைக் குறைத்து, மக்களை ஓம்பினால் நிச்சயம் பகைவர்கூட அடங்கி நடப்பார்கள்' என அப்புலவா் அரசனை வேண்டுவதும் நோக்கத்தக்கது. மேலும் அரசர்களுக்கும் புலவர்களுக்கும் மிக நெருங்கிய நட்பும் உறவும் பேணப்பட்டன என்பதற்குக் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து மாண்டான் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் அவரது உற்ற நண்பரான பிசிராந்தையாரும் வடக்கிருந்து அவர் பொருட்டு உயிர் நீத்த செய்தியும் நெஞ்சைத் தொடுகிறன்றது.(புறம்:14 -253)

சங்க காலத்தில் ஐவகை நில அடிப்படையில் முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை ஆகிய தெய்வங்கள் பற்றிய தகவல்களும், சிவன் முழுமுதற் கடவுளாகச் குறிப்பிடப்படும் செய்யுள்களும் காணப்படுகின்றன. இயற்கையை நம்பி இயற்கையோடு வாழ்ந்த மக்களுக்கு சமய நெறிகளைப் போதிக்க வேண்டிய தேவை அக்காலப் புலவருக்கு இருக்கவில்லை. அதனாலேயே சங்கப் புலவர்கள் மதம் சார்ந்த பாடலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திலர். இதேபோன்ற நிலைப்பாடுதான் கிரேக்க நாட்டில் வாழ்ந்த புலவர்களுக்கும் இருந்தது என்பதைத் தனிநாயக அடிகள் சுட்டிக்காட்டுவா். இரு நாடுகளிலும் புலவர்களே மக்களுக்கு நன்னெறியைப் புகட்டினா் என்பதை அடிகள் அழுத்தமாகக் குறிப்பிடுகிறார். ஆயினும், சங்கப் புலவர் மக்களுக்கு மிக எளிதில் விளங்கத் தக்கவகையில் சமயரீதியான அறிவுரைகளைப் பல்வேறு பாடல்களிற் குறிப்பிட்டுள்ளனர்.

அ) "இம்மைச் செய்தது மறுமைக்காம் எனும்...." ( புறம் 134:1)

ஆ) "மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே.. " (புறம். 165:1-2)

இ) "உண்டா லம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதென
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ அஞுசிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலார் அயர்விலர்.." (புறம்: 182: 1-6)

சங்க காலப் புலவர்கள் எவ்வாறு அறத்தை மற்றும் விதி சார்ந்த கோட்பாட்டை மக்களுக்குப் போதித்தனர் என்பதற்குப் புறநானூற்றிலிருந்து சில பாடல் வரிகள் மேலே சான்றாகக் காட்டப்பட்டுள்ளன. பல்லவர் காலத்துப் பக்திப் பாடல்களிற் கடவுளின் திருவுருவ வருணனை மற்றும் அவரது அருட்செயல்கள் என்பன விரிவாகப் பாடப்பட்டமை போன்று சங்கப் புலவர் பெரிதும் பாடவும் இல்லை; அவற்றுக்குப் பிந்திய காலத்துத் திருக்குறள், நாலடியார் போன்று அறக் கருத்துக்களை மக்களுக்குச் சங்கச் சான்றோர் திணிக்கவும் இல்லை. அவ்வப்போது வாழ்வியல் பற்றிப் பாடும்போது மட்டுமே அறநிலை வாழ்க்கை பற்றிக் குறிப்பிடும் புலமைத்திறனே காணப்படுகிறது.

சங்ககாலப் புலவர்களில் ஔவையார் தனியிடம் பெறுகின்றார். அவர் அரண்மனைகளில் செல்வாக்குப் பெற்றவர்; அரசர்களுடனும் குறுநில மன்னர்களுடனும் நட்புறவு கொண்டாடியவர். அவர் தமிழ்ச் சமூகத்தின் ஆற்றல் மிக்க கல்வியாளராகவும் திகழ்ந்தார். தமிழ் நாட்டில் கல்வியும் கவிதையும் ஒரு தனி வகுப்பினருக்கோ, குறிப்பிட்ட தொழில்சார் மக்களுக்கோ மட்டும் சொந்தமல்ல என்பதை சங்ககாலப் புலவர்களது பெயர்களும்ஈ அவர்களது தொழில்களும் நிரூபிக்கினறன. எல்லோரும் தங்கள் அறிவையும் சிந்தனையையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவமாகச் செய்யளைக் கையாண்டனர். புலவர், பாணர், அரசர், குறுநில மன்னர் ஆகியோர் அடிக்கடி சந்தித்து, தமிழ் நாட்டில் பண்பாடு, மொழி, இலக்கிய ஒருமைப்பாடு என்பவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டுள்ளனர்.

சங்கப் புலவர்கள் பாடிப் பரிசில் பெறும் வாழ்க்கையை மேற்கொண்டிருந்தாலும், சமுதாயத்தில் உயர்மதிப்புப் பெற்றிருந்தனர். அரசர்கள், வள்ளல்கள் என்போர் புலவருக்குரிய மதிப்பையும் பரிசுகளையம் உரிய வேளைகளில் கொடுக்காதுவிட்டால், புலவர்கள் அவர்களைக் கடிந்து கொள்ளும் அளவுக்குப் புலமையும் சமூக அங்கீகாரமும் பெற்றிருந்தனர் என்பதற்கு " இரவலர் புரவலை நீயும் அல்லை
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்..." (புறம்: 162) என்ற பாடல் சான்றாகும். அதில் **பெருஞ்சித்தனார்** என்ற புலவர் **இளவெளிமான்** என்னும் அரசனிடம் பாடிப் பரிசில் பெறச் செல்கிறார். அரசனோ, புலவரை உரியவாறு மதித்துப் பரிசில் வழங்கவில்லை. அதனால் சீற்றம் கொண்ட புலவர் இன்னொரு அரசனை நாடினார். அம்மன்னன் பெரும் பொருட்களுடன் யானையும் பரிசிலாக வழங்கினான். அவற்றை அப்படியே கொண்டுவந்து, தன்னை அவமதித்த இளவெளிமானின் காவல் மரத்தடியில் வைத்து விட்டு யானையையும் காவல் மரத்தில் கட்டிச் சென்றார். இது அரசனை அவமதிக்கும் செயலாகும். இதுபோன்றே **ஔவை**யாருக்கும் ஒரு சந்தர்ப்பம் நேரிட்டது. ஔவையார் ஒரு நாள் **அதியமான் நெடுமானஞ்சி**யிடம் பரிசில் பெறச் சென்றார். ஔவையார் மீதுள்ள மதிப்பும், அன்பும் காரணமாக மன்னன் அவரைத் தன் மாளிகையில் சில நாட்கள் தங்கவைக்க நினைத்து பரிசில் வழங்கக் காலம் தாழ்த்தினான். ஆனால் தன்னை உடனே அரசன் கௌரவிக்காதபடியால் ஆத்திரங்கொண்ட ஔவையார், அரச வாயிற்காப்போனை விளித்துப் பாடிய பாடலின் ஈற்று வரியிகளில், " கடுமான் தோன்றல் நெடுமானஞ்சி
தன்னறி யலன்கொல் என்னறி யலன்கொல்...." (புறம்: 206) எனப் பாடியிருத்தல் சிந்தனைக்கரியதாகும்.

இவ்வாறாகச் சங்க காலப் புலவர்கள் தம் கல்வித் திறத்தாலும், புலமை ஆளுமையாலும் அரசருக்கும் கட்டுப்படாத வல்லமையுடன் வாழ்ந்தனர் என்பது புலப்படுகின்றது. மேலும் சங்கப் புலவர்களது வாய்ச்சொல் நன்மையும் தீமையும் பலிப்பதாகவும் அமைந்திருந்தமை கவனிக்கத்தக்கது.

> ''புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
> வலவன் ஏவா வான ஊர்தி எய்துப...'' ( புறம்: 27: 7-9).

புலவரால் புகழ்ந்து பாடப்படுவோர் விண்ணுலக நல்வாழ்வு பெறுவர் என்று புலவர் பாடுதையும் நோக்கலாம். சங்கப் புலவர்களின் ஆற்றல்களை நன்கு உணர்ந்துகொண்ட தனிநாயக அடிகள், சங்கப் புலவர்களை எபிரேய நாட்டுப் புலவர்களுடன் வருமாறு ஒப்பிடுகிறார். ''எபிரேய இறைவாக்கினர்கள் ஒழுக்கத்தையும் சமூக நீதியையும், உண்மையையும் நிலைநாட்டப் பெரிதும் பாடுபட்டார்கள். தமிழ் நாட்டுப் புலவர்களும் இத்தகைய பணிகளையே செய்து வந்தார்கள். சங்கப் புலவர்களான இறைவாக்கினர்களின் பணியானது தொடக்க காலத்து ஆற்றல் மிக்க குருக்களின் பணி எபிரேய நாட்டில் வளர்ச்சி அடைந்ததற்கு ஒப்பிடலாம். ஆற்றல் மிக்க குருக்களின் பணி தமிழ்ச் சமுதாயத்தில் புலவர்களின் பணியாக வளர்ச்சி அடைந்தது'' என அடிகள் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

குடும்ப வாழ்க்கையே ஒரு சமூகத்தை நிலைபெறச் செய்வதாகும் என்பதை அனைத்துப் பண்பாடுகளிலும் புலவர்கள் எடுத்துரைத்து வந்துள்ளனர். இதனையே திருவள்ளுவரும், 'மக்கட் பேறு' என்ற அதிகாரத்திற் குறிப்பிட்டார். சங்கப் புலவர்களும் இவ்வகையில் **பெற்றோரியம்** புகட்டும் ஆசிரியர்களாகக் காணப்படுகின்றனர். பாண்டியன் அறிவுடைநம்பி இதுதொடர்பாக மக்களுக்கு அறிவுறுத்தும் பாடல் எல்லோருக்கும் குழந்தைச் செல்வத்தின் மகிமையை எடுத்துரைப்பதாகும்:

> "படைப்புப் பலபடைத்துப் பலரோடுண்ணும்
> உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் ..........
> மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
> பயக்குறை இல்லைத் தாமவாழு நாளே". (புறம் : 188)

மனித வாழ்க்கையில் பிள்ளைச் செல்வத்தின் அருமையையும் தேவையையும் இப்பாடல் வலியுறுத்துதல் நோக்கத்தக்கது. சங்கப் பலுவர் பொன்மொழிகள் போன்று பல வரிகளைத் தம் பாடல்களில் தந்துள்ளனர். அவற்றட் சிலவற்றை இங்கு நோக்கலாம்:

(1) "இம்மைச் செய்தது மறுமைக்காம்.." (புறம்:134)

(2) "எவ்வழி நல்லவா் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே'' (பறம்: 187:3-4)

(3) "புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்.."(புறம் 182)

(4) "யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தரவாரா.." (புறம்:192)..

இவ்வாறாகச் சங்ககாலத்துப் புலவர்களின் சமூக நோக்கும், அவர்கள் எவ்வாறு மக்களுக்கும் மன்னருக்கும் பயன்படும் வகையில் தம் செய்யுள் திறன்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதும், உலக நோக்கும் மனித நேயமும் கொண்டு சங்கப் புலவர்கள் பாவியற்றியுள்ளமை படித்து இன்புறத் தக்கதாகும்.

# NATTUVANGAM - ART OF THE NATTUVANAR

*Dr. Mrs. Uma Anand,*
*Professor of Dance, Annamalai Canada Campus*



The art of Nattuvangam which forms an essential part of Bharathanatyam, traces its development in the temples. The temples utilized the services of accomplished singers, dancers and other musicians for the worship of the deity.

The Nattuvanar who accompanied the temple dancer was well versed in the art of music and dance, in the technique of composing dance and in the art of reciting theermanams. With the increasing trend among one and all to learn the art of Bharathanatyam, the art of Nattuvangam has become an essential part of the training in Bharathanatyam.

## WHAT IS NATTUVANGAM ?

It is the art of singing and at the same time playing the cymbals and thus conducting the whole dance. ( A dictionary of Bharathanatyam by U.S. Krishna Rao) Nattuvangam - a composite term for teaching the classical dance genre and conducting its performance (http: / www.hindu on net.co.in/folio)

Laya or sense of rhythm is an indispensable aspect of dance. The art of Nattuvangam plays a major role in imparting the knowledge of laya concepts like Talam, sorkattu etc.

## TECHNIQUES OF NATTUVANGAM

a) The technique of using the Tatttukazhi
b) The technique of using the Kai – talam (cymbals)

Both the techniques are different they have to be learnt and mastered separately. Day to day teaching is done with the Tattukazhi. Kai talams are used when the entire melam is present, that is, in a performance or rehearsals which precede a performance. Cymbals as an accompaniment to dance came into use from 5th century A.D. Both the instruments are used for keeping the rhythm of the songs and the Nritta or adavu passages.

The tattukazhi is a wooden stick about a foot long. The wood is that of the guava tree. This wood is firm and does not break easily. The palagai or manai is a wooden block approximately 12” by 4” to 6” with a thickness of about 4”. These are only approximate measurements. Depending on the need and desire of the Nattuvanar, the measurements vary. The surface of the wooden stick and block are smoothened and polished.

It is very essential that the hand be relaxed while playing the tattukazhi. There must be complete flexibility of the wrist and the hand must move briskly and swiftly. The striking of the kazhi must be clear and in tala. Every step that the dancer does with her feet must have a corresponding strike of the kazhi, for instance, if the dancer does dhi – dhi - tei, the kazhi will have to be struck three times, where the first strike indicates dhi, the second dhi and the third tei.

A kai talam or cymbal is a plate given a convex bend. There are innumerable varieties depending on the size and material from the midget manjira or jalra measuring 5 cms. to the bortal of Assam measuring 30 cms. These are made of bronze or brass. The concavity also varies from plate shaped to bell shaped instruments. The small variety of cymbals are known by various names like jalra, jhallari, kartal, talam, elatalaam, kuzhitalam. The larger cymbals are called jhanj, jhallari, bhrattalam, brahmatalam, bortal and so on. These instruments are used by singers, kathakalsahepam artists, devotional congregations, in Nadhaswaram concerts and by Nattuvanars. The ones used by Nattuvanars are different. They use a flat iron cymbal on the left hand and a bronze or brass one of smaller size on the right.

Merely striking the talams according to the footwork is not enough. The technique involves certain fixed patterns and ways of striking the two. There is the open strike technique and the closed strike technique. The flourishes and embellishments are added and given by the Nattuvanar once proficiency is achieved. The striking of the talam should be according to the mood of the song and force of the sorkattu. When the sorkattu is forceful, the talam should be loud and when the sorkattu is soft, the talam should also be struck soft. It should not overshadow or drown the song, thus spoiling the entire musical effect of the recital. A small difference can be observed as a result of training with different Gurus but the basics will be the same. The style of execution may be slightly different.

.





# கீழடி அகழ்வாய்வும் மதுரைக் காஞ்சியும்

முனைவர் செ. ஸ்ரீதாஸ்
விரிவுரையாளர், நிர்வாகப் பொறுப்பாளர்,
அண்ணாமலைக் கனடா வளாகம், ரொறன்ரோ.

மதுரைக்காஞ்சி. சங்க காலத்துத் தமிழர் வரலாறு கூறும் நெடும்பாடலாகும். தமிழ் நாட்டு வரலாற்றை, மதுரைக் காஞ்சி அளவுக்கு வேறு எந்தச் சங்க இலக்கியமும் இத்துணை சிறப்பாகக் கூறவில்லை எனலாம். மதுரை மாநகரின் அரசியல், சமூக, பொருளாதார நிலைகளை விரிவாக எடுத்துக் கூறும் இந்நூல், சங்ககால வரலாற்றை எழுத முயலும் ஆய்வாளர்களுக்கு அரிய ஆவணமாகத் திகழ்கிறது.

மதுரைக் காஞ்சி, நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னன், சேர, சோழர் ஆகிய இரு பேரரசர்களையும், ஐம்பெரும் குறுநில வேளிரையும் ஒருசேரத் தலையானங்கானம் என்னும் போர்க்களத்தில் வென்ற வரலாற்று முக்கியத்துவம் பெற்ற நிகழ்வைப் பாடுவதாக அமைந்த 782 அடிகளைக் கொண்ட நீண்ட பாடல். இப் போர் பற்றிய செய்தியைப் பிற்கால வரலாற்று ஆவணமான சின்னமனூர்ச் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப் போரின் முக்கியத்துவம் பிற சங்க இலக்கியங்களிலும் சிறப்பித்துக் கூறப்படுகிறது. இப் பெருவெற்றி காரணமாக இவன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் எனப் பெயர் பெற்றான். மதுரைக்காஞ்சி பாடியவர், நெடுஞ்செழியனது அவைப் புலவரான மாங்குடி மருதனார்.

மாங்குடி மருதன் தலைமை வகிக்கும் புலவர் அவையினால் பாடப்படுதலைத் தான் பெரிதும் விரும்புவதாகப் பாண்டியன் நெடுஞ்செழியனே புறநானூற்றுப் பாடல்[1] ஒன்றில் குறிப்பிட்டுள்ளான். அரசு உருவாகி நிலைபெற்றுப் பெருநிலப்பரப்பை மன்னர்கள் ஆளும் ஒரு காலப்பகுதியில் இந்நூல் எழுதப்பட்டிருக்கவேண்டும். நிலவுடைமைச் சமூகம் மன்னராட்சியாக மாறியநிலை இப் பாடல் வழி அறியப்படுகிறது. குறுநில மன்னர்கள் ஒடுக்கப்பட்டதையும் பேரரசு உருவாகியதையும் காணக்கூடியதாக உள்ளது. தலையாலங்கானம் என்பது திருவாதவூருக்கு அருகில் உள்ள ஒரு இடமாக அடையாளம் காட்டப்படுகிறது.

புலவர், பாண்டியன் நெடுஞ்செழியன் பற்றிய செய்திகள் மட்டுமல்லாது அவன் முன்னோர்களான முந்நீர் வடிவம்பல நின்ற பாண்டியன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, நிலந்தரு திருவில் பாண்டியன்[2] ஆகியோர் பற்றிய செய்திகளையும் பாடலின் இடையிடையே கூறி, அவனது குடிப்பெருமையையும் வரலாற்றுத் தொடர்பையும் ஆவணப்படுத்தியுள்ளார். பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிம்மையார் "எங்கோ வாழிய குடுமி ........நன்னீர்ப் ப∴றுளி மணலிலும் பலவே" என்று ப∴றுளி ஆற்று மணலின் தொகையிலும் மிக்க நீண்ட காலம் வாழ்வாயாக என்று வாழ்த்தியிருக்கிறார். எனவே **பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி குமரிக்கோடும் ப∴றுளியாறும் கடல் கொண்ட காலத்திற்கு முன் வாழ்ந்திருக்கிறான் எனக் கொள்ளலாம்.**

வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமைகளைக் கூறுவது **"மதுரைக் காஞ்சி". நில்லாதவற்றால் நிலையானதை அடையும் முயற்சியே காஞ்சித்திணை** என்பது தொல்காப்பியர் கருத்து எனலாம். இப் பாடல், நிலையாமையை வலியுறுத்த எழுந்ததாகக் கூறப்பட்டாலும் உலகின் அனைத்து இன்பங்களும் அழகுற எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. பாண்டியனது வீரம், வெற்றி, கொடை முதலாய சிறப்புக்களைப் பலவாகப் புகழ்ந்து, வாழ்த்திப் பின்னர், "இத்தகைய சிறப்புடைய உனக்கு, நான் கூறும் இவற்றிலும் மேலான செய்தியினால் உனது மயக்கம் தெளிந்து, **உலகம் முழுவதும் பரவித் திகழும் உன் புகழ் உலகுள்ளளவும் நின்று நிலைபெறுவதாக"** என்று வாழ்த்துவதாக அமைந்தது பாடல்.

"பருந்து பறக்கல்லாப் பார்வற் பாசறைப்
படுகண் முரசம் காலை இலம்ப
வெடிபடக் கடந்து வேண்டு புலத்து இறுத்த
பணைகெழு பெருந்திறல் பல்வேல் **மன்னர்**
**கரைபொருது இரங்கும் கனையிரு முந்நீர்த்**
**திரையிடு மணலினும் பலரே** உரைசெல
மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே" – மதுரைக் காஞ்சி:231-237

உயர்ந்த அரண்களையுடைய பாசறையில் பகைவர் படைகளை வெற்றி கொண்டு, மேலும் மேலும் வெற்றி வேண்டி வேற்றுப் புலங்களை நாடிச் சென்று பெருவெற்றி கொண்டு மாண்ட பெருவீரர்களான மன்னர்கள் எண்ணிக்கை கடற்கரை மணலிலும் அதிக அளவினதாகும். அவர்கள் தம் புகழ் பெருக, பெருநிலப்பரப்பை ஆண்டு **மக்களுக்குரிய மனிதாபிமான உணர்வற்றவர்களாக இருந்தமையால் பிறப்பு அற முயலாமல் மாண்டு ஒழிந்தவர்களே என்று வீரம், வெற்றி இவை யாவும் நிலையற்றவை, பாராண்ட மன்னரும் ஈற்றில் பிடிசாம்பல் ஆவர் என்னும் உலக நிலையாமைத் தத்துவத்தை பாண்டியனுக்கு எடுத்துக் கூறுவதாக அமைந்தது இப் பாடல்.** நிலையற்ற இவ்வுலகப் புகழ் நாடி வீட்டுலகிற்குச் செல்வதற்காகச் செய்யவேண்டியவற்றைச் செய்யத் தவறாதே என்று அவனுக்கு அறிவுறுத்துவதாக அமைந்துள்ளது.

நிலையாமையை உணர்த்தப் பாடப்பட்டதாக அறியப்பட்டாலும் புலவர், பாண்டியன் ஆட்சிக்கு உட்பட்ட அனைத்துத் துறைகளையும் அவை சார்ந்த செய்திகளையும் தொட்டுச் செல்வதனால் இப் பாடல் வரலாற்றுத் தகவல்கள் மிக்கதாகக் காணப்படுகிறது. பாண்டியன் நெடுஞ்செழியனின் வீரம், வெற்றி, கொடை, ஆட்சித்திறம், உண்மை, நீதி என்பவற்றுடன் அவன் ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளின் வளங்கள் பற்றியும் வணிகம், விவசாயம், தொழில் ஆகிய வாழ்வாதாரங்கள் பற்றியும் அவற்றை ஈட்டுவதற்கான வளங்களைப் பெருக்கும் வகைகள் பற்றியும் கூறிச் செல்லும் இந்நூலில், 'காஞ்சி' என்னும் பதம் **நீண்ட நிலைபேற்றிற்குரிய அடிப்படையில்** தான் கொண்டு செல்லப்படுகிறது. பத்துப்பாட்டு வெண்பா இதனை "**பெருகு வள மதுரைக் காஞ்சி**" என்கிறது.

ஏறக்குறைய 2300 ஆண்டுகளுக்கு முன் மதுரை இப்படித்தான் இருந்திருக்கும் என்பதை எமது மனக்கண் முன் நிறுத்தி, ஒரே நாளில், காலை முதல் மாலை வரை மதுரையைச் சுற்றிப் பார்க்கும் ஓர் அனுபவத்தின் மூலமாக எமக்குத் தருகிறார் ஆசிரியர். 346 ஆம் அடி முதலாக 699 ஆம் அடி ஈறாக 354 அடிகளில் அதிகாலை முதல் அடுத்த நாள் காலை வரையிலுமான காலப்பகுதியில் மதுரை மாநகரில் நடைபெறும் நிகழ்வுகளைக் கோர்வையாக எடுத்து வருகிறார்.

மதுரை மாநகரமும் அதனைச் சூழவுள்ள நிலப்பரப்பின் வளமும் சிறப்புறப் பாடப்பட்டிருக்கிறது. பாண்டியன் ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பு ஐவகை நிலங்களையும் உள்ளடக்கியதாக இருந்தது. முதலில், மருத நிலச் செழிப்பும், "தளி மழை பொழியும் தண்பரங் குன்றில் கல்கொள் சும்மை ஒலிகொள் ஆயம்" எனத் திருப்பரங்குன்றத்தின் திருவிழா ஓசையும், "மீன்சீவும் பாண்சேரி" எனப் பாண்சேரியில் பாணர்களின் பாடல் ஆடலுடன் கூடிய ஓசையும் என மருத நிலம் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கூடியதாகக் காணப்படுகின்றது. அவ்வாறே முல்லை, குறிஞ்சி, பாலை ஆகிய நிலங்களின் தன்மை பாடப்படுகின்றது. நெய்தல் நிலத்தில் பாண்டியரின் கடல் வாணிபம் சிறப்புறப் பாடப்படுகிறது.

"**முழங்குகடல் தந்த விளங்கு விளங்குகதிர் முத்தம்**
**அரம்போழ்ந்து அறுத்த கண்ணேர் இலங்குவளை**
**பரதர் தந்த பல்வேறு கூலம்**" – மதுரைக் காஞ்சி 315-317

கொற்கைத் துறைமுகத்தில் முத்துக் குளிக்கும் தொழில் நடைபெற்றிருக்கிறது என்று இப்பாடல் மூலம் கொள்ளக் கிடக்கிறது. யவனம் முதலாய நாடுகளிலிருந்து வணிகத்தின் பொருட்டு, பாண்டி நாட்டுத் துறைமுகத்தை வந்தடைந்த நாவாய்கள், பாண்டி நாட்டின் முத்து, சங்குவளை முதலாய விலைமதிப்பற்ற பொருட்களுடன் தீம்புளி, உப்பு, கருவாடு முதலியவற்றையும் ஏற்றி, அவற்றிற்கு ஈடாகத் தமது நாட்டிலிருந்து கொண்டு வந்த குதிரை முதலியவற்றை கொடுத்துச் செல்லும்

வாணிபம் நாளுக்கு நாள் அதிகரித்து வந்திருக்கிறது. **இப் பாடற்பகுதி கடல் வாணிபம் சிறப்பாக நடைபெற்றமையைக் காட்டுகிறது.**

"விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்
நனந்தலைத் தேஎத்து நன்கலன் உய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவியொடு அனைத்தும்
வைகல் தோறும் வழிவழிச் சிறப்ப
நெய்தல் சான்று வளம்பல பயின்றாங்கு" - மதுரைக் காஞ்சி 321-325

இவ்வாறே ஐநிலங்களும் பாண்டியன் எல்லைக்குள் விளங்கியமையால் பாண்டியனுக்குப் **"பஞ்சவன்"** என்னும் பெயர் உண்டாயிற்று என்று கூறப்படுகிறது. மாங்குடி மருதனார், மதுரை மாநகரின் அழகிய காட்சிகளைக் காண எம்மை அழைத்துச் செல்கிறார். வைகைப் பேரியாற்றின் துறைகளையும், பெரும்பாணர் வாழிடங்களையும், புற மதிலின் வெளியே அமைக்கப்பட்ட, பகைவர் அணுக முடியாத ஆழ்ந்த அகழிகளையும் வானுற உயர்ந்த மதில்களையும் திண்ணிய மதிற் கதவுகளையும் கதவுகளை அடுத்து உயர்ந்த வாயில் மாடங்களையும் இடையறாது வருவாரும் போவாருமாக விளங்கும் தன்மையால் வையை ஆறு போன்ற வாயிலையும் கடந்து மதுரை மாநகரினுள் நுழைகிறோம்.

"ஆறு கிடந்தன்ன அகல் நெடுந் தெருவின்"[1] இருமருங்கிலும் அமைந்திருந்த கடைகளில் கொள்வோரும் கொடுப்போருமாகிய பல்வேறு மொழி பேசுபவர்களது ஒலியும் திருவிழாவை அறிவிக்கும் முழவு ஓசைகளும் கோயில்களில் விழா எடுத்து உயர்த்திய கொடிகளும் மன்னனது வெற்றியை அறிவிக்கும் வெற்றிக் கொடிகளும் என்று இவ்வாறு மதுரை மாநகரம் தினமும் எக்காலத்திலும் விழாக்கோலம் பூண்டு விளங்கியது எனக் கொள்ளவேண்டியுள்ளது.

கடைத் தெருக்கள் இருவகையின, ஒன்று நாளங்காடி (பகல் நேரத்தில் வியாபாரம் செய்யும் கடைகள்) மற்றொன்று, அல்லங்காடி (இரவு நேரத்தில் வியாபாரம் செய்யும் கடைகள்). அல்லங்காடி பற்றிக் கூறுமிடத்து, நீண்ட அத் தெருக்களில் அமைக்கப்பட்டிருந்த அறங் கூறு அவையத்தையும் தொடர்ந்து அந்தணர், தூதுவர், ஒற்றர் பற்றியும் "நாற்பெருங்குழு", "ஐம்பெருங்குழு" என்னும் பிளவுகளைத் தீர்த்து வைக்கும் அமைப்புக்கள் பற்றியும் கூறப்படுகின்றது. "அறநெறி பிழையாது ஆற்றின் ஒழுகி" வணிகம் செய்யும் வணிகர், தட்டில் பொருட்களை ஏந்தி விற்பனை செய்யும் முதுமகளிர் ஆகியோர் பற்றியும், மதுரை மக்களின் பொழுது போக்குகள், மாலைக்கால மங்கையர் ஒழுக்கம், பரத்தையா இயல்பு, இரவு நேரக் கள்வர்கள், காவலர்கள் என்று பலவகையான மக்கள் பற்றியும் கூறப்படுகிறது. இரவிலும் பகலிலும் திறந்து வைக்கப்பட்டிருக்கும் கடைகளும் வெளிநாட்டு வணிகரும் உள்ளூர் வியாபாரிகளும் என்று "நான்மாடக்கூடல்" என்று அழைக்கப்படும் மதுரை, "தூங்கா நகரமாக" காட்சியளிக்கின்றது.

பௌத்த சமணப் பள்ளிகள், சிவன் கோவில்கள் என்று பல மதங்களும் வேற்றுமையின்றி வாழ்ந்ததாக அறியப்படுகிறது. மதுரைக் காஞ்சி, **திருப்பரங்குன்ற விழா,** மன்னன் பிறந்தநாள் விழா, அந்திவிழா என்று பல்வேறு விழாக்களையும் கூறுகிறது. வறியவர்களுக்கு உணவு வழங்க **அறக்கூழ்ச்சாலை** இருந்தது பற்றியும் கூறுகிறது. இவ் வழக்கம் தொடர்ந்தும் இருந்து வந்திருக்கின்றமை, மதுரை நகரைச் சுற்றியுள்ள பழைய சத்திரங்கள் வாயிலாக அறியக் கிடக்கிறது.

மதுரை பாண்டியர்களின் தலைநகராக கி. மு. 6 ஆம் நூற்றாண்டின் முன்பிருந்தே இருந்திருக்கிறது. உலகின் மிகப் பழமையான நகரங்களில் மதுரையும் ஒன்றாகக் கருதப்படுகிறது. **ஆதியிலிருந்து மதுரை தொழில் துறை மையமாகவும், கல்வி மையமாகவும் விளங்கியிருக்கிறது.** மருத மரங்கள் மிகுதியாக இருந்ததால் மதுரை என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்றும் மருதத் துறை என்பது மருவி மதுரை என்றாகியிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

---

[1] மதுரைக் காஞ்சி – 359.

''திருமருத முன்றுறை'' என்னும் பரிபாடல் (7: 83) அடிகளும், ''வையைத் திருமருத முன்றுறை'' என்னும் பரிபாடல் (22: 45) அடிகளும் இவை போன்ற வேறும் பல இலக்கியச் சான்றுகளும் இக் கருத்தை உறுதி செய்கின்றன. சங்க இலக்கியங்களில் ''கூடல்'', ''நான்மாடக் கூடல்'' என்னும் பெயாகள் மதுரையைக் குறிக்க வழக்கிலிருந்து வந்திருக்கின்றன. ''கூடல்'' என்பது மதுரையில் இருந்த மூன்று தமிழ்ச் சங்கங்களையும் ''நான்மாடக்கூடல்'' என்பது மதுரையைச் சூழ்ந்துள்ள நான்கு கோயில் கோபுரங்களையும் குறிக்கிறது.

இக் கட்டுரையின் தேவைக்காக மதுரைக்காஞ்சியிலிருந்து பெறப்படும் தகவல்கள் சிலவற்றைத் தொகுத்துக் கொள்ளலாம்.

1. பாண்டிய மன்னர்கள், **கி. மு. 6 ஆம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே மதுரையைத் தலைநகராகக் கொண்டு நீண்ட வைகைக் கரையோரத்தில் மிகப் பெரியதொரு அரசை அமைத்து பல நூற்றாண்டுகளாக ஆட்சி செய்திருக்கிறார்கள்.**

2. பாண்டிய மன்னர்கள், தமது அரசை நிலைநாட்டிக் கொள்வதற்காக நீண்ட பெரும் போர்களை எதிர் கொண்டிருக்கிறார்கள். அதனால், **உயர்ந்த மதில்கள், ஆழ்ந்த அகழிகள், மாளிகைகள், மாடங்கள் கொண்ட திட்டமிடப்பட்ட நகரங்களை வைகை நதிக்கரையில் அமைத்திருக்கிறார்கள்.**

3. ஆதியிலிருந்து மதுரை, **தொழில் துறை மையமாகவும், கல்வி மையமாகவும்** விளங்கியிருக்கிறது. **கொற்கைத் துறைமுகத்தில் முத்துக் குளிக்கும் தொழில் நடைபெற்றிருக்கிறது.**

4. பாண்டிய மன்னர்கள் **கடல்கடந்த நாடுகளுடன் வாணிபம்** செய்திருக்கிறார்கள். யவனர் முதலாய வணிகர், பாண்டி நாட்டின் முத்து, சங்குவளை, தீம்புளி, உப்பு, கருவாடு முதலியவற்றை ஏற்றி, அவற்றிற்கு ஈடாகக் குதிரை முதலியவற்றை இறக்கிச் சென்றுள்ளனர்.

5. இறந்த உடலைத் **தாழியில் வைத்துப் புதைக்கும் வழக்கம்** இவர்களிடையே இருந்திருக்கிறது.

**கீழடித் தொல்லியல் ஆய்வு:**

**இந்தப் பின்னணியில் கீழடி என்னும் கிராமத்தில் நடைபெற்ற புதைபொருள் ஆய்வினைக் காணலாம்.** கீழ்க் காணும் தகவல்கள், கீழடி ஆய்வுக்குத் தலைமை தாங்கிய **திரு. அமர்நாத் இராமகிருஷ்ணன்** அவர்களாலும் வேறும் பல அகழ்வாய்வாளர்களாலும் வெளியிடப்பட்ட தகவல்களிலிருந்து தொகுத்துத் தரப்படுகிறது.

இவ்வாய்வு, இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தினால் நடாத்தப்பட்டது. வைகை ஆற்றின் நீளம் 250 கி.மீ. இந்த ஆற்றின் இருகரையையும் உள்ளடக்கிய 8 கி.மீ பரப்பளவு பகுதி, இவ்வாய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டது. இக் கணிப்பு ஏறக்குறைய 500 கிராமங்களை உள்ளடக்கியிருந்தது. 293 இடங்களிலிருந்து **ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்கு முன் வைகை நதிக்கரையில் நிலவிய நாகரீகத்தின் எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.**

தொல்லியல் துணை அகழ்வாராய்ச்சியாளர் வீரராகவன் அவர்கள், ''தென் தமிழகத்தின் முக்கிய நீராதாரமாக விளங்கும் வைகை நதி, மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரில் வெள்ளிமலை அருகிலிருந்து உற்பத்தியாகி தேனி, மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் வழியே பாய்கிறது. தொல்லியல் வளமிக்க பகுதியாக விளங்கினாலும் கூட இதுகாறும் வைகை நதிப் பள்ளத்தாக்குப் பகுதியில் அகழ்வாய்வு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. 2013-14 ல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில் சுமார் 293 பல்வகைத் தொல்லியல் எச்சங்கள் கொண்ட ஊர்கள் வைகை நதிப் பள்ளத்தாக்குப் பதுதியில் அடையாளம் காணப்பட்டன. அவற்றுள் கீழடி தொல்லியல் அகழ்வாய்விற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது. **இவ்வூர் மதுரையிலிருந்து 12 கி.மீ. தொலைவில், தென்கிழக்குத் திசையில் இராமேஸ்வரம் செல்லும் பண்டைய வணிகப் பாதையில் வைகை நதியின் தென்கரையில் அமைந்துள்ளது''** என்றார்.

இந்த 293 இடங்களை மேலும் வடிகட்டி 90 இடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இலக்கியங்கள் கூறுகின்ற பெரும் மாட மாளிகைகளைக் கொண்டதொரு பண்டைய தமிழர்

பண்பாட்டுச் சிறப்பை வெளிப்படுத்தத் தக்கதொரு துணைச்சான்று கிடைக்காத காரணத்தால் சங்க இலக்கியங்கள் வெறும் கற்பனையாகவே கருதப்பட்டு வந்திருக்கிறன. இன்று அவை யாவும் கற்பனையல்ல என்பது உலகிற்கு வெளியாகியிருக்கிறது. **அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட அரிக்கமேடும் காவிரிப்பூம்பட்டினமும் இத்தகைய பெரும் பலனைத் தரவில்லை. ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு தமிழரின் நாகரீகத்தைப் பற்றிய ஒரு கணிப்பிற்கு வழிவகுத்ததே தவிர மக்கள் குடியிருப்பு ஒன்றினைக் காட்டவில்லை.**

காவிரிக்கரைப் பகுதியில் தொடர்ந்து மக்கள் குடியிருப்புக்கள் இருந்து வந்தமையால் கட்டிடங்கள் கட்டுவதற்காக நிலத்தின் கீழ்ப் பகுதி தோண்டப்பட்டதனால் நிலத்தின் கீழிருந்த பல நகரங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. தற்போதைய கீழடி ஊரிலிருந்து கிழக்கே ஒரு கிலோமீட்டர் தொலைவில் **பள்ளிச்சந்தைத் திடல்** என்னும் தொல்லியல் மேடொன்று உள்ளது. தரையிலிருந்து சுமார் இரண்டரை மீட்டர் உயர்ந்து காணப்படும் இம்மேடு தற்பொழுது தென்னந்தோப்பாகப் பயன்பாட்டில் உள்ளது. இத்திடல் மக்கள் குடியிருப்பாகப் பெரும்பாலும் பயன்பாட்டில் இருந்திராத காரணத்தால் நிலத்தின் அடிமட்டத்தில் புதைந்து போன நகரம் பாதிக்கப்படாமல் இருந்திருக்கிறது.

**கட்டிடங்கள்:** இங்கு பெருமளவிலான **சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட கட்டிடப் பகுதிகள், பெரிய கூரை ஓடுகள் கண்டெடுக்கப் பட்டிருக்கின்றன. மேற்கூரைகள் ஓடுகளால்** வேயப்பட்டிருக்கலாம் என்று அனுமானிக்கப்படுகிறது. வீடுகள் தோறும் **குளியல் அறைகள்** இருந்திருக்கின்றன. **பரிபாடல், மதுரைக்காஞ்சி முதலிய சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் பல தொல் பொருட்கள் முத்து மணிகள், கண்ணாடி மற்றும் பல வகையான கல்மணிகள், சங்கு வளைகள், சுடுமண் பொம்மைகள், அம்மி, குழவி, இரும்பு, செப்புப் பொருட்கள் முதலியன** கிடைக்கப் பெற்றுள்ளன.

**ஈமக்காடு:** இம்மேட்டின் கிழக்கே, சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் கொந்தகை என்ற ஊருக்குச் செல்லும் பாதையில் இதனோடு தொடர்புடைய ஈமக்காடும் அமைந்துள்ளது. இங்கு **பல ஈமத் தாளிகள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன.**



**ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு, அங்கு கண்டெடுக்கப்பட்ட ஈமத் தாளிகள், எலும்புக்கூடுகள், எலும்புக்கூடுகளின் காலம் குறித்த தகவல்கள் இங்கு நினைவு கூரத்தக்கவை.** ஆதிச்சநல்லூரில் கிடைத்த எலும்புக்கூடுகளின் காலம் சுமார் 3800 ஆண்டு தொன்மையானது என்று அறியப்படுகிறது.[1]

**உறைகிணறுகள்:** மணல் பாங்கான நிலத்தில் கிணற்றில் மண்சரிவு ஏற்படாது காப்பதற்காகச் **சுட்டமண்ணால் சுவர்கள்** அமைக்கப்பட்டிருக்கும். இவற்றை உறைகிணறு என்பார்கள். உறைகிணறு பற்றிப் பட்டினப்பாலை கூறுகிறது. இப்படியான கிணறுகளை நகர்ப்புறங்களில் தான் பயன்படுத்துவார்கள். இக் கிணறுகளின் பயன்பாடு மக்கள் வாழ்வை இலகுவாக்கி, நேரத்தை மீதப்படுத்துகிறது. நாகரீக வளர்ச்சியின் அறிகுறியாக இது விளங்குகிறது. இக் கிணறுகள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட வீடுகளின் அருகே அமைக்கப்பட்டிருக்கின்றன.

[1] ARCHAEO NEWS Januay 01, 2006, http://www.stonepages.com/news/archives/001675.html

கிணறுகள் சிறிய அளவிலான **தொழிற்பாடுகளுக்கும்** பயன்படுத்தப்பட்டிருக்கலாம். பெரும் சுவர்களும் பெரிய கற்களாலான தளங்களும் காணப்படுகின்றன.

**சுடுமண் குழாய், கழிவுநீர் வடிகால்கள்:** நீர் வழங்குவதும் கழிவு நீர் அகற்றுவதும் நாகரீக வளர்ச்சியின் முக்கிய மைல் கற்களாகக் கருதப்படுகின்றன. மிகவும் **சிக்கலான வடிகால்கள் சுட்ட மண் குழாய்கள்** (complex drainage systems with terracotta pipes) மூலம் இவை அமைக்கப்பட்டு இருக்கின்றன.

**தமிழ்பிராமி எழுத்துக்கள்:** இப் பகுதியில் மட்டும் சுமார் ஒரு டன் அளவு கருப்பு, சிவப்பு மட்கல ஓடுகள் கிடைத்துள்ளன. பல ஓடுகளில் **தமிழ்பிராமி எழுத்துக்கள்** பொறிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 74 தமிழ் பிராமி கல்வெட்டுக்கள் (Inscriptions) கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை யாவும் கி. மு. 200 ஆம் ஆண்டளவில் பாவனையில் இருந்த எழுத்துக்களை ஒத்தவையாகக் காணப்படுகின்றன. "ஆதன்", "உதிரன்", "திசன்" போன்ற தனிமனிதரின் பெயர்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகளும் கிடைத்திருக்கின்றன. **அரசர்களால் வெளியிடப்பட்ட சாசனங்கள் யாவும் கற்களில் பொறிக்கப்பட்டிருக்க, இங்கு கண்டெடுக்கப்பட்டவை பானைகளில் எழுதப் பட்டிருப்பது பொது மக்களின் கல்வி அறிவைக் காட்டுகிறது.**

**நெசவுத் தொழிற்சாலைகள்:** இங்கு **நெசவு செய்யக்கூடிய தொழில்நுட்பங்கள்** இருந்ததற்கான தடயங்கள் உள்ளன. சாயப் பட்டறைகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. சாயம்போட்ட வண்ணத்துணிகள் செய்யப்பட்டதற்கான தடயங்கள் கிடைத்திருக்கின்றன. இரும்பு அம்பு முனைகள், எழுத்தாணி, சுடுமண் முத்திரைக் கட்டைகள், தந்தத்தாலான தாயக்கட்டைகள் உள்ளிட்ட பல அரிய பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**வெளிநாட்டு வணிகம்: உரோமப் பேரரசுடன் கொண்ட வணிகத் தொடர்பை உறுதிப்படுத்தும்** ரௌலட் (rouletted), அரிட்டைன் (arretine), வகை மட்பாண்டங்களும் கிடைத்துள்ளன. இவை அக்கால மக்களின் வணிபத் தொடர்பைக் காட்டுகின்றன.



தமிழர் பண்பாடு ஏட்டளவிலேயே தங்கிப் போனது என்று குறை கூறுவோருக்கும் அலுத்துக் கொள்வோருக்கும் விடையாக அமைகிறது கீழடியில் கண்டறியப்பட்ட பண்டைய நகரம். தொடர்ந்து நடைபெறவிருக்கும் ஆய்வு, தமிழர் தொன்மை, தமிழர் நாகரீகத்தின் சிறப்பு முதலியவற்றை உலகிற்கு எடுத்துவரும். **அத்தகைய சிறப்புக்களை எம்மவருக்கும் உலகுக்கும் எடுத்துச் செல்லவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.**

## அண்ணாமலைக் கனடா வளாகம்,
## அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்

நடப்பாண்டு **2016/ 2017**

தர அடிப்படையிலான (GLE)

பரதநாட்டியம், வாய்ப்பாடு, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல்

முதலிய நுண்கலைகளுக்கான

தரம் 1 முதல் 7 வரையிலான தேர்வுகளுக்கு

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**விண்ணப்ப இறுதி நாள் மார்ச்சு 31, 2018**

பரீட்சை ஆகஸ்டு 2018 இல் நடைபெறும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் தர அடிப்படையிலான தேர்வில் அல்லது அதற்கு இணையானதொரு தேர்வில்

1. தரம் 4 இல் சித்தி பெற்ற மாணவர் ஒருவர்,
2. பாடசாலைக் கல்வியில் 8 ஆம் ஆண்டை நிறைவு செய்திருந்தால்,
3. நான்காண்டு நாட்டியக்கலைமணி அல்லது இசைக்கலைமணிக் கல்வித் திட்டத்தில் இரண்டாமாண்டிற்கு நேரடியாக அனுமதிக்கப்படுவார்.

1. தரம் 6 இல் சித்தி பெற்ற மாணவர் ஒருவர்,
2. பாடசாலைக் கல்வியில் 8 ஆம் ஆண்டை நிறைவு செய்திருந்தால்,
3. நான்காண்டு நாட்டியக்கலைமணி அல்லது இசைக்கலைமணிக் கல்வித் திட்டத்தில் மூன்றாமாண்டிற்கு நேரடியாக அனுமதிக்கப்படுவார்.

1. தரம் 6 இல் சித்தி பெற்ற மாணவர் ஒருவர்,
2. பாடசாலைக் கல்வியில் 12 ஆம் ஆண்டை நிறைவு செய்திருந்தால்,
3. மூன்றாண்டு நாட்டிய/ இசை இளங்கலைக் கல்வித் திட்டத்தில் இரண்டாமாண்டிற்கு நேரடியாக அனுமதிக்கப்படுவார்.

மேலதிக விபரங்களுக்கு: கனடா அண்ணாமலை வளாகச் செயலகம்
101 – 1240 எலிஸ்மியர் வீதி, ஸ்காபரோ
தொலைபேசி: 416-777-2822
கையடக்கத் தொலைபேசி: 647-881-3613

# அண்ணாமலைக் கனடா வளாகம்,

சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன்

இணைந்து நடாத்தும் தொலைதூரக் கல்வித் திட்டங்கள்

## கல்வி ஆண்டு 2017/ 2018

தமிழ், யோகா, பரதநாட்டியம், வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம்

முதலிய துறைகளில்,

டிப்ளோமா, **BA, MA** படிப்புகளுக்கான

## விண்ணப்பங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப் படுகின்றன

தொலை தூரக் கல்வியாயினும், தமிழ் இளங்கலை, முதுகலை வகுப்புக்கள் நவம்பர் 1, 2017 தொடங்கி ஜுலை 31, 2018 வரை தொடர்ந்து முழுநேரமாகக் கற்பிக்கப் படுகின்றன.

யோகா **Diploma**, **PG Diploma, MSc** வகுப்புக்கள் அக்டோபர் முதலாம் திகதி தொடங்குகின்றன

நடனம், இசை முதலிய கலைப் பிரிவிற்கான வகுப்புக்கள் July 1 முதல் m August 31 வரையிலான கோடை விடுமுறைக் காலங்களில் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களால் நடாத்தப்படும்.

தரம் 5 முதல் 12 வரையிலான மாணவர்களுக்கு, தமிழ் வகுப்புக்கள் அண்ணாமலைக் கனடா வளாகத் துறைசால் ஆசிரியர்களால் நடாத்தப்படுகின்றன.

தர அடிப்படையிலான இசை, பரதநாட்டியப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களை எம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்

தமிழையும் கலை பண்பாட்டையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லத்தக்க ஒரு தலைமுறையை உருவாக்கி அதற்குண்டான பாதையை அமைத்துக் கொடுப்பதே எம் குறிக்கோள். நம் குறிக்கோளைப் பின்பற்றி நல்லதொரு தமிழ் சமூகத்தை உருவாக்குவது உங்கள் கடமை. வாருங்கள் கரம்கோர்ப்போம். உழைப்போம் தமிழுக்காய்.

**மேலதிக விபரங்களுக்கு:** 1240 எலிஸ்மியர் வீதி, ஸ்காபரோவில் அமைந்துள்ள கனடா அண்ணாமலை வளாகச் செயலகத்தை நாடவும்.

தொலைபேசி: 416-777-2822 / 647-881-3613

# நந்தி நுண்கலைக்கூடம்

# NANTHY FINE ARTS



Sri Thilaiampalam Narendra

**416-371-0635**

nanthyfinearts@gmail.com

OUR LOCATIONS

## SCARBOROUGH

Morningside Ave & Morningview trail

## VAUGHAN

Weston Rd & Rutherford Rd

## NORTH YORK

Eglinton Ave & Victoria Park Ave

Keele St & Sheppard Ave W


647-378-3006
647-706-6123
தமிழ்ப்பூங்கா
THAMIL POONKA
905-479-5375
647-706-6124
Saba Arulsubramaniam M.A.
Founder / Chair
Yoga Arulsubramaniam M.Sc. Dip. in Montessori
Program Manager / Principal
Tamil Class
Teachers' Training
Tamil Reading Club
Youth Leadership -Session
Career Planning
Counseling
Yoga Class
Yoga Therapy
Art & Craft
Kids Music Class
Home Work Class
Spoken English
Referral to Settlement Services
www.thamilpoonka.org
3001 Markham Road # 21, Scarborough, ON (Markham & McNicoll)


WITH COURAGE AND FAITH
Annamalai University Canada Campus
DIPLOMA IN YOGA
Teachers Training Program
Registeration Now Open
Course start on October 1st 7 am -- 9 am (Every Sunday)
One Program, Many Benefits!
Program includes Theory & Practical
A multi-dimensional course that combines Postures, Breathing techniques, Meditation & Knowledge
PLUS get RYT hours in the same program!
Taught by
Jeyarajeen Sivalingam
M.Sc in Yoga, Over 17 Years Teaching Experience
Call now to book your seat!
416-777-2822/905-781-9796
www.annamalaicanada.com
1240 Ellesmere Rd. Suite 101 Scarborough ON. M1P 2X4

# சைவ மடங்களும் ஆதீனங்களும்

முனைவர் ந. முத்துக்குமாரன்,
விரிவுரையாளர், அண்ணாமலைக் கனடா வளாகம்



அறச்சாலை, மடம், குகை, ஆதீனம் ஆகிய சொற்கள் அனைத்தும் ஒரே பொருளைக் கொண்டவை. "மடம்" என்ற சொல் வழக்கு ஏற்படுமுன் "அறச்சாலை" என்று வழங்கியதாக வரலாறுகள் கூறுகின்றன. மடம், குகை என்று சமகாலத்தில் அழைக்கப்பட்டன. ஆதீனம் என்பது பிற்காலத்தில் ஏற்பட்ட வழக்கு. மடம் என்ற சொல் மிகப் பழமையானதாகும். பல நூல்களில் இந்தச் சொல் வழக்கு காணப்படுகிறது. பெரியபுராணத்தில் தேவார ஆசிரியர் காலத்தில் நிலவியிருந்த சில சைவ மடங்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. உதாரணமாக திருஞானசம்பந்தர் மதுரை சென்ற போது அமைச்சர் குலச்சிறையார் " சம்பந்தர் தங்குவதற்குரிய திருமடம் இதுவெனக் காட்டினார்" என்ற குறிப்பு சேக்கிழாரால் தரப்பட்டுள்ளது. ஆதி காலத்தில் மடம் என்பது துறவி ஒருவரின் குடில் என்றே பொருள் கொள்ளப்பட்டது. பின்னர் பல துறவிகளின் குடில்களின் கூட்டத்தைக் குறிப்பதாக அமைந்து விட்டது. மடம் என்ற சொல் துறவு நெறி நிற்கும் ஆசிரியர்களும், சீடர்களுமாகிய சான்றோர்கள் இணைந்து வாழும் இடம் என்று தமிழ் வளர்க்கும் தருமபுரம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மொழியில் மடம் என்ற சொல்லுக்குப் பொருள் கூறும் தனேஜி தீட்சிதர் என்பவர் மாணவர் வசிக்குமிடம் என்று பொருள் கூறுகிறார். ஆங்கிலத்தில் மடம் என்பது அரவவஇ அரவாந எனவும் அழைக்கப்படுகிறது. ஆங்கில அகராதியில் இவற்றிற்கு முனிவர் உறையுமிடம் அரவவ என்றும் அரவாந என்பதற்கு மதப்பிரசாரம் செய்யக் கடமைப்பட்டதென்றும் பொருள் கூறப்பட்டுள்ளது. வெவ்வேறு மொழிகளிலும் இந்த மடம் என்பது அறிவு விளக்கத்தை ஆக்குவனவாக, அருள் வழங்கு நிலையங்களாக சரித்திர காலத்திலிருந்தே விளங்கி வருகின்றது. " நானார்த்த தீபிகை" எனும் நிகண்டு நூலில் மடம் அறியாமைது, அறப்புறம் மாணவரும் முனிவரும் உறும் உறையுள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சூடாமணி நிகண்டு என்ற நூலில் " மடமென்ப அறியாமை முனிவர் வசிப்போர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் உமாபதி சிவாச்சாரியார், சேக்கிழார் புராணத்தில் பெரிய புராணத்தை அரங்கேற்றிய போது " வண்மை மடபதிகளும் புராணம் கேட்க வந்திருந்தார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். இதில் வண்மை மடபதிகள் என்று குறிப்பிட்டது இல்லறத்தில் இருந்து கொண்டு குருவாக இருப்பவர்களும் அவர்களது சீடர்களும, மற்றொரு வகை துறவு நிலை பூண்டு குருவாக விளங்குபவர்களும் என்பது பொருளாகும்.

இந்திய நாட்டில் தொன்று தொட்டு நிலவி வரும் சைவ மடங்கள் 15 என "தமிழ் வளர்க்கும் தரும புரம் எனற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றுள் மூன்று தென்னாட்டு மடங்கள் என்றும் ஏனையவை வட நாட்டில் நிலவியதாகவும் கூறப்படுகிறது. தென்னாட்டில் நிலவிய மடங்களுக்கு சில நேரங்களில் வடநாட்டிலிருந்து மடாதிபதிகள் வரவழைக்கபபட்டதாக முதல் இராஜ இராஜன் காலத்துக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மடங்களின் தோற்ற வரலாறுகளைப் பொதுவாக ஆராயும் பொழுது சங்க காலம் தொடங்கி 12ஆம் நூற்றாண்டு வரையிலும் 200 ற்கும் மேற்பட்ட பல்வேறு கொள்கையுடைய மடங்கள் இருந்துள்ளன என்று டாக்டர் திரு மா . இராசமாணிக்கனார் அவர்கள் சைவ சமய வளர்ச்சி என்ற தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இது தவிர இவற்றைத் தோற்றுவித்தவர் யார்? ஏன்பது பற்றியோ இவை எத்தனை ஆண்டுகள் நின்று நிலவின என்பது பற்றியோ இவை ஆற்றிய சமய சமூகப் பணிகள் யாவை என்பது பற்றியோ திட்ட வட்டமான குறிப்புகள் ஏதும் காணப்படவில்லை என்று மேலும் அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் "தமிழ் வளர்க்கும் தருமபுரம்" எனும் நூலில் தேவார

ஆசிரியர்கள் காலத்திற்கு முன்பு சைவாச்சாரியர்களைத் தலைவர்களாகக் கொண்ட மடங்கள் தேவார மூவர் காலத்திற்குப்பின் தமிழ் நாட்டில் நூற்றுக் கணக்கில் தோன்றின. இவர்கள் காலத்திலும் முன்பும் சில சைவத் திருமடங்கள் தமிழகத்தில் நிலவியிருந்தன என்பதற்கு சான்றுகள் கிடைத்துள்ளன. திருமூலநாயனாரின் காலம் தேவார மூவர் காலத்திற்கும் முற்பட்டது என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. சன்மார்க்க சைவத்தை பின்பற்றி திருமூலர் காலத்தில் ஏழு மடங்கள் ஏற்பட்டன. ஒவ்வொன்றிலும் ஒரு குருநாதர் இருந்தார். திருமூலர் மடத்து வழிவந்த சீடர்கள் மூலன் மரபினர் எனப்பட்டனர். அவர்கள் தமிழ் நாட்டில் பல நூற்றாண்டுகள் இருந்து வந்திருக்கின்றனர்.

அடியார்கள் புடைசூள மதுரை சென்று சேர்ந்த திருஞானசம்பந்தருக்கு அமைச்சர் குலச்சிறையார் தங்குவதற்குரிய திருமடம் எனக் காட்டினார் என்ற குறிப்பு சேக்கிழாரால் தரப்பட்டுள்ளது. மேலும் திருஞானசம்பந்தரை திருப்புகலூரில் வாழ்ந்திருந்த முருகு நாயனார் வரவேற்றுத் தம் திருமடத்தில் தங்கவைத்தார் என்ற குறிப்பும் திருநாவுக்கரசர் திருப்பூந்துருத்தியில் திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் அமைத்து நெடுநாள் தங்கியிருந்த குறிப்பும் பெரிய புராணத்தில் உள்ளன. தேவார ஆசிரியர்கள் காலத்தின் பின் (அவர்கள் காலத்தை ஒட்டி) ஏராளமான சைவ மடங்கள் தோன்றியிருந்ததை வரலாறு மூலமாகவும் கல்வெட்டுகள் மூலமாகவும் அறியமுடிகிறது. அம்மடங்கள் பெரும்பாலும் தேவார மூவர் பெயராலும் மாணிக்கவாசகர் பெயராலும் அமைந்திருந்தன.

பல்லவர் காலத்தில் தோற்றம் பெற்ற மடங்கள் சோழர்கள் ஆட்சிக்காலத்தில் பலவாறாக விரிந்து வளர்ச்சியடைந்த தமிழகத்தின் சைவ மடங்களின் வளர்ச்சி சோழர் ஆட்சிக்குப் பின்னர் அரசியல் சிக்கல்களாலும் அரசியல் செல்வாக்கைக் கொண்டிருந்த ஒரு சில பிரிவினராலும் பல சைவ மடங்கள் இடித்து நொறுக்கப்பட்டன. ஆயினும் சில மடங்கள் அழிந்துவிடவில்லை. இவை 3ம் இராசராசன் காலத்திலும் பிற்காலத்திலும் சிற்றரசர்கள் சிலரின் ஆதரவிலும் சில தனிப்பட்டவர்களின் ஆதரவிலும் வளர்ந்ததாக வரலாற்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. முடிவாக, மடம் என்பது எங்கு தன்னலம் பேணாத தகுதியாளர்கள் இருக்கின்றார்களோ, எங்கு அற வழியில் நாட்டைப் பண்படுத்துபவர்கள் தங்கி இருக்கின்றார்களோ அதுவே மடம் எனக் கொள்ளல் சிறந்ததாகும்.

இவ்வகையில் வளர்ந்த மடங்களின் எண்ணிக்கை பிற்காலங்களில் 18 என வளங்கியது. காளமேகப் புலவர் பாடிய "திருவானைக்கா உலா"விலும் அதன் பின் திருக்காளத்திநாதர் உலா, திருபூவன நாதர் உலா ஆகிய உலா நூல்களிலும் சைவ மடங்கள் 18 எனக் கூறப்பட்டுள்ளது. இப் பதினெண் மடங்கள் தான் பிற்காலத்தில் பதினெண் ஆதீனங்களாக விளங்குகிறது. ஆதீனம் என்ற சொல் வழக்கு பிற்காலத்தில் ஏற்பட்டதாகும். 1910 இல் வெளிவந்த அபிமான சிந்தாமணி என்ற நூலில் தான் ஆதீனம் என்ற சொல் வழக்கு முதன் முதலில் காணப்படுகிறது. இதற்கு முன்பே ஆதீனம் எனற பெயர் வழக்கில் இருந்திருக்கலாம் என்பது சில அறிஞர்களின் கூற்று 18 ஆதீனங்களில் திருவாடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், சூரியனார் கோயில், தொண்டைமங்கலம், மதுரை, குன்றக்குடி ஆகிய 7 ஆதீனங்களும் நன்கு விளங்குபவை என்றும், இவற்றுள் திருவாடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் முதலான மூன்றும் மிகப் பெரிய ஆதீனங்கள் எனவும் துழாவூர், வேளாக்குறிச்சி, நாச்சியார் கோயில், வரணி, வள்ளலார் ஆகிய ஐந்து ஆதீனங்களும் இல்லறத்தார்கள் ஆட்சி செய்யும் ஆதீனங்கள் என்றும், மேலும் வள்ளலார் ஆதீனம் அழிந்துவிட்டது என்பதும் தெரியவருகிறது.

சைவ ஆதீனங்களின் குரு முதல்வர்களின் பரம்பரை பொதுவாக திருக்கைலாயத்திலிருந்து தொடங்குகிறது. திருக்கையிலையில் வீற்றிருக்கும் சிவபெருமான், நந்தி தேவருக்கு உபதேசிக்கிறார். அவர் சனற்குமார முனிவருக்கும் சனற்குமாரர் சத்தியஞான தரிசனிகளுக்கும், அவர் பரஞ்சோதி மாமுனிவருக்கும் உபதேசித்தனர். சிவபெருமானிடம் உபதேசம் பெற்ற இந் நால்வரும் கயிலாயவாசிகள் என்பதால் இவர்கள் அகச்சந்தானாசாரியர் என அழைக்கப்படுகின்றனர்.

# Shakespeare and Sage Vipulananda

( A Cursory glance )

***Sinniah Sivanesan, B. Ed***



Mathanga Sulamani – This is the name of a book dealing with the intricacies of dramatic art written by an eminent scholar of Eelam called Sage Vipulananda of Batticaloa . He gave this title to honor Shakespeare as a crown jewel of this art form . This shows the great respect and admiration Vipulananda had for him.

This book is actually a speech made by him on June 1924 at the 23rd annual celebrations of Madurai Tamil Association held at Pandithurai Thevar's Palace .Then this was slightly modified and serialized in the magazine " Senthamil " from July 1924 . Later it was published by the magazine management as a book in 1926.This is now herald as the oldest Tamil book on drama with various details of how to write a drama script with all the human feelings it may evoke .

Author has quoted examples from one of the Tamil epics called Silappathikaram (story of an anklet) and surprisingly from Shakespeare's many plays. Furthermore he has explained in great detail as to how characterization , dialogue and settings to be written for a drama, following the footsteps of Shakespeare.

I would like to summarize the various aspects and human feelings appearing in the book Mathangasulamani . Sage Vipulananda has divided this book into three main parts.

1. Integral parts of drama.
   Here he speaks of very ancient Tamil aphorisms of drama which were unearthed by the commentaries and explanations of Silappathikaram
   By Adiyarku Nallar .This part explains the various stages of a typical drama script, the compact theme , the characterization and various sensual feelings evoked by watching a drama performance .
2. Quotes and References :
   This part contains how Shakespeare's 12 dramas have been written as per the Tamil drama definitions .The general formation of a drama has been divided into four parts .They are Introduction , Preface ,Main theme and experience or appreciation . Furthermore the sensual feelings (9 ) a drama may evoke is also mentioned in detail by the author . They are valour, fear ,disgust ,wonder ,happiness ,distress or weeping ,laughter ,wrath or anger and impartiality . The author explains all these by giving examples from Shakespeare's 12 dramas and narrating story in Tamil with Tamilized names and places. The examples of a few plays have been given below. The author describes the story of few plays and explain each feelings giving examples from them.

Sulamani – This is the name of a book dealing with the intricacies of dramatic art written by an eminent scholar of Eelam called Sage Vipulananda of Batticaloa . He gave this title to honor Shakespeare as a crown jewel of this art form . This shows the great respect and admiration Vipulananda had for him.

This book is actually a speech made by him on June 1924 at the 23rd annual celebrations of Madurai Tamil Association held at Pandithurai Thevar's Palace .Then this was slightly modified and serialized in the magazine " Senthamil " from July 1924 . Later it was published by the magazine management as a book in 1926.This is now herald as the oldest Tamil book on drama with various details of how to write a drama script with all the human feelings it may evoke .

Author has quoted examples from one of the Tamil epics called Silappathikaram (story of an anklet) and surprisingly from Shakespeare's many plays. Furthermore he has explained in great detail as to how characterization , dialogue and settings to be written for a drama, following the footsteps of Shakespeare.

I would like to summarize the various aspects and human feelings appearing in the book Mathangasulamani . Sage Vipulananda has divided this book into three main parts.

1. **Integral parts of drama.**
   Here he speaks of very ancient Tamil aphorisms of drama which were unearthed by the commentaries and explanations of Silappathikaram
   By Adiyarku Nallar .This part explains the various stages of a typical drama script, the compact theme , the characterization and various sensual feelings evoked by watching a drama performance .
2. **Quotes and References :**
   This part contains how Shakespeare's 12 dramas have been written as per the Tamil drama definitions .The general formation of a drama has been divided into four parts .They are Introduction , Preface ,Main theme and experience or appreciation . Furthermore the sensual feelings (9 ) a drama may evoke is also mentioned in detail by the author . They are valour, fear ,disgust ,wonder ,happiness ,distress or weeping ,laughter ,wrath or anger and impartiality . The author explains all these by giving examples from Shakespeare's 12 dramas and narrating story in Tamil with Tamilized names and places. The examples of a few plays have been given below. The author describes the story of few plays and explain each feelings giving examples from them.

3. **Balance part :**
   Here the author quotes from a Sanskrit book called "Thacarupakam " written by Thanan jayan. This book contains various grammatical definitions of drama and dance forms. Also he has given many facts and figures collected from the commentaries of 'Tholkappiyam " which deals with acting ,writing songs for drama ,various dance forms in plays and tech niques of stage setting etc.
   The compares the various phases of a drama to a growing of seed on the ground . The seed grows into an embryo , then into a seedling ,followed by a full grown plant ,which gives fruits or grains as in the case of wheat etc. , people remove the husk and then enjoys the grain or fruits .Similarly drama has four phases as mentioned above.

உ

# அபிதான விளக்கம்

## காதலுழைப்புமிக்க நாவலன்சரிதை
## LOVE'S LABOUR'S LOST

| | | | |
|---|---|---|---|
| பெர்நந்துகுமாரன் | Ferdinand | மட்டு | Dull |
| வீரன் | Biron | இருவாட்சி | Costard |
| இலாவண்யன் | Longaville | விட்டில் | Moth |
| சோமகன் | Dumain | வனசரன் | Forester |
| அடபன் | Boyet | நாகநாட்டு | The Princess |
| மரகதன் | Mercade | ராஜகுமாரி | of France |
| அதிசூரன் | Don Adriano de | சாலினி | Rosaline |
| | Armado | மாலினி | Maria |
| நாதன் | Sir Nathaniel | சுந்தரி | Katharine |
| ஹொலிவாணன் | Holofernes | காந்தசினி | Jaquenetta |

நாவலநாடு Navarre

## ஆருலராஜன்சரிதை KING LEAR.

| | | | |
|---|---|---|---|
| ஆருலராஜன் | Lear | மதனன் | Edmund |
| மணிபுரத்தரசன் | King of France | காசியபன் | Oswald |
| வீரவர்மன் | Duke of Cornwall | விதூஷகன் | Fool |
| அரிவர்மன் | Duke of Albany | மாணிக்கமாலை | Goneril |
| சேனாதரன் | Earl of Kent | சுவர்ணமாலை | Regan |
| குணதரன் | Earl of Gloucester | குணமாலை | Cordelia |
| வரதன் | Edgar | | |

இங்கபுரம் Britain



Atputha Narthanalayam
Tel.: (416)844-2170
Brimley & Huntingwood (Scarborough)
Salem & Roseland (Ajax)
Mrs. Atputharani Kirubaraj
MA in Dance
BA Honors in Fine Arts
Bharathakalavithakar
Teacher Trainee
I also teach tamil classes. I'm a teacher with Aivakam.




பக்க விளைவுகளில்லாத பத்தியமேதுமில்லாத அனைத்து நோய்களிலிருந்தும் சுகமடைந்து ஆரோக்கிய வாழ்வு பெற
DR. PAUL HEALTHY LIFE CLINIC
(Homeopathy and Acupuncture)
Dr.போல் ஜோசேப்
BHMS (Ind.), HD (can.) RAP (can.)
ஹோமியோபதி (ஜெர்மன் மருத்துவமுறை)
அக்குபங்சர் (சீன மருத்துவமுறை)
B.H.M.S (Bachelor of Homeopathy Medicine and Surgery)
Qualified from Tamilnadu Dr. M.G.R. Medical University, Madras, india.
Doctor of Homeopathy, Doctor of Acupuncture
முன்னாள் பேராசிரியர், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தின் மருத்துவ கல்லூரிகள்
முன்னாள் விரிவுரையாளர், விநாயகா மிஷன்ஸ் பல்கலைக் கழகம் சேலம், இந்தியா.
மருத்துவ ஆலோசகர், சண்முகா மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், சேலம்.
இந்தியாவின் பல்வேறு பல்கலைக் கழகங்களின் தேர்வாளராகவும், சிறப்பு வருகை விரிவுரையாளராகவும் பணிபுரிந்தவர்.
இலங்கையின் முதல் B.H.M.S மருத்துவ பட்டம் பெற்ற மருத்துவர்.
கனடா, இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் பதிவு பெற்ற மருத்துவ நிபுணர்.
ஹோமியோபதி, அக்குபங்சர், அக்குபிரஷர், நாடிப் பரிசோதனை தியானம், யோகா மற்றும் உளவியல் ஆலோசகர்.
Tel : 416 438 3939 Cell : 416 9864903 drjp63@yahoo.com
1193 Brimley Road, (Brimley & Brimortan) Scarborough, ON. M1P 3G5


Century 21
Innovative Realty Inc.
INDEPENDENTLY OWNED AND OPERATED
Brokerage
Latha Pooranakumar
Sales Representative
lathapoorana@gmail.com
Direct: 416-558-8811
Office: 416-298-8383
Fax: 416-298-8303
3-2250 Markham Rd., Toronto ON M1B 2W4
®™ Trademarks of AIR MILES International Trading B.V. Used under license by LoyaltyOne Inc. and Century 21 Canada Limited Partnership.


For all your Cinematography & Photography needs
ANALAI EXPRESS
The Clear Choice For Production
(647) 278-5881 (Vimal)
(416) 678-5866 (Selvan)
analaiexpress@gmail.com
www.analaiexpress.ca
facebook.com/analaiexpress.ca
BK
ELEGANT...IMAGINATIVE...AND UNIQUE
Baveen Kana
Photography
(647) 283-2283
baveenkana@gmail.com
www.baveenkana.com
facebook.com/baveenkana
@baveenkana


MURUGAN
BOOK STORE
தமிழ்
புத்தகங்கள்
வார இதழ்கள்
குமுதம்
பக்தி
காக்கும் இமை நானுனக்கு
இலங்கை மற்றும் இந்திய பத்திரிகைகள்
வீரகேசரி
தினகரன்
தினக்குரல்
இப்பொழுது
முருகன் புத்தக சாலையில்
கிடைக்கும்
5215 Finch Ave East
Unit - 125A Toronto
ON M1S 0C2
416-321-0285
mahesan.ka@gmail.com
www.muruganbookstore.com

**GOOD OPPORTUNITY FOR FINANCIAL EDUCATION AND EARN**
**THIS IS A CAMPAIGN FOR FINANCIAL LITERACY**

Freedom form Financial



- Education Planing
- Auto/Home Insurance
- Life Insurance
- RESP/RRSP
- Critical illness insurance
- Disability Insurance
- Traval Insurance
- Supper Visa Insurance
- Mortgage Insurance
- Dental & Drug Insurance
- Guaranteed Investment
- Estate Planning

**Venthan Perinpanathan**

Financial Advisor, Senior Marketing Drector
World financial group

**416-731-2829**

venthanwfg@gmail.com

# அவசர உலகில்
# எம் வாழ்கையை மேம்படுத்தும் யோகக்கலை

*சிவலிங்கம் ஜெயறஜுன்* MSc.
விரிவுரையாளர், யோகா துறை
அண்ணாமலை கனடா வளாகம்



எமது மூத்தவர்கள் பல்லாண்டு தேகாரோக்கியத்துடன் வாழ்ந்தார்கள். ஆனால் எனது தலைமுறை மட்டும் சிறுவயதில் பொட்டென்று போகிறதே! என்னடா ஏதோ வருத்தங்கள் உடலை வாட்டுகின்றனவே! இது எங்கும் என்வயதில் உள்ளவர்களிடம் நான் இன்று கேட்கும் புலம்பல்கள்.
ஏன் எம் வாழ்க்கை மாறிப்போனது? எங்கு நாம் தவறு இழைத்து வருகின்றோம்? தேடுதலை எம்மில் பலர் தொலைத்துவிட்டிருப்பதால் அதற்கான பதிலும் அற்றவர்களாகவே இருக்கின்றோம். எம் மூத்தவர்கள் வாழ்ந்த வாழ்க்கையில் இருந்து எங்கெல்லாம் நாம் மாறி இருக்கின்றோம் என்ற கேள்விக்கான பதிலே எம் தேடுதலின் ஆரம்பமாகின்றது.

அவர்களது வாழ்க்கைமுறை, உணவுமுறை, உடற்பயிற்சிமுறை, சுவாத்திய சூழல் என அனைத்திலும் நாம் மாறி விட்டோம். இயந்திர வாழ்க்கைக்குள் எம்மை உட்படுத்திவிட்டோம். அத்துடன் எமது மூலமான எமது உடலின் ஆரோக்கியத்தை புறம் தள்ளி விட்டோம். அதன் முக்கியத்துவத்தையும், அதன் அவசியத்தையும் சிந்திக்க தவறி வருகின்றோம். அதன் விளைவு-களை உடலியல் ரீதியாக நோய்களாக எதிர்கொண்டு நிற்கின்றோம்.

சீறிய உடலியல் வாழ்க்கைக்கு வழி கண்டவர்களும் தமிழர்கள் நாமே. சித்த மருத்துவத்தினூடாக நோய் நிவாரணிகளை இயற்கையாகவே கொண்டவர்களும் நாங்களே. நாம் படைத்த யோகக்கலையின் மகத்துவத்தை ஏனையோர் உய்துணர்ந்து பயிலும் போது நாம் பார்வையாளர்களாக மாறி நோய்களின் பிடியில் உழல்கின்றோம்.

உடற்பயிற்சியும், யோகாசனமும், தியானமும் எல்லாமே உடலையும் உள்ளத்தையும் பக்குவப்படுத்தி செயற்பாட்டில் முழுபயன்பாட்டில் வைத்திருக்கும் கருவிகள் என்பதே மன, நல, வள, இயற்கை மருத்துவம். மனம் ஒரு குரங்கு என்பார்கள். அம் மனத்தை கட்டுக்குள் கொண்டுவருவது என்பது யோகாசனத்தின் மூலமாகிறது. பயிற்சியின் போது மனம் வேறு சிந்தனையில் ஈடுபடவே கூடாது. ஒவ்வொரு அசைவின் போதும் நம் உடலின் தசைநார்கள் விரி-வடைவதையும் சுருங்குவதையும் மூட்டுக்கள் சுழல்வதையும் உற்றுக் கவனித்து உணர்ந்து ஈடுபட வேண்டும். மூச்சு உள்வாங்குவதையும் வெளியிடுவதையும் உணர்ந்து புரிந்து, அதன் வேகம், ஆழம், செயற்பாடு, அளவு அறிந்து அதனுடன் ஒன்றித்து ஈடுபட வேண்டும். இப்பயிற்சிகளின் போது உடல் வலிமை கூடி வளம் சேர்பது போல, உள்ளமும் வலிமை கூடி வளம் கட்டி வருகின்றது என்பதை அனுபவத்தில் கண்டு கொள்ள முடியும்.

இன்னொரு அடிப்படை உண்மையையும் நாம் ஆழ்ந்து, சிந்தித்து உணர வேண்டும். நாம் விரும்பியவாறு விரித்து, சுருக்கி தசைகளுக்கு பயிற்சி அளிப்பது ஒரு விதம். தன்பாட்டில் செயற்படும் உள்ளுறுப்பு செயற்பாடுகளுடன் பிணைந்திருக்கும் நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், கணையம், சிறுநீரகம், கருப்பை, கற்பப்பை முதலான உறுப்புக்களும் அதில் சுரக்கும் உடல் இயக்கத்திற்கு தேவையான ஊற்றுக்களை சுரக்கும் சுரப்பிகளுக்கும் இன்றியமையாத பயிற்சியும் இன்னொரு விதம்.

இவ்வாறான சுரப்பிகளின் தொடர்ச்சியான இடைவிடாத அளவான ஊற்றுக்கள் தான் நம் உடலை சமச்சீர் நிலையில் வைத்திருக்கின்றன. கழுத்தில் உள்ள தைரோயிட்டு சுரப்பியில் இருந்து சுரக்கும் தைரொக்சின் அதிகமானால் உடல் மெலிவதும், குறைந்தால் உடல் பருத்துக் கொண்டே செல்வதும் ஒருவித நோய். கணையத்தில் சுரக்கும் இன்சுலீன் தான் இரத்தத்தில், சர்க்கரையின் அளவை கட்டுக்படுத்தி வைத்திருக்க உதவுகிறது. இவ்வாறு ஒவ்வொரு சுரப்பியின் குறைபாடும் ஒருவித நோயை எமக்கு கொடுத்து விடுகிறது.

இவ்வாறான உடலியல் சவால்களை எதிர்கொள்வதற்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எம் மூத்தவர்கள் வகுத்து வைத்திருப்பதே யோகாக்கலை. யோகாசனப் பயிற்சிகளை முறையாக கற்பதுவும், கைக்கொள்வதுவும் நாம் வாழும் இன்றைய அவசர உலகில் எமது வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு அத்தியாவசியமாகின்றது.

**எமது மனத்தை வெல்வதினூடாக உடலியலையும் வெல்லுவது எப்படி?**

யோகாசனத்தின் முதன்மையான மனதை ஒருமுகப்படுத்திய தியானத்தை மேற்கொள்ள எம்மை வளப்படுத்திக் கொள்வது எப்படி? சவால் நிறைந்த கேள்வி? எமது மனதை எமது கட்டுக்குள் நாம் கொண்டுவரும் போது உடலியல், மனயியல் ரீதியாக ஏற்படுகின்ற அமைதியான மாற்றங்களை எம்மால் முழுமையாக உணர்ந்து கொள்ள முடியும். ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு வழியில் சிந்திக்கப்பழகிக் கொள்கின்றோம். எனது பல்கலைக் கழக வாழ்வில் நான் கற்றறிந்த ஒரு முதுமெ-ாழி இதற்கான ஒரு பதிலாக அமையலாம்.

Small Minds Discuss People
Average Minds Discuss Events
Great Minds Discuss Ideas

என அது அமையும். நாம் இதில் எந்தவகையைச் சேர்ந்தோம் என்பதை நாமே எம்மிடம் கேட்டுக்கொள்ளலாம். முதல் வகையைச் சேர்ந்தோர் என்றும் மக்களைப் பற்றியே பேச விரும்புபவர்கள், சிந்திப்பவர்கள் அல்லது தம்மை அவ்வாறு பழக்கப்படுத்திக் கொண்டவர்கள். இதனையே நாம் வழக்கத்தில் கொண்டால் பேசுவதற்கான எமது அளவு எல்லையற்று செல்வதை நாம் உணரலாம். எமது மனம் எல்லையற்று எங்கும் தாவலாம். ஏனெனில் உலகில் இன்று 7 பில்லியன் மக்கள் இருக்கின்றார்கள்.

இரண்டாவது வகையினர் சம்பவங்களைப்பற்றியே பேச விரும்புபவர்கள், சிந்திப்பவர்கள் அல்லது அவ்வாறு தம்மை பழக்கப்படுத்திக் கொண்டவர்கள். மக்களைப்பற்றி சிந்திப்பவர்களிலும் பார்க்க இவர்களது மனம் தாவும் அளவு குறைவாகவே இருக்கும். ஏனெனில் பேசக்கூடிய அல்லது அறிந்த சம்பவங்களின் அளவு குறைவானதாகவே உள்ளது.

மூன்றாவது வகையினர் திட்டங்களைப்பற்றி, செயற்பாடுகளைப்பற்றி, புதிய வழித்தடங்களைப்பற்றி பேச விரும்புபவர்கள், சிந்திப்பவர்கள் அல்லது அவ்வாறு தம்மை பழக்கப்படுத்திக் கொண்டவர்கள். இவர்களால் தமது சிந்தனை வட்டத்தினுள் இருந்து விரைவாக வெளிவர முடியும். ஒருமுகப்படுத்திய தியானம் என்பது இவர்களால் எளிதில் எட்டமுடியும்.நாம் அனைவரும் மேற்கண்ட மூன்று வகைகளின் ஒரு கலவையாகவே உள்ளோம். ஆனால் ஒன்றில் ஏனைய வகைகளிலும் அதி-கமாகவே உள்ளோம். அது எது என்பதை கண்டவறிவதும், அது முதல் அல்லது இரண்டாவது வகையினராக இருந்தால் அதில் மாற்றத்தை ஏற்படுத்த முயல்வதும் எமது மனத்தை வெல்வதற்கான ஒரு வழிவகையாக அமையலாம்.

என்னுடைய மக்கள் தொடர்பாடலில் எம்மில் பெரும்பாலானோர் முதல் வகையினராகவும், குறிப்பிடத்தக்கோர் இரண்டாவது வகையினராகவும், மிகச் சிலரே மூன்றாவது வகையினராக

உள்ளதையும் கண்டுள்ளேன். ஒரு இயந்திர உலகத்தில் வாழும் நாம் எமது மனத்தை வெல்வதினூடாகவோ அல்லது ஒருமுகப்படுத்துவதினூடாகவோ இலகுவாக இயற்கை உலகத்துடனான ஒரு வாழ்வை உருவாக்கிக் கொள்ள முடியும். தியானத்தினூடாக அவ்வியற்கை உலகத்துடன் நாம் இணைய முடியும். அது ஒரு ஆரோக்கிய வாழ்விற்கு வித்திடுகிறது.

எமது மனம் அலைபாயும் போது அது பல உணர்வுகளுக்கு ஆட்படுகின்றது, அவ்வாறான பல்வேறு உணர்வுகளின் கலவை எம்மை உளவியல் ரீதியான தாக்கங்களுக்கு இட்டுச் செல்கிறது. எமது தமிழ் சமூகத்தில் பலர் குறிப்பாக கனடாவிலும் தாயக சூழல் காரணமாக அங்கும், இவ்வாறான உளவியல் ரீதியான தாக்கங்களுக்கு உட்பட்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். இவ்வாறான உளவியல் தாக்கங்களுக்கு அவர்கள் ஆளாகும்போது அவர்கள் தமது உடலின், மனதின் கட்டுப்பாட்டை முழுமையாக இழப்பதை காண்கின்றோம். உடல் கட்டுப்பாடு இழக்கப்படுவதன் கூடாக பல்வேறு நோய்த்தாக்கங்களுக்கு ஆளாகின்றனர்.

“நான்” “எனது” “எனக்கு” “என்னுடையது” என்ற குறுகிய தன்னல வட்டத்திற்குள் வாழ முற்படுபவர்களும் மனதை ஒருமுகப்படுத்துவதில் பெரும் சிக்கலை எதிர் கொள்கின்றனர். ஒரு குறுகிய வட்டத் தெரிவுகளினூடாக அவர்கள் தங்கள் வாழ்க்கையை சிக்கல் நிறைந்ததாக்கி விடுகின்றனர். இக்குறுகிய சிந்தனை வட்டம் எதிர்பார்ப்புக்களை அதிகரித்து அதனால் ஏற்படும் எதிர்கொள்ளும் சவால்களை அதிகரித்து மனநலத்தை பாதிக்கிறது.

எம்மில் பலர் குறுகிய வட்டச்சிந்தனைகளூடாக எம்மைச் சுற்றி நாமே வேலி எழுப்பிக் கொள்கின்றோம். பெரிய சிந்தனை வட்டத்திற்குள் வர எம்மை நாமே பழக்கிக் கொள்ளவேண்டும். அதற்கான முதல் முயற்சியாக எம்மிடம் நாமே கேள்வி எழுப்பி முதலில் சிறிய வட்டத்திற்குள் சிந்தித்து பின்னர் அதற்கான பதிலை விரிவாக்கி சந்திக்க ஆரம்பிக்கலாம்.
**நான் யார்? எனக்கு என்ன தேவை? என்னால் எவ்வாறு உதவ முடியும்?** கண்ணை மூடித்தியானித்தவாறு ஒவ்வொரு கேள்வியாக பதில்களைத் தேட ஆரம்பியுங்கள். முதற் கேள்விக்கு ஒரு பதில் கிடைத்ததும் அதனை புறம்தள்ளி விட்டு அதற்கான மேலும் ஒரு பதிலைத் தேடுங்கள்.நான் ஒரு மருத்துவர், நான் ஒரு தமிழன், நான் ஒரு மனித உரிமைவாதி, நான் ஒரு ஆய்வாளன். இவ்வாறு எனது மனம் ஒரு கேள்விக்கு பல்வேறு பதில்களினூடாக விரிவாக்கம் கண்டு செல்லும். மனதை வெல்வது என்பது எமது அயராத முயற்சியிலே தங்கியுள்ளது. முதலில் முயற்சியை ஆரம்பியுங்கள், நீங்களும் ஒரு கோடியை வெல்வதற்கு முன்னர் நிச்சயம் உங்கள் உடலியலை வெல்லலாம்.



# கர்னாடக இசைப் பாரம்பரியத்தில் வாத்திய இசை

சிவசம்பு ஸ்ரீதாஸ்,
(Super Grade Veena and Flute Artist - Sri Lanka Broadcasting Corporation and Rupavahini)



இசை கற்பது எமக்கு பரீட்சயம் இல்லாத ஓர் பாஷையைக் கற்பது போன்றதே. உதாரணத்திற்கு, எமது பிறந்த நாட்டில் பெரும்பான்மையினர் பேசும் சிங்களத்தை எடுத்துக் கொள்வோம். நம்மவர்களில் கொழும்பில் வசித்த பலருக்குச் சிங்கள மொழி புரியும். சிலர் பேசுவார்கள். வெகு சிலர் அவர்களைப் போலவே பேசுவார்கள். ஆம் அதீத பிரயத்தனம் எடுத்துக் கொண்டவர்களாலே தான் அது சாத்தியம். விஷயத்தைக் கிரகித்துக் கொள்ளும் அளவிற்குத் தெரிந்து கொண்டால் போதும் என்று எண்ணுபவர்கள் சிலர். சிலர் ஒரு பிரயத்தனமுமே எடுக்காமல் 'எனக்கேன் சிங்களம்' என்று இருந்து விடுவார்கள். சிலர் பல வருட காலம் சிங்களச் சூழலியே வாழ்ந்திருந்தாலும் என்ன முயற்சி எடுத்தும் வாய் திறந்து இரு வார்த்தைகள் பேசவே மாட்டார்கள்.

எங்கள் பாரம்பரிய இசையான கர்னாடக இசையை நம்மவர்கள் அணுகுவதும் இதே போன்றே. **சிலரைக் கவரும், பலரை நெகிழவைக்கும் ஆனால் வெகு சிலரையே ஆட்டிப்படைக்கும். ஆம், எப்படியாவது அதை வசப் படுத்தித் தானும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்விக்க வேண்டும் என்று எண்ணும் சிலரே விற்பன்னர்கள் ஆகிறார்கள்.**

புலம் பெயர்ந்த நம்மவர்கள் எமது பாரம்பரியக் கலைகளின் மகத்துவத்தை உணர்ந்தவர்கள் என்பதால் அடுத்த தலைமுறையினரும் அதை நுகர்ந்து போற்றிப் பலனடைய வேண்டும் எனும் உந்தலில் தங்கள் சிறாருக்கும் அவற்றைப் புகட்ட எத்தனிக்கிறார்கள். ஆம் எல்லோருமே விற்பன்னர்களாகத் தேறிவிடுவதில்லை. Some show academic interest, some academic non-interest (அதாவது, விருப்பமில்லாத ஓர் பாடத்திற்குக் காட்டும் வெறுப்பையே இசைக்கும் காட்டுவார்கள்) and some show a passionate interest. **மூன்றாவது ரகத்தைச் சேர்ந்தவர்களே விற்பன்னர்களாகிறார்கள்.**

இசையைப் பொறுத்த அளவில் குரலிசை, வாத்திய இசை என்ற இரு பிரிவுகளைக் காண்கிறோம். ஆனால் நாம் மனத்தில் கொள்ள வேண்டியது என்னவென்றால் எமது இசை ஒன்று தான். இசையை வெளிப்படுத்தும் கருவி அல்லது வாகனம் தான் வெவ்வேறு. ஒன்று குரல் மற்றது வாத்தியம். உவமானமாகச் சொல்வதாயின் குரலிசையை சிலைக்கும் வாத்திய இசையை ஓவியத்திகும் ஒப்பிடலாம். குரலிசைக்கும் வாத்திய இசைக்கும் மேலெழுந்தவாரியான வேறுபாடு நாதமே. அதாவது, Tonal quality என்றாலும் வேறுமோர் முக்கிய அம்சத்தில் தான் மிகையான வேறுபாடு உண்டு. அதுவே Harmonics எனப்படும் பண்பு — அதாவது, ஓசையில் வெளிப்படும் பல் ஸ்தாயிகள் - multiple octaves. குரலோசையிலேயே அதிகப் படியான Harmonics தொனிப்பது. குரலுக்கு அடுத்த படியாக அப் பண்பைக் கொண்டுள்ளது வீணை வாத்தியமே. மற்றய வாத்தியங்கள் யாவுமே Harmonics விஷயத்தில் குரலின் செறிவை விட மிகக் குறைவானதே. ஆனாலும், பல் சுவை (variety) நுகர்ச்சியை விரும்பும் எமக்கு ஏனைய வாத்தியங்களும் அத் தேவையைப் பூர்த்தி செய்கின்றது.

நாம் வாயால் ஓர் உருப்படியைப் பாடும் பொழுது என்னென்ன சுவைகள் வெளிப்படுகின்றனவோ அத்தனையையும் வாத்தியத்தை இசைத்து கொண்டுவரவேண்டும். இதுவே வாத்திய இசையின் இலக்கணமும் இலட்சியமும். 'சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா', 'அலைபாயுதே' போன்ற ஜனரஞ்சகமான பாடல்களை வாத்தியத்தில் இசைக்கக் கேட்டு அப்பாடல் வாயால் பாடியதே போன்று அமையும் போது தான் நன்றாக உள்ளது எனும் அங்கீகாரம் பெறுகின்றது. அதற்கு எங்கள் அளவுகோல் -reference- குரலிசையே. ஆகவே வாத்தியக் கலைஞருக்கு வாய்ப் பாட்டு ஞானம் எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். குறித்த இராகத்தின் அம்சங்கள், நெளிவு சுளிவுகளைக் காண்பிப்பதோடு அப்பாட்டின் சாகித்தியம்-lyrics-கூறும் பொருளையும் அதே உணர்ச்சிப் பெருக்குடன் ஒப்புவிக்க வேண்டும். இதுவே எமது வாத்திய இசைக்கு சவாலாக அமையும். இவ் அளவுகோலின் அடிப்படையில் வாத்திய ஆள்கை எவ்வாறு அமைகிறதோ அவ்வளவே அவ்வாத்தியக் கலைஞரின் வெற்றி. இதற்கு மிருதங்கக் கலைஞர்களும் விலக்கல்ல. முன்னணியில் திகழும் விரல் விட்டு எண்ணக்கூடிய தொகையினரான மிருதங்கக் கலைஞர்களை மட்டுமே நாம் எல்லோரும் அறிந்திருப்போம். அவர்கள் அனைவருமே தரமான வாய்ப்பாட்டு ஞானம் அமையப் பெற்றவர்களே. ஏனையோர் முன்னணிக்கு வருவதுமில்லை. நாம் அவர்களை அறிந்து கொள்வதுமில்லை. வாய்ப்பாட்டு ஞான அனுசரணையுடன் மிருதங்கத்தில் இசைக்கக்கூடிய 9 ஸ்வரங்களை மட்டுமே கொண்டு உருப்படிக்கு அணி சேர்ப்பார்கள். இதுவே அவர்களின் சவால்.

சாஸ்த்திரத்தின் அடிப்படையில் 7 ஸ்வரங்கள் 12 ஸ்வரங்களாக இயங்குவதை தெரிந்து வைத்திருக்கிறோமல்லவா. ஆனால் ஸ்வரங்கள் இணைக்கப்படும் பாங்கும் ஓர் மேலதிக பரிமாணத்தை உருவாக்கும் என்பதை அறிந்திருக்க வேண்டும். இதுவே எமது இராகங்களின் வேறுபாடுகளுக்கும் தனித்தன்மைக்கும் ஆதாரமாகும்.

**உதாரணம்** : சங்கராபரணம் இராகத்திலும் கரஹரப்பிரியா இராகத்திலும் உள்ள ரிஷபம் (ரி) ஒன்றே. அதாவது, 'சட்சுருதி' ரிஷபம் எனப்படுவது. ஆனாலும், சங்கராபரணத்தில், 'ஸ' வுடன் இணையும் பொழுது ஆரோகணத்தில் 'ரி', 'க' ஸ்தானத்திலிருந்து உற்பத்தியாகும். கரஹரப்பிரியாவிலோ அதே 'ரி' ஆரோஹணத்தில் 'ஸ' விலேயே உற்பத்தியாகும். ஆம், cut இலுள்ள U வுக்கும் put இலுள்ள U வுக்கும் உள்ள வேறுபாடு போலல்லவா இருக்கின்றது என்று குழப்பமாகத்தான் இருக்கும். அதைப் போன்றதே என்று சொல்லலாம்.

அறிவு, கடல் போன்றது. இசையும் அப்படியே. அறிந்து நுகர்ந்து அனுபவிக்க எவ்வளவோ உண்டு. கற்கக் கற்க மேலும் எவ்வளவோ இருக்கிறதே என்ற விரக்தியே மிஞ்சும். மிஞ்ச வேண்டும். This is part and parcel of the pursuit of perfection which, in turn, is an adjunct to Art, be it Music, Dance or painting or whatever.

எமது கர்நாடக இசையானது உலகில் உள்ள இசைப் பாரம்பரியங்கள் எல்லாவற்றிலுமே உன்னதமானது என்பது விவாதிக்கப்பட்டு தாபிக்கப்பட்ட உண்மை என்பதுடன் எம்மொழியான தமிழும் உலகிலேயே பழமை வாய்ந்த மொழி என்பதிலும் நாம் பெருமை கொள்வது தவறே இல்லை எனலாம்.

# கோயில் கலைகளின் காப்பகம்

**திருமதி. அற்புதராணி கிருபராஜ்**

**அற்புதநர்த்தனாலய அதிபர், நாட்டிய முதுகலைமாணி** (M.A in Dance), **பரதகலாவித்தகர்**



கோயில்கள் கலைகளை வளர்க்கும் மையமாக மட்டுமன்றி கலைகளைப் பேணிப்பாதுகாக்கும் காப்பகங்களாகவும் இருந்துள்ளன என்பதை இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், வரலாறுகள், சாசனங்கள் தெட்டத் தெளிவாக காட்டியுள்ளன. அது மட்டுமன்றி மூவேந்தர்களால் கட்டப்பட்ட கோயில்கள் இன்று பார்ப்பவர்கள் பிரமிக்கத்தக்க அளவில் கலை நுட்பத்தோடு வானளாவி உயர்ந்து நிற்பதே தக்க சான்றுகளாகும். கோயில்கள் கலைகளின் உறைவிடம் என்று கூறுமளவிற்கு பரதக் கலை மட்டுமன்றி கட்டடம், சிற்பம், ஓவியம், இசை அனைத்துக் கலைகளும் வளருவதற்கு காரணமாக அமைந்தது கோயில்களே. கோயில்களை கட்டுவித்த தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களும் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இக்காவலர்கள் மக்கள் இறைவழிபாடு செய்வதற்கும், இக்கலைகளைப் போற்றிப் பேணிக் காப்பதற்கென நிர்மாணித்த கற்கோயில்கள் இன்றும் அழியாப் புகழுடன் விளங்குகின்ற கரணசிற்பங்கள். இச்சிற்பங்களை அழகுற செம்மையாக நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்பட்டவாறு சாஸ்திரோகத்தமாக வடிவெடுத்த சிற்பங்கள், சிறப்பு நிலைகளை ஆடிக்காட்டிய ஆடல் மகளிர், இவர்களை ஆட்டுவித்த ஆடலாசிரியர், மன்னர்கள் இவர்கள் யாவரும் போற்றப்பட வேண்டியவர்கள்.

கல்லிலே கலைவண்ணம் கண்டான் தமிழன். கற்கோவில்களைக் கட்டினான். அங்கே பரதக் கலையைப் பிரதிபலிக்கும் அழகிய நாட்டிய கரண நிலைகளை அமைத்தான். பரதக் கலையினைப் பேணிப் பாதுகாத்து வந்த பெருமை ஆலயங்களையே சாரும். இக்கலையின் வளர்ச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும் ஆலயங்கள் பெரும் பங்களிப்பினை நல்கியுள்ளன. ஆலயங்கள் ஆகமவிதிப்படி அமைந்தவை. ஆலயங்கள், விக்கிரகங்களையும், கோபுரங்களையும் தூண்களையும் மதில் சிற்பங்களையும் கொண்டு விளங்குகின்றன. இந்த விக்கிரகங்களிலும், சிற்பங்களிலும் தெய்வீக உணர்வோடு மனிதனின் உணர்வும் சங்கமிக்கும் வகையிலே அவை ஆக்கப்பட்டிக்கின்றன. நடனக் கலையின் தெய்வமாகிய நடராஜரின் அங்க அசைவுகள் நாட்டிய பாவத்துடன் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. கோவில் சிற்பங்கள் நிற்கும் நிலைகளும், அமைந்திருக்கும் பாவமும் நாட்டியக் கலையின் பிரதிபலிப்புகளாகும். சிற்பாசிரியர்களும் விக்கிரகங்களை அமைத்த கலைஞர்களும் வேத சிவாகம அறிவு மட்டுமன்றி சிற்பசாஸ்திர திறனும் பரத சாஸ்திர திறனும் பெற்றிருந்தனர். அதனாலேயே ஆலய சிற்ப விக்கிரகங்கள் யாவும் நாட்டிய நிலைகளைப் புலப்படுத்துவனவாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆகமங்கள் வேதங்களைப் போலவே மிகவும் பழைமையானவை. எனவே நம் முன்னோர்கள் மிகப் பழங்காலத்திலேயே நாட்டியக்கலை பற்றிய சிந்தனையை ஆலயத்துடன் இணைத்துள்ளர் என்பது நன்கு புலனாகிறது. காலவரன் முறைப்படி நோக்கும்போது, சைவ உலகின் கோவிலாகிய சிதம்பரத்திலுள்ள நடராஜர் ஆலயம் குறிப்பிடற்பாலது. இக்கோவில் ஒரு பெரிய நடனக் களஞ்சியமாகும். இங்கு சிவனாடிய 108 கரணங்களும் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன. அவற்றின் கீழே அவற்றுக்கான நாட்டிய சாஸ்திரச் செய்யுட்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இவை பரதநாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி சிதம்பரக் கோவிலில் புராண இதிகாசங்களில் கூறப்படும் இறைவனின் அருள் விளையாடல்களும் நாட்டியத்தின் விகற்பங்களும், கதைச் சிற்பங்களாகக் கோபுரங்களை அழகு செய்கின்றன. இதிலிருந்து கட்டிடக்கலை, நடனக்கலை, சிற்பக்கலை ஆலயங்களில் பேணிக்காப்பது தெட்டத் தெளிவாகின்றது.

ஆலய வழிபாட்டின் முக்கியமானதோர் அங்கமாக நாட்டியம் திகழ்ந்தது. கோவில் வழிபாடானது 'ஷோடசோபசாரம்' எனக் கூறப்படும் 16 அங்கங்களைக் கொண்டது. இதில் "கீதவாத்தியம்" பதினான்காவது அங்கம் எனவும் "நிருத்யோபசாரம்" பதினைந்தாவது ஆகமம் என்றும் ஆகம நூல்கள் கூறுகின்றன. 'சிதம்பர ஷேத்திர சர்வஸ்வம்' என்ற நூலில் சில சிறப்புச் செய்திகள் கூறப்படுகின்றன. அந்தந்த திசைக்கு ஏற்ற கீத நாட்டியத்தை வீதிகளில் ஆடுவர். மற்றும் பரத முனிவர் குறிப்பிடும் பிரா-மணம் முதலிய விலாச நிருத்தியங்களையும் தேவசாதிகள் ஆடுவர் எனவும் கூறப்படுகிறது.

ஆலயங்களிலே இடம்பெற்ற நித்ய, நைமித்தியக் கிரியைகளில் ஆடலும் பாடலும் நன்கு இடம் பெற்றன. வேதகாலத்திலே, அதாவது கி.மு. 2000 ஆண்டு முதல் 500 அல்லது 1000 ஆண்டுகள் வரை நடன நாடகக் கலையானது மலர்ச்சியுற்ற நிலையிலே இருந்தது. அக்கால மக்களின் வாழ்விலே இசை சீரிய நிலையைப் பெற்றிருந்தன. நடனம் ஆலயங்களிலே இடம் பெற்றது. ஆகம விதிப்படி அபிடேகம், ஆராதனை முதலியன முடிந்த பின்னர் இறுதி நிகழ்ச்சியாக நடனம் இறையர்ப்பணமாக ஆடப்பட்டது. இதனைத் தொடர்ந்தே கோவில்களில் நவஸந்தி நாட்டியம் இடம் பெற்றது.

'நவஸந்தி' என்பது மூலமூர்த்தியின் அதிமுகமான கோவில் வாசலில் பிரமானவையும் கிழக்கு முதல் ஈசானம் வரையிலான எட்டுத் திசைகளிலும் இந்திரன் முதல் அட்டத்திக்குப் பாலகர்களையும் உற்சவம் தொடங்கி முடிகின்ற காலம் வரையும் அவ்வாத்தியங்களில் சமூகமாகிக் காவல் புரியும்படி பூசித்து வேண்டிக் கொள்ளும் ஒரு வழிபாடாகும். நவஸந்தி நாட்டியமெனக் கருதப்படும் சமபாதம், புஜங்க லலிதம், சந்தியா நிருத்தம், ஊர்த்துவ பாதம் குஞ்சிதம், புஜங்கம், மண்டலம், தண்டபாதம், புஜங்க திராசம் ஆகிய ஒன்பதும் பிரம சந்தி-இந்திர சந்தி, அக்கினி சந்தி, யம சந்தி, நிருர்த்தி சந்தி, வருண சந்தி, வாயு சந்தி, குபேர சந்தி. ஈசான சந்தி எனும் நவ சந்திகளிலே அவ்வச் சந்திகளுக்குரிய தெய்வங்களைக் குறித்துக் கொடியேற்ற, கொடியிறக்கத் திருவிழாக்களின் போது அவரவர்க்குரிய தாளம், இராகம், பண், நிருத்தம், வாத்தியம் இவற்றிற்கேற்ப ஆடப்பட்டு வந்துள்ளன. வேத காலத்திலே நடனம் பற்றிய குறிப்புகள் ரிக், யசுர், சாம, அதர்வண வேதங்களிலே காணப்படுகின்றன.அட்டதிக்குப் பாலகர்களை எழுந்தருளிவிக்கும் முதல் தினத்திலும் அவரவர்க்குரிய சிறப்பியல்புகள், தாளம், இராகம், நிருத்தம், பண், வாத்தியம் ஆகியன அமையும். இவ்வேளையில் அவ்வவ் கடவுளுக்குரிய வேத சூக்தங்களும் ஓதப்பட்டு அவ்வக் கடவுளுக்குரிய நவஸந்தி கௌத்துவங்களும் பாடியும் ஆடப்பட்டும் வந்தன.

நித்திய நைமீத்தியக் கிரியைகளில் இடம்பெறும் பதினாறு வகை (ஷோடக) உபசாரங்களிலே கீதோபசாரமும் நிருத்யோபசாரமும் குறிப்பிடற்பாலன. திருத்யோபசாரம் முற்காலத்திலே நைமித்தியக் கிரியைகளிலே மட்டுமன்றி நித்தியக் கிரியைகளிலும் இடம் பெற்றன.

இராஜ ராஜன் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயில் கலைகளின் உறைவிடம் என்பதற்கு முக்கிய சான்றாகும். கோயில்களில் நடனக்கலை வளர்ந்தது என்பதற்கு 400 தளிர் சேரிப் பெண்டிர்கள் இருந்தனர் என்பதற்கு சாசனங்கள் தக்க சான்றாகும். தேவரடியார்கள் திருப்பணி செய்தனர். கோயில்களில் தமிழ்க்கூத்து, ஆரியக்கூத்து, சாந்திக்கூத்து ஆடப்பட்டன. பாட்டுக்கற்பிக்க பாணன் இருந்தான். நீலகண்ட யாழ்ப்பாணரின் மரபில் வந்த பாணரைக் கொண்டு தேவாரங்களுக்கான பண்களை இராஜராஜன் வகுப்பித்தான். திருமுறைப்பாக்கள் இசையுடனும் நடனத்துடனும் பயிலப்பட்டன. ஆலயங்களை மையமாக வைத்தே கலைகள் வளர்க்கப்பட்டன. அதுமட்டுமன்றி பல்லவர்கால குடைவரைக் கோயில்கள், மாமல்லபுரச் சிற்பங்கள், கட்டிடக்கலை, சிற்பக்கலைக்கு சிறந்த எடுத்துக் காட்டுக்கள். கோயில்களில் இறைவன் புராண இதிகாச கதைகளைக் கூறும் ஓவியங்கள் சித்தன்ன வாசல் ஓவியம் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

மேலே கூறப்பட்டவற்றை எடுத்துப் பார்க்கும் போது மன்னர்களின் ஆதரவுடன் கோயில்கள் கலைகளின் பொக்கி'ம் என்று கூறும் அளவிற்கு கோயில்களில் உறைவிடமாகி அழியாப் புகழுடன் இன்றும் விளங்குகின்றது என்பது தெட்டத் தெளிவாகின்றது.

# சிறுவருக்கான யோகாசனம்

## Yoga for Children




மகிந்தன் இராசையா

விரிவுரையாளர், தமிழ்த்துறை

அண்ணாமலை கனடா வளாகம்




### பதிநெண் யோக சித்தர்

**வணக்கப் பா**

ஆதி காலத்திலே தில்லையில் திருமுலர்
அழகுமலை இராமதேவர்
அனந்த சயன கும்பமுனி திருப்பதி கொங்கணவர்
கமலமுனி ஆரூர்
சோதி அரங்க சட்டமுனி கருவை கருவூரர்
சுந்தரானந்தர் கூடல்
சொல்லும் எட்டிக்குடியில் வான்மீகரோடு
நற்றாள் காசி நந்திதேவர்
பாதி அரிசங்கரன் கோவில் பாம்பாட்டி
பழனிமலை போகநாதர்
திருப்பரங்குன்றமதில் மச்சமுனி
பதஞ்சலி இராமேசுவரம்
சேதி வைதீசுவரன் கோவில் தன்வந்தரி பொயூர்
கோரக்கர் மாயூரங் குதம்பை
திருவருணையோர் இடைக்காடர் சமாதியிற்
சேர்ந்தனர் எமை காக்கவே
அகத்தியர் கிரியா பாபாஜி பத்ரி சொரூப
சமாதி அடைந்தனர் உலகம் உய்யவே

### HOMAGE TO THE EIGHTEEN SIDDHAS

**Vanakka Paa**

Athi kalathilay thilaiyil Thirumular
Alagumalai Ramadevar (2x)
Ananthasayana Kumbamuni Thirupathi Konkanavar
Kamalamuni Aaroor (2x)
Sothiaranga Sattamuni Karuvai Karoovarar
Sundaranandar Koodal (2x)
Sollum Ettikudiyil Valmikaroodu
Natral kaasi Nandi Devar (2x)
Paathi Arisankaran Kovil Paambatti
Palani Malai Boganathar (3x)
Thirupparankundram Athil Machamuni
Pathanjali Rameswaram (2x)
Sethi Vaitheesswaran Kovil Dhanvanthiri
Poyur Gorakkar Mayurang Kudambai (2x)
Thiruvarunaiyoor Idaikadar
Samadhiyil Sernthanar emai kakkaway (2x)
Agastyar Kriya Babaji Badri Soruba
Samadhi Adainthanar Ulagam Uyyavay (2x)

# WHAT IS YOGA?

The word yoga means 'union' – a joining of the physical, mental and spiritual elements of life. Yoga poses – or asanas as they are called in Sanskrit – were developed in India centuries ago as part of a system of religious philosophy.

Yoga practice included long periods of meditation, for which you needed a trained mind and a strong body. But the poses can be employed as a straight forward form of exercise, not connected with mysticism or esoteric religions.

Yoga poses are not just physical stretches. Performed correctly with breathing, they also tone the internal organs, stimulating the body to function efficiently. The balance of quiet and active poses promotes a stability and serentiy that can be useful for ordinary children, not just those who live in an ashram.

The poses in this book have been adapted to suit the life patterns of Western children. These exercises have certain advantages over other forms, especially for children; they are gently, they are not performance – orientated, and they are not competitive. They can be practiced together by children of varying ages and physical abilities without anyone feeling inferior or inadequate. Yoga is not about attaining perfect poses. It is about doing what is right for your body. Every child can succeed because every child can improve.

Yoga has now become a mainstream activity for adults in the West, and it is one of the few forms of exercise that parents and children can enjoy together. They can all learn at the same time and profit equally from the experience.

Bodies are meant to move. We need to move simply in order to stay healthy; for our joints to function properly; for our ciruclation to flow and our digestion to work efficiently. This applies to children



every bit as much as it does to adults. Yet children nowadays – especially urban Western children are much less active than they used to be. They spend a great deal of time sitting still in front of the television or the computer screen, and are driven everywhere by car or bus, rather than walking as they once would have done.

## COMMON SENSE OF THE BODY

Children need exercise, but few people realize that the wrong kind of exercise can be as damaging as no exercise at all. Too often children are encouraged to take up vigorous and competitive exercise at a young age. unaware of the long-term problems it may cause.

When children are still growing, their bones are soft and vulnerable. Some forms of dance and gymnastics which work a young body hard can result in hip and spine problems later, not to mention arthritis. Running may well be wonderful exercise, but running with collapsed arches or hunched shoulders can do more harm than good in the long term.

In today's health-conscious world there is no shortage of advice on keeping in shape. But among all the health hype, real physical education or the teaching of a general knowledge of the body is a rare thing.

Few people of any age have the slightest idea about posture or the mechanics of their own bodies. It is as if the human biology once learned at school was not about our own bodies at all but about the structure of a remote species for which we bear no responsibility. We seem to have opted out of responsibility for our physical selves.

The result? imbalance and instability. We spend carelessly the only capital we were born with, not noticing that our spines are becoming distorted from their natural balance or that unsuitable shoes are ruining our feet.

Physical education and sports at school are geared towards competition and performance. The 'character-building' part of such endeavors is all too often considered to be more important than simply learning how to keep the body fit for life.

Children are pushed often beyond their natural limits. Look, on the one hand, at how Olympic performers are burned out in their youth, and on the other, at the misery of some less gifted children forced to participate in team games.

## WHAT YOGA DOES FOR YOU

The stretch and relaxation techniques which are part of yoga can be an ideal way for children to start enjoying movement and exercise. They can be of benefit to Children of all ages, from children as young as five or six who have already lost the flexibility they had as babies to teenagers contending with pressures of school and the emotional problems of adolescence.

Yoga exercises are not ends in themselves. They do certain very specific things not just for your body but for your whole sense of mental and physical well-being. They enhance your flexibility; they promote your strength and stamina, stability and balance; they help you to relax but at the same time to become more concentrated, more clear – headed, less distracted; to become alert while being tranquil.

Not forcing yourself further than is realistic is an important lesson. Yoga will help children learn about the body and how it works from a very early age. It will help them develop that common sense of the body which is the perfect foundation for their well – being throughout their lives.

## WORK

In the chapters entitled 'Work' poses have been chosen to move, bend and stretch the body. Each part of the body is tackled. Learning how to stand and stretch, using the pull of gravity, helps with balance and concentration. All the joints will become strong and flexible. These poses are grouped into standing poses, all-fours poses, balancing poses, sitting poses, upside down poses and back bends.

## REST

This section concentrates on the need for quiet. As the body gets tense so does the mind, particulary a child's mind over stimulated by the pace of life, television, computer games and noise. By learning to breathe deeply, and to lie and sit still without wiggling about, they are given the change to appreciate time and space to be silent.

## PLAY

This section offers games for children to enjoy in a group as well as for parents to play with their children. They have been devised using the poses explained in the previous chapters and encourage coordination and teamwork. They also allow children to jump, run and generally let off steam.

## NEEDS

Yoga is particularly helpful for those with special needs, whether they are the result of bad posture or sporting practices leading to tension and stiffness, or whether they stem from a more serious disability. This section includes advice for correcting stiffness as well as simple poses to benefit disabled children. In some cases it is amazing to discover that the disable child is more flexible than the so –called able bodied.

Sometimes, too a disabled child can find it easier to be quiet and centeed. The shared Yoga class is an occasion for everybody to learn from one another.

## PRACTICING YOGA

Because children have a short concentration span, time spent learning yoga must be fun. As a star, the positions in this book have been given special names which may not always be exact translations from the Sanskrit (though the actual Sankrit is also given for those who are interested) but they sound as if they promise enjoyment and children will find them more approachable.

It is important to be properly prepared for yoga. Wear comfortable clothes, ones that are stretchy but not tight. – such as the T-Shirts, tights and shorts worn in our pictures. Practice in bare feet on a non-slip surface such as a wooden or cork-tiled floor, or certain types of carpet. If the room is really cold, have a warm. sweater and socks ready to put on when resting at the end of the session. No special equipment is needed for yoga though certain props may come in useful. A stool or chair is helpful for some people in some poses. mind a belt in others. For some of the upside-down poses, and some sitting poses you will need a mat or folded blanket.

## BASIC PRINCIPLES

When they are learning yoga all children should be supervised until they understand what they are doing. Working in a group with a parent or adult is the best way to learn the basic principles.

Eventually older children should be able to follow the instructions for themselves. Look at the photographs and read the instructions carefully. The positions should not be held for too long a couple of breaths for small children; older children can stay a little longer provided they continue to stretch comfortably. You should not freeze in an uncomfortable position. It is not an endurance test. Hold poses for an equal time on each side of the body. Breathe out as you go into a pose, otherwise breathe naturally.

A yoga session should last as long as everybody is enjoying it but at most for about 45 minutes, and the last ten minutes of that should be spent doing something quiet. Adults usually practice evey day, but once a week is fine for children. A teen-ager under study stress, however, would also benefit from praciticing every day, if only for ten minutes.

The poses in this book have been carefully chosen to be safe and suitable for children. But it is important to follow the instructions and not to allow children to push themselves too far. If in doubt consult a

doctor. In some yoga books you will find other, more advanced poses and these should not be attempted by children. Headstands and extreme back bends are inadvisable as children's bones are still soft and the neck is vulnerable. Don't forget that rest should always follow work poses.

Your body is a connected whole. Each bit affects the next, Remember the song about you knee-bone being connected to you thighbone, you thighbone to your hipbone, and so on? All the parts of the body must move easily in order for the body to function to its full potential. The work poses are the ones which stretch all these different parts. They grow organically from a rooted base so that the spine becomes taller. This is true whether the pose is a standing pose, or on all fours, balancing, sitting, upside down or a back bend. When they are functioning well the parts of the body move in different ways.

## SPINE

The spine is the structural center of the body and it should be looked after from childhood on. It should never be squashed or distorted or compressed. It balances in four curves at the neck, the chest, the waist and the hips and is made up of a string of small bones, separated by discs of cartilage. This is what makes the spine so flexible, but it is this very flexibility that makes it possible for bad habits to distort it. A healthy spine should be able to lengthen and move in different direction, forwards, backwards, sideways and twisting – while keeping straight at the same time.

## FEET

Feet are the root of all our standing movements the foundation of every pose. How your feel work affects how you walk, run, stand and balance. How your feet carry your weight ultimately affects the action of your knees, hips and ankles.

Feet are shock absorbers as well as being the foundation of all standing movements. Feet should be strong, firm, flexible and arched. When you stand put your weight on your heels so that you can spread your toes out wide and the arches of your feet can be strong and springly. Standing correctly grounded will allow the rest of your body to relax and stay free.

## SHOULDERS

Shoulders are the most mobile joints in the body. As long as they are relaxed the arms can move freely in all directions. If shoulders are moving properly you should easily be able to hold both elbows behind your back, and stretch your arms straight above your head.

## HIPS

The hips are ball and socket joints and should have a wide range of movement. They are also weight bearing joints and must be working symmetrically if the whole body is not to be thrown out of line. Sitting poses and upside down poses help to develop mobility.

## LEGS AND KNEES

The main movement in the legs comes from the hips. Everyone should be able to touch their toes by bending forward from the hips with knees straight. Tight hamstrings can prevent this and cause strain on the lower back.

Knees are hinge joints and should be able to bend fully and straighten.

## GRAVITY

Gravity it an important factor in all movement. You need to understand how the body is grounded to the earth. If you stand really centered you will feel how your body spontaneously grows taller. In contrast, continual bad posture can take you out of alignment.

## BREATHING

Learning to breathe is as important as understanding how your body moves. The breath, which comes from your center, helps you to stretch and elongate. Always breathe out as you go into a pose.

## THE POSES

The work poses are divided into sex groups; standing, all fours, balancing, sitting, upside down and back bends. Each position needs firm roots so that you can stretch evenly and grow tall and staight. The roots of a standing pose are the feet, those of a sitting pose the sitting bones, those of a balancing pose the hands, those of inverted poses the elbows. In each case the roots of the position go down into the ground so that the spine stretches as you breathe out. Each practice session should contain poses from several of these groups, and work poses should be followed by rest.

**Standing** In these poses the feet are the roots of the pose, and the spine lengthens as you stand and walk and balance. Learning to be grounded as well as relaxed when you are a child is more valuable than having to correct bad posture by learning a technique when you are older.

**All fours** Some of the Yoga poses coppy the movements of animals. Many postural problems arise because you balance badly on two feet and the spine does not have a chance to stretch. Here on all fours you can lengthen like a cat or dog and iron out the bends and stiffnesses in your spine.

**Balancing** These are poses where you shift the weight on to your hands in order to balance. Children develop coordination and strenght from these exercises although they are not suitable for the under fives.

**Sitting** It is vital to learn how to sit properly with flexible hips and the spine long and free. Sitting poses work mainly on the hips. Their roots are the two sitting bones – the knobbly bones under the pelvis. If the floor is hard you may need a mat or blanket for these poses.

**Upside** down Turning upside down reverses the pull of gravity and is a wonderful way of stretching. Upside down you can stretch legs and hips more easily because they are not bearing any weight. These poses are also a way of keeping the upper spine and neck flexible. When you are practicing them always lengthen your neck with your shoulders as you go up. You should not compress the neck in upside down poses.

**Back** bends Back bends are invigorationg, and will also keep you flexible. But doing this movement badly causes more problems than with any other pose. The danger is that, in an effort to bend, you may forget to lengthen the spine. This can compress the back of the waist and neck and cause stiffness and distortion of the spine later. It is also important to use a nonslip mat for these poses if the floor is slippery. Pay attention to the instructions and be sure to keep your heels down and feet parallel when doing Wheel. This way the spine can lengthen and the lower back is free.

# Meditation & Relaxation

Suba Nagulananthan
P.G. Diploma in Yoga, Annamalai University; R.Y.T 200 with Yoga Alliance.



**When can you rest? When is rest possible?**

Rest is only possible, when you have stopped all activities. When you stop moving around, when you stop working, thinking, talking, seeing, hearing, smelling, tasting… - when all these activities stop - then you get rest. When you stop all voluntary activities, then, you rest. You are left with just the involuntary activities (breathing, beating of the heart, digestion of the food by the stomach, blood circulation, etc.) – this is sleep.

Sleep gives rest, but is it total rest? Recollect your own experience, when you did not have deep sleep. There was some restlessness, agitation, or desire. The mind was planning, and planning, and planning, your mind was not free. As long as some desires linger in your mind, you cannot be in total rest.

Only when the mind settles down, meditation happens. Meditation gives total rest and relaxation. Meditation is not a part of any religion; it is a science, which means that the process of meditation follows a particular order, has definite principles, and produces results that can be verified.

In the Patanjali Yogasutras, the great sage Patanjali expounds on the eight limbs of Yoga. These include Yama, Niyama, Asana, Pranayama, Pratyahara, Dharana , Dhyan and Samadhi.

The first six limbs are a preparation for the Dhayana – **meditation.**

According to Patanjali, the ripples in the mind should get settled before meditation happens. Yet our routine activities are enough to create a legion of thoughts in our mind. These thoughts come like a train of waves that prevent our mind from settling down and going deep within; sometimes a gentle guidance is of great assistance

Meditation is the art of doing nothing… and the rest in meditation is deeper than the deepest sleep that you can ever have! It is several times deeper, because in sleep, desires still linger somewhere. But in meditation, you transcend all desires. This brings such coolness to the brain! It's like overhauling or servicing the whole body-mind complex.

Let go and see. Just this understanding, and a few days of the continuous practice of meditation - that brings so much relaxation.

**Meditation is:**

Letting go of the anger from the past
Letting go of the events of the past
Letting go of all the planning for the future
Accepting this moment
Living every moment totally - with depth

In this process many thoughts will arise in your mind: "Am I doing this right? When will this be over? My neck hurts." Hundreds of thoughts may come before you and each thought will call forth some further response: a judgment, an action, an interest in pursuing the thought further, an attempt to get rid of the thought.

At this point, if you simply remain aware of this process instead of reacting to the thought, you will become aware of how restless your mind is. But if you simply attend to those thoughts when they arise, without reacting, or if you react and attend to the reaction, then they cannot really disturb you. Remember—it is not the thoughts that disturb you, but your reaction to them.

Meditation is a universal requirement of the human body. It is a system of commitment, not commandment. You are committing to yourself, to your path, and to the goal of knowing yourself. It can change the quality of your life.

Harvard researchers and others continued to study meditation and found that it can lower blood pressure, cholesterol and the risk of heart disease and stroke, can help relieve stress, depression, insomnia, sleeplessness, anxiety and worry, and can increase productivity, learning, happiness, well being and inner peace

When you meditate, you give yourself an inner vacation.

**If You Want More Inner Peace, Well Being, And Happiness In Your Life, Learn To Meditate.**

OM SHANTHY




MAHAA GANESHETHIRAM
மகா கணேஷேஸ்த்திரம்
Summer Classes
Available Under
NEYVELI B.VENKATESH
Classes are beginning in your neighbourhood
மகா கணேஷேஸ்த்திரத்தின் புதிய மிருதங்க
வகுப்புக்கள் ஆரம்பமாகி உள்ளது
தமிழ் இசைகலாமன்றம் மற்றும் தமிழ் கலை தொழில்நுட்ப கல்லூரியின்
பொது பரீட்சைகளுக்கும் மாணவர்கள் தயார் செய்யப்படுவார்கள்.
ஆண்டு விழாக்கள், அரங்கேற்றம் மற்றும் கலை நிகழ்ச்சிகள்
என்பற்றில் ஈடுபடுத்தி சிறந்த முறையில் வழிநடத்தப்படுவார்கள்.
மேலதிக தொடர்புகளுக்கு:
ஆசிரியர் "மிருதங்க கலாஜோதி"
இணுவையூர் கணேஸதாசன் மகாதேவன்
416 918 0246 (Kanesh)

கனடாவின் 150 வருட நிகழ்வில் தனது முதலாவது ஆண்டு மலரினை வெளியிடும் அண்ணாமலை கனடா வளாக மாணவரின் விழாவிற்கு எமது வாழ்த்துக்கள்!

MARSHI
TAX SERVICES

- Personal Tax
- Business Tax
- Rental
- Self Employed
- Co-operation
- Disability Claim

E-file

HST / PST Filing
Payroll, Monthly Remittance, T4 Slips
Bookkeeping

Free Consultation
Tax Problems Past or Present,
Disability haven't filed? Penalities

**We can help, Call Us**

**Shiyamala Mahindan | Mahindan Rasiah**
**Tel: 416-754-0860 Fax: 416-291-8960**

52 Lamont Ave, Scarborough, ON M1S 1A9

# All Kind of Printing Needs....

brightsun

Print - Signs - Graphics - Photos



**Tel: 416-845-6565**

**brightsun2000@gmail.com**

120 Dynamic Drive, Unit 23
(Markham & McNicoll)
Scarborough, ON. M1V 5C8

# நடனத்திலே நெறியாள்கை

**திருமதி. சூரியகலா சந்திரிகா ஜீவானந்தன்**
**உதவி விரிவுரையாளர், அண்ணாமலை கனடா வளாகம்**



நாட்டிய நெறியாள்கை என்பது ஒரு நாட்டியக் கலைஞனின் தனித்துவமான ஆக்கத்திறன் கலையாகும். இது இவர்களது ஆக்கத்திறமையினை வெளிக் கொணர்வதாக உள்ளது. சிறந்த ஆடற்கலைஞராக இருக்கும் ஒருவர், சிறந்த நெறியாள்கையாவார் என்று சொல்ல முடியாது. அதே சமயம் சிறந்த ஆசிரியராக இருப்பவர் சிறந்த நாட்டிய உருவாக்கம் அறிந்தவர் என்று சொல்ல முடியாது.
சிறந்த நாட்டியக் கலைஞர் ஒருவர் சிறந்த குருவாகவும் இருந்து, அவரது ஆக்கத்திறன் அறிவும் மேலோங்கியிருப்பின் அவர் ஒரு பரிபூரணமான நாட்டிய ஆசான் என்றே கூறலாம்.

நாட்டிய நெறியாள்கையாளர்கள் அக்கலையுடனான நீண்ட கால தொடர்பு, விடாமுயற்சி, அயராத அர்ப்பணம், தளராத தன்னம்பிக்கை, ஆடற்கலையில் நல்ல அனுபவம், அக்கலையிலுள்ள அதீத ஈடுபாடு போன்ற அனைத்து விடயங்களும் ஒருங்கே கொண்டிருக்கக் கூடியவர்களாக இருப்பார்கள்.
நாட்டிய நெறியாள்கையாளர்கள் தாளப்பிரமாணம், காலப்பிரமாணம் தாளலயம் போன்ற விடயங்களை நன்கு அறிந்திருக்க வேண்டியது மிக இன்றியமையாத அம்சமாகும். நிறுத்த உருப்படிகளை அமைக்கும் போது ஆடல் அடவுத் துணுக்குகளை நன்கு அறிந்து தாள, கால இடைவெளிகளுக்கு அமைவாகவும், அடவுகளை ஒன்றுடனொன்று இணைக்கும் போது அவ்வடவுகள் காலக்கட்டுப்பாட்டுக்குள் நன்கு அமையும் வண்ணம் அமைக்க வேண்டியது அவசியமாகும். அடவுத் துணுக்குகளை, அடவு உத்திகளைச் சரளமாகப் பின்னிப் பிணைத்து நாட்டியத்தில் அதை கையாளக் கூடியவர்களாக விளங்குதல் வேண்டும்.

மிருதங்க சொற்கட்டுகளுக்கேற்ப ஜதிகளின் வல்லின, மெல்லினங்களுக்கேற்ப தமது அடவுக்கோர்வைகள் அமைந்திருக்க வேண்டும். இதுவே நாம் ஸ்வரக் கோர்வைகளுக்கு கோர்வை அமைப்பில் அடவுகளைத் தொகுக்க வேண்டுமாயின் அங்கும் மேற்கூறிய விதமாகவே, ஸ்வர அமைப்பிற்கேற்ப ஆடல் உத்திகளைப் பிரயோகிக்க வேண்டும்.

நிருத்தியப் பிரிவிலே இடம்பெறக் கூடிய பாவமானது ஒரு நெறியாள்கையாளரின் நெறியாள்கைக்கு சவால் என்றே சொல்லலாம். அபிநய உருப்படிகளிலே இடம்பெறும், பாவம் அல்லது சுவை என்று கூறக்கூடிய உணர்ச்சிகளை ஒன்று திரட்டி அதில் நெறியாள்கையாளரின் கற்பனைத்திறனையும் இலக்கியத்திலிருக்கும் நுண்ணறிவினையும் பயன்படுத்தி, பாடல் வரிகளுக்கேற்றவாறு அர்த்தபூர்வமாக பாவத்தினை வெளிக்கொண்டு வரும் வகையில் ஆக்கத்திறன் மிளிர வேண்டும்.
பாடல் தெரிவு என்பது நாட்டிய நெறியாள்கையாளர் அறிந்திருக்க வேண்டிய விடயங்களில் மிக முக்கியமானதொன்றாகும். நாட்டியக்கலைஞரின் வயது, அனுபவம் போன்றவற்றினை கருத்திற் கொண்டு பாடலைத் தெரிவு செய்ய வேண்டும். பருவமெய்தாத சிறுபிள்ளைகளுக்கு நாயக நாயகி பாவ அடிப்படையில் சிருங்கார ரஸம் பொருந்திய உருப்படிகளை தெரிவு செய்தல் பொருத்தமல்ல. பருவமடைந்த பெண்களுக்கு இவ்வகையான சிருங்கார ரஸம் பொருந்திய பாடல்களை தெரிவு செய்தல் நன்று. உதாரணமாக ஜாவளி அ்ட்டபதி போன்ற உருப்படிகளை நெறியாள்கை செய்யும் போது இவர்களுக்கேற்ப சஞ்சாரி பாவங்களாகட்டும், பத அர்த்த அபிநயங்களாகட்டும், காதல் ரஸம் மிளிர அமைப்பது பொருத்தமானது.

ஆக்கத்திறன் என்பது அவரவரது அறிவுசார்ந்த அனுபவம் சார்ந்த ஒரு விடயமாகும். அத்துடன் ஒரு பாடலை தெரிவு செய்யும் போது நிச்சயமாக அப்பாடலின் வசனகர்த்தா யாரென்பதும் அப்பாடலின் அர்த்தம் நன்கு தெரிந்து அதற்கு நாட்டிய அமைப்பு செய்தல் அவசியமாகும்.

இன்னுமொரு முக்கியமான விடயம் சாஸ்த்திரீய சங்கீத ஞானம் ஒரு நாட்டிய நெறியாள்கையாளருக்கு மிகவும் இன்றியமையாதது. இதன்படி சங்கீதத்தின் உயிர்நாடியான தாளம் பற்றிய அடிப்படை அறிவு நாட்டியத்திற்கு இன்றியமையாததாகும். அடிப்படைத் தாளங்கள் ஏழு. துருவதாளம், மட்டிய தாளம், ரூபக தாளம், திரிபுடை தாளம், ஜம்ப தாளம், அட தாளம், ஏக தாளம் ஆகியன. இவை பொதுப்படையில் சப்த தாளங்கள் என அழைக்கப்படுகின்றது. இவ் ஏழு தாளங்களும் ஐந்து ஜாதி பேதங்களான திஸ்ரம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீர்ணம் ஆகிய ஜதிகளினால் விரிவடைந்து 35 தாளங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. இந்த 35 தாளங்களும் மறுபடியும் பஞ்ச ஜதிபேதங்களால் மேலும் 175 தாளங்களாக விரிவடைகின்றன. தாளத்துடன் பாட்டு எடுக்கும் முறை கிரகம் அல்லது எடுப்பு என்றும் தாளத்திற்கு முன் பாட்டினைத் தொடங்குவது அதீதம் என்றும் தாளத்திற்குப் பின் பாட்டினைத் தொடங்கினால் அது அநாகதம் என்றும், தாளமும் பாட்டும் ஒரு சேர தொடங்குவது சமம் என்றும், தாள ஆரம்ப முதல் சர்ப்ப கதியிலேயே வருவது வி'மம் என்றும் பொதுவாக விளங்கிக் கொள்ளப்படுகின்றது. சமத்தில் அல்லது அதீதத்திலேயே பெருவாரியாக நெறியாக்கம் இடம்பெறுகின்றது.

தாளத்திலே காலப்பிரமாணம் பற்றிய அடிப்படை அறிவு முக்கியமாகும். விளம்பித எனும் முதலாம் காலமும் மத்திமம் எனும் இரண்டாம் காலமும் துரிதகாலமெனும் மூன்றாம் காலமும் விளம்பிதத்தின் இரட்டிப்பு மத்தியமும் மத்திமத்தின் இரட்டிப்பு துரிதமும் ஆகும். தாளத்திலே லயம் எனும் அம்சமானது தாளத்தின் ஸ்திரமான, திடமான, கண்டிப்பான நிலைப்பாடாகும். கால பேதங்களிலே தாளத்தில் இடம்பெறும் கலை எனும் அம்சத்தினை நிருணயிக்கும் அடிப்படை அங்கமாகம். எனவே தாளம் எனும் அம்சமானது தாளம், கலை, லயம், ஜதி ஆகிய நிலைப்பாடுகளுடன் கட்டுண்டு நாட்டியத்தில் கையாளுதல் நடைமுறை வழக்காகவுள்ளது.

தாளத்தின் காலப்பிரமாணங்களையும் நடைபேதம் மாறுபடுவதனையும் கருத்திற் கொண்டு லய வித்தியாரங்களைப் பிரயோகித்துச் செய்யும் நாட்டிய நெறியாள்கை மிகவும் அழகாக இருக்கும். தேவைக்கேற்ப காலப் பிரமாணங்களை குறில், நெடில் ஆகிய காலப் பேதங்களுடன் கலந்து கையாளப்படும் முறைமையே ஷலய விந்தியாசம்' என நாட்டியத்தில் நாம் கொள்ளலாம். இவ்வாறாக கையாளப்படும் முறைமை நடன அமைப்பு அல்லது நடன நெறியாக்கம் என்று கூறப்படுகின்றது.

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு.**

Friendship hastens help in mishaps
Like hands picking up dress that slips.
(788)

# சித்தர்கள் கண்ட தத்துவ முத்துகள்

யோகா அருள்சுப்பிரமணியம். M.Sc. in Yoga



பரந்து பட்ட நிலம், குளிர்ச்சியூட்டும் நீர், வெப்பம் தரும் தீ, தென்றலென உடலை வருடும் காற்று, விரிந்து நிற்கும் ஆகாயம் இவை ஐந்தும் இயற்கை எமக்களித்த இன்பம் தரும் கொடைகள். இந்த நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியவற்றால் ஆனதே இந்த மனித உடல். மனித உடல் அழியும் போதும் மனிதன் இவற்றினுள் அடங்கி விடுகிறான். இதுவே இயற்கையின் தத்துவம். இவற்றை உணராது, இவை பற்றி அறியாது நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவற்றை உணர்ந்து, அறிந்து உன்னத வாழ்வினை வாழ்ந்துள்ளார்கள் பதினெண் சித்தர்கள். தாங்கள் வாழ்ந்த பயனுள்ள வாழ்வினை இவ்வுலகிலுள்ள மற்றையோரும் வாழ வேண்டும் எனும் பேருளங்கொண்டு இவ்வுலகிற்கும் உணர்த்திச் சென்றுள்ளார்கள். இதனையே

“நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே” (திருமந்திரம் 85)

என்ற பாடல் மூலம் திருமூலர் எடுத்துக் கூறினார்.

இவ்வாறு பதினெண் சித்தர்கள் கூறிய அனைத்தும் பயனுள்ள தத்துவ முத்துக்களாக விளைந்துள்ளதை நாம் காணக் கூடியதாக உள்ளது. இந்த சித்தர்கள் யார் என நாம் நோக்குவோமானால் அவர்கள் பெருமைகளை அறிந்து கொள்வோம். யோக மார்க்கத்தில் நின்று சித்தி பெற்றவர்களையே சித்தர்கள் என்று கூறினார்கள் என்பது புலனாகும். சித் என்றால் அறிவு. சித்தை உடையவர்கள் சித்தர்கள் என்றார்கள். சித்தர்கள் என்போர் அறிவு படைத்தவர்கள், மேதைகள், அறிஞர்கள், பேரறிவு படைத்தவர்கள், நுண்அறிவு வாய்ந்தவர்கள, விஞ்ஞானிகள், மெய் ஞானிகள் எனப் பல அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் கூறியுள்ளனர். இந்த சித்தர்கள் எண் வகையான சித்திகள் பெற்றவர்கள் எனக் குறப்பிடுகின்றனர். அவையாவன: அணிமா, மகிமா, லகிமா, பிராத்த, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம், கரிமா என்பனவாகும்.

1. **அணிமா:** அணுவைக்காட்டிலும் மிகச்சிறுய உருவிலே உலவும் ஆற்றல்
2. **மகிமா:** மலையிலும் பெரிய உருப்பெற்று நிற்கும் ஆற்றல்
3. **லகிமா:** உடம்பைக் கனமாக இல்லாமல் இலேசாகச் செய்து கொள்ளுதலும் நீரிலும் சேற்றிலும் காற்றுப்போல விரைந்து செல்லும் ஆற்றலும்
4. **பிராத்தி:** எதை நினைத்தாலும் எதை விரும்பினாலும் அதை அடையும் வல்லமை
5. **பிராகாமியம்:** நினைப்பின் வலிமையாலும் ஆற்றலாலும் எல்லாவற்றையும் படைக்கும் சக்தி
6. **ஈசத்துவம்:** எல்லோரும் தன்னை வணங்கும்படியான தெய்வத்தன்மை அடைதல்
7. **வசித்துவம்:** உலகம் முழுவதையும் தன் வசப்படுத்தி நடத்தும் ஆற்றல்
8. **கரிமா:** ஐம்புலன்கள் நுகரும் இன்ப துன்பங்களை பற்றிக் கவலைப்படாமல் இருத்தல்.

**பதினெண் சித்தர்கள் என்போர்:**

1) திருமூலர் 2) இராமதேவர் 3) கும்பமுனி 4) இடைக்காடர் 5) தன்வந்திரி 6) வான்மீகி 7) கமலமுனி 8) போகநாதர் 9) மச்சமுனி 10) கொங்கணர் 11) பதஞ்சலி 12) நந்திதேவர் 13) போதகுரு 14 )பாம்பாட்டிச்சித்தர் 15) சட்டைமுனி 16) சுந்தரானந்ததேவர் 17) குதம்பைச்சித்தர் 18) கோரக்கர் என்று கூறுகின்றனர்.

ஒரு மனிதன் பூரணமான வாழ்வை வாழ்கிறான் என்றால் ஆரோக்கியமான உடல் நிலை இருக்கவேண்டும். ஒருவன் வேறு எத்தனை வசதிகளைப் பெற்றிருந்தாலும் உடல் நிலை குன்றிவிட்டால் எதையுமே அனுபவிக்க முடியாது. இன்றைய விஞ்ஞான உலகம் கோடானு கோடிக் கணக்கில் பணத்தைக் கொட்டி புதிய கண்டுபிடிப்புகள் என்னும் பேரிலே நடைமுறைப்படுத்தும் மருத்துவமுறைகள் எல்லாம் இந்த சித்தர்களால் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எளிய முறையில் கையாளப்பட்டு, காப்பாற்றி இன்ப மயமான வாழ்வை, இயற்கையுடன் ஒன்றிவாழும் வாழ்வை, இவ்வுலகிற்கு அளித்து உள்ளனர் என்பதை அறியும்போது நாம் வியப்படையாதிருக்க முடியாது. இச்சித்தர் ஒருவருக்கு ஒரு நோய் வந்தபோது அதை அந்த நோயின் வேரிலிருந்து களைந்து எடுத்து பூரணமாக அந்நோய் திரும்பவும் வராதவாறு குணமாக்கிய தன்மையை நாம் கண்டறியக் கூடியதாக உள்ளது. இதையே வள்ளுவரும்,

நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பக் செயல். (குறள் 948)

எனும் குறளிலே குறிப்பிட்டுள்ளார்.

சித்த வைத்தியத்தில் வெகு தெளிவாக மனித உடல் வாதம், பித்தம், கபம் சமநிலை பிறழும் போதே நோய்கள் ஏற்படுகின்றன என்பதையும் அவற்றினை சீர் செய்ய அனைத்து நோய்களும் பறந்தோடிவிடும் என்பதையும் மிகவும் தெளிவாகக் கூறுகின்றனர்.

அத்துடன் சித்த வைத்தியத்தில் கூறப்படுவது மணி, மந்திரம், மருந்து என்பன. மணி எனக் குறிப்பிடப்படுவது சோதிடமாகும். சித்த வைத்தியம் பச்சிலைகள், வேர்கள், கிழங்குகள், காய்கள், விதைகள் என்பவற்றால் ஆக்கப்படும் மருந்துகளைக் கொண்டது. இவைகள் எல்லாக் காலங்களிலும் எடுக்கக் கூடியன அல்ல.

கால நிலையின் வெட்ப தட்பங்களை ஒட்டியே இவற்றினை எடுக்க முடியும். ஆகவே மணி(சோதிடம்) அறிந்தவராக இருக்க வேண்டும். அடுத்து மந்திரம் - மந்திரங்களைப் பற்றியும் அவற்றை உச்சரிக்கும் விதத்திலுள்ள தாக்கங்கள்இ அவைகள் மனித மனத்தில் ஆழப் பதியுங்கால் ஏற்படும் சிறந்த பயன்கள் பற்றியும் அவர்கள் பாடல்களில் ஆழமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளதை நாம் காணலாம். இதை,

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும்
மறைமொழி தானே மந்திரம் என்ப." (தொல்-செய்யுளியல்: 480)

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தினால் அறிந்து கொள்ளலாம். முனிவர்கள் கட்டளைகளில் கூறி வைத்திருக்கும் பொருள் மறைந்திருக்கும். மொழியே மந்திரமாகும். இதனால் மணியும் மந்திரமும் சிறப்புக்கொண்டு மருந்துசெய்து சித்தர்கள் அன்றைய சமூகம் வளம் நிறைந்த சமூகமாக வாழவழி வகுத்துக் கொடுத்திருந்தனர் என்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

உடம்பையும் உயிரையும் ஒன்றாகக் கண்டது அன்றைய நிலை. உடம்பிற்கு ஒரு நோய் வந்தால் அது உள்ளத்தையும் சிதைக்கும் என்பதைத் தெளிவாக முதலிற் கூறியது சித்தரின் வைத்தியமே. உடம்பில்லாமல் உயிர்வாழ முடியாது. இரண்டும் தனித்தனியாக இயங்குவதென்பது முடியாத காரியம். உடம்பிலே தோன்றி உடம்புடன் வாழ்வதென்பதே உயிர் எனப்படுவது. உடம்பு அழிந்தால் உயிரும் அழிந்து போகும். உடம்பை பாதுகாப்பதே உயிரைப் பாதுகாப்பது என்பது சித்தரின் தத்துவம். இதனையே திருமூலர்

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே (திருமந்திரம் 724)

எனக் குறிப்பிட்டிருக்கின்றார்.

வைத்தியம் மட்டுமன்றி சமசர ஞானிகளாக, மனிதாபிமானிகளாக, தத்துவ நெறியாளர்களாக வாழ்ந்துள்ளார்கள். இவர்கள் மனிதன் ஒழுக்கந் தவறாது வாழவேண்டும் என்பதை வலியுறுத்திப் பாடியுள்ளார்கள். நல்லொழுக்கம் உள்ளவர்களே யோகப் பயிற்சியில் வெற்றி பெறமுடியும் என்பதை பல பாடல்களிலும் தெளிவுற விளக்கியுள்ளார்கள். யோகத்தின் சிறப்பினைக் கூறும் நெறியாளர்களாக அன்றைய காலத்திற்கேற்றக் கருத்துமிக்க பாடல்களைப் பல சித்தர்களும் பாடியிருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

பாம்பாட்டிச் சித்தரின் முதற் பாடல் எனக் குறிப்பிடப்படும்

தெளிந்து தெளிந்து தெளிந்து ஆடு பாம்பே! சிவன்
சீர்பாதம் கண்டு தெளிந்து ஆடு பாம்பே!
ஆடு பாம்பே! தெளிந்து ஆடு பாம்பே! சிவன்
அடியினைக் கண்டோம் என்று ஆடு பாம்பே!

சந்த நயமும் கருத்து ஆழமும் உள்ள இப்பாடல் பலராலும் ஏன் சங்கீத வித்துவான்களாலும் கூட மேடைகளில் விரும்பிப் பாடப்படும் பாடலாக விளங்குவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இப்பாடலின் மாதிரியிலே இதே மெட்டில் கருத்தாழம் மிக்க மிக எளிமையான பாடல்கள் பல இருப்பதை நாம் காணலாம். இதைப் பல அறிஞரும் குறிப்பிட்டெழுதியிருப்பதை பார்க்கும்போது இப் பாடல்களின் சிறப்புகளை நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. அத்தடன் சிறப்பாக இவர் பாடல்கள் எல்லாமே சுவை மிக்கவனவாகவும் நகைச்சுவை ததும்பும் பாடல்களாகவும் நல்லொழுக்கம் கூறும் கருத்துக் கொண்டவையாகவும் அமைந்துள்ளன.

அடுத்து இடைக்காட்டுச் சித்தரைப் பற்றிக் கூறப்போனால் இன்று பல நூல்களிலும் மேற்கோள் காட்டப்பட்டதும் பல மேடைகளில் பல அறிஞர்களாலும் கூறப்படும் வசனமான

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என்பதும் இவராற் பாடப் பெற்ற திருவள்ளுவமாலைச் செய்யுள்களில் ஒன்றாகும். இவர் முல்லை நிலத்தில் பிறந்தவர் ஆதலால் இடைக்காட்டுச் சித்தர் எனும் இப்பெயர் பெற்றவர் எனக் கூறுகின்றனர். இவர் பாடல்கள் பெரும்பாலும் முல்லை நிலத்தினை மையப்படுத்தியே பாடப்பட்டுள்ளன. அவை அனைத்தும் நற்தத்துவக் கருத்துகள் பொதிந்தனவாகக் காணப் படுகின்றன. அத்துடன் இவரது பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு என்ற சங்கநூல்களிலும் காணப்படுகின்றன.

இச்சித்தரின் பாடல்களில் கருத்தாழமிக்க பல வாழ்க்கைத் தத்துவங்கள் எடுத்தாளப் பட்டுள்ளதை நாம் காணலாம். ஆகவே நாம் நல்ல கருத்துகளை உள்வாங்கி அதன்வழி நின்று நலமான பெருவாழ்வினை பெறுவோமாக!

எண்ணிய முடித்தல் வேண்டும்
நல்லவே எண்ண வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
நண்ணிய உரிமை வேண்டும்
நாமதை பெறவும் வேண்டும்
கண்ணிலே ஒளியும் வேண்டும்
கன்னித்தமிழைக் காக்க வேண்டும்



# கனடாவில் அடுத்த தலைமுறைத் தமிழரும் தமிழும்

**வல்லிபுரம் சுகந்தன்**



முதுகலை மாணவன் இரண்டாம் ஆண்டு,
அண்ணாமலைக் கனடா வளாகம்.

வந்தாரை வாழவைத்தல் தமிழரின் மரபாகும். அந்தத் தமிழரே ஏதிலிகளாக, அகதிகளாக அலைந்து திரிந்த போதினில், அவர்களைத் தன்மண்ணில் குடியேற அனுமதித்து வாழவைத்துக் கொண்டிருக்கும் கனடாவில், எமது அடுத்த சந்ததியினரிடம் தமிழ்மொழி நிலைக்குமா என்பது மிகவும் சந்தேகத்திற்குரிய ஒன்றாக இருக்கின்றது. பல்கலாச்சாரங்கள் கொண்டவர்களைத் தன்னகத்தே கொண்டுள்ள கனடாவானது, இங்கே வாழ்பவர்களை அவர்களது கலாச்சாரங்களுடன் ஏற்றுக் கொண்டிருப்பதையும், பல்கலாச்சாரங்களைப் பேணி ஊக்குவிப்பதையும் பார்க்கையில், அதிலும் தை மாதத்தினை தமிழர் மரபுடைமைத் திங்களாக அங்கீகரித்திருப்பதையும் நோக்குகையில், தமிழ்மொழியினைக் கனடாவில் வாழும்மொழியாக நிலைபெறச்செய்வதற்காக, எமது அடுத்த சந்ததியினரிடம் உரிய முறையில் தமிழ்மொழியைக் கையளிப்பது இன்றைய சந்ததியினரின் கைகளில்தான் உள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெளிவாகத் தெரிகிறது. ஆயினும் அதற்கான போதிய தயார்ப்படுத்தல்கள் எம்மிடம் இல்லை என்பதும் மறுக்க முடியாத உண்மை. இனிமேலும் அவ்வாறான தயார்ப்படுத்தல்களை நாம் செய்யாது விடுவோமேயானால் எமது அடுத்த தலைமுறையைத்தாண்டித் தமிழ்மொழி வாழாது போகலாம்.

"ஒரு மனிதன் உண்மையில் இறந்துபோவது அவன் பற்றிய நினைவுகளை மக்கள் முற்றாக மறந்து போகையில் தான்"

இக்கூற்று மனிதனுக்கு மட்டுமல்ல, அவன் பேசும் மொழிக்கும் பொருத்தமாகவே அமைந்திருக்கிறது. எனவே தமிழ்மொழி கனடாவில் மறக்கப்படாமல் தொடர்ந்தும் உயிர்ப்புடன் வாழ்வதற்கு தமிழ்மொழியின் தொன்மையையும், அதன் சிறப்பையும், அதைக் கற்பதனால் உண்டாகும் நன்மைகளையும், தமிழின் முக்கியத்துவத்தையும் எம் இளந்தலைமுறையினர் ஏற்றுக்கொள்ளும் வகையில் எடுத்துரைத்தல் வேண்டும்.

தமிழ்மொழி உலகின் மிகப்பழமையான மொழிகளில் ஒன்று. உலகின் அங்கீகரிக்கப்பட்ட செம்மொழிகளில், வாழும்மொழிகளில் ஒன்றாக விளங்குவது அதன் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றது. இதனையிட்டுத் தமிழராகப் பிறந்ததில் எம் அடுத்த சந்ததி பெருமைப்படவேண்டும் என்பதை அவர்களுக்கு உணர்த்துதல் வேண்டும்.

ஒரு இனத்தின் தொன்மையை, அதன் வரலாற்றை நாம் அறிந்துகொள்வதற்கு மூலாதாரமாக விளங்குபவை அம்மொழியில் உருவாக்கப்பட்டிருக்கும் இலக்கியங்களாகும். "இலக்கியம் காலத்தைக்காட்டும் கண்ணாடி" என்பார்கள். அந்த வகையில் தமிழின் தொன்மைக்கு சான்றாக இன்று எம்மிடம் இருப்பவை தொல்காப்பியம் என்னும் இலக்கணநூலும், சங்க இலக்கியங்களாகிய தொகை நூல்கள் எட்டும், பத்துத் தனிப்பெரும் பாடல்களான பத்துப்பாட்டும் ஆகும். இவை தவிரவும் தொன்மைக் கதைகளாகவும், குறிப்புக்களாகவும், கர்ணபரப்புரைக் கதைகளாகவும், தொல்காப்பியத்திலும் காலப்பழமை வாய்ந்ததான அகத்தியம் என்னும் இலக்கணநூல்பற்றியும் மற்றும் முதற்சங்க, இடைச்சங்க காலங்களில் பற்பல நூல்கள் இருந்தன என்பதுபற்றியும் அறியக் கிடைத்தாலும் அவை இப்போது எம்மிடையே இல்லாததால் அவற்றைத் தமிழின் தொன்மைக்கு விஞ்ஞானரீதியிலான ஆதாரமாகக் கொள்ள முடியாது. ஆயினும் தொல்காப்பியர், தொல்காப்பியத்தின் பல இடங்களிலும், "என்ப", "என்மனார் புலவர்", "மொழிப" போன்ற பதங்களின்

ஊடாக தனக்கு முற்பட்ட அறிஞர்களைப் பெயர் சுட்டாமற் குறிப்பிட்டிருப்பதால், தொல்காப்பியத்திற்கு முன்னரேயே பல இலக்கணநூல்கள் இருந்திருக்கின்றன என்பதனை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் வகுத்தலே முறை. எனவே தொல்காப்பியத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே தமிழிலக்கியங்கள் தோன்றியிருக்கவேண்டும் என்பதும் அறிவியல் ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதே. அதுமட்டுமன்றி உலகப் பொதுமறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள திருக்குறளைத் தந்ததும் தமிழ்மொழியே. எனவே, எமது அடுத்த தலைமுறைக்கு தமிழின் தொன்மையையும் அதன் பெருமையையும் எடுத்துக்கூற வேண்டியது இன்றைய தலைமுறையினரான எமது தலையாய கடமையாகும். அதை எமது பிள்ளைகள் ஏற்றுக்கொள்ளத்தக்க முறையில் கூறவேண்டியது மிகமிக இன்றியமையாததாகும்.

பொதுவாக எல்லோருக்குமே இலக்கணத்தைக் கற்பதிலும் பார்க்க இலக்கியத்தைச் சுவைப்பதில் மிக்க ஆர்வம் இருப்பது இயல்பு. எனவே எம்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் இலக்கியச் செழுமையையும், கற்பனை வளங்களைம் நுகர்வதற்கு இளைய தலைமுறையினரை வழிப்படுத்துதல் வேண்டும். அதற்கு, தெரிந்தெடுக்கப்பட்ட இக்கால இலக்கியங்களில் தொடங்கிப் படிப்படியாக இலகுவான சங்ககால இலக்கியப் பாடல்கள் வரை அவர்களைச் சுவைக்க வைக்க வேண்டும். அப்படிச் செய்வோமேயானால் அதன்பின் அவர்களாகவே தமிழிலுள்ள எல்லா இலக்கியங்களைத் தேடி வாசிக்கத் தொடங்கிவிடுவார்கள். அப்படியான ஒருநிலையை அவர்கள் அடைந்தால் தமிழ் மொழியின் தொன்மையையும் அது கொண்டுள்ள இலக்கியச் செழுமைகளையும் அக்காலங்களில் வாழ்ந்த தமிழரின் பண்பாட்டு விழுமியங்களையும் நாகரிகச்சிறப்புகளையும், காதல், வீரம் கொடை போன்றவற்றில் எல்லாம் தமிழர்கள் பெற்றிருந்த சிறப்பினையும் உணர்ந்துவிடுவார்கள். அப்படி உணரும்பட்சத்தில், தாம் தமிழர் என்பதிலும், தமது தாய்மொழி தமிழ் என்பதில் நிச்சயம் பெருமிதம் கொள்வார்கள். எதனை நாங்கள் உயர்வாக பெருமையாக நினைக்கின்றோமோ அதனை இயல்பாகவே நாம் மதிக்கத் தொடங்கிவிடுவதுடன் எமது பிள்ளைகளுக்கும் அதனை வழங்க முயற்சிப்போம். அந்த வகையில், தாங்கள் தமிழராய்ப் பிறந்ததில் பெருமையையும் தமிழ்மொழியின் உயர்வினையும் உணர்ந்து கொண்ட இளையவர்கள் தாமாகவே தமிழ்மொழியை அவர்களுக்கு அடுத்துவரும் தலைமுறைக்கு கடத்தும் பணியினை செம்மையாகச் செய்வார்கள்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்று கூறிய வள்ளுவப் பெருந்தகையே,

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

என்றும் சொல்லியிருக்கிறார். எனவே எம் இளம் சந்ததியினர் தமிழ்மொழியினை விரும்பிக் கற்பதற்கு, முதற்படியாக நாம் ஒவ்வொருவரும் எங்கள் எங்கள் வீடுகளிலிருந்தே அதனை ஆரம்பிக்க வேண்டும். வீடுகளில் எம் குழந்தைகளுடன் தமிழ்மொழியில் மட்டுமே உரையாடுதல் வேண்டும். இதற்கு தளராத மனவுறுதி மிகவும் இன்றியமையாததாகும்.

சிறுவயதுப் பிள்ளைகள் கைக்கணினிகளில் அதிக நேரத்தைச் செலவு செய்ய அனுமதிக்கக் கூடாது. அப்படி அனுமதிப்பது அவர்களுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும். எங்களை எமது பிள்ளைகள் தொந்தரவு செய்யாமலிருப்பதற்காகவே நாங்கள் எம் பிள்ளைகளைக் கைக்கணினிகளில் அதிகநேரம் செலுவிடுவதை எமது வசதிக்காக அனுமதித்து விடுகிறோம். அது தவறு என்பதை நாம் உணர்ந்து கொண்டால், பிள்ளைகளுடன் எங்கள் நேரத்தை அதிகம் செலவிடுவோம். அப்போது எமது பிள்ளைகளுடன் தமிழறிவை வளர்க்கும் விளையாட்டுக்களை விளையாடலாம்.

எடுத்துக்காட்டாக விடுகதைகள் கேட்டல் (நொடி அவிழ்த்தல்). புதிர்க்கதைகள் கூறுதல் என்பவற்றைக் கூறலாம். அல்லது எங்கள் சிறுவயதுகளில் நாங்கள் விளையாடிய விளையாட்டுகளில் ஒன்றான, ஒரு எழுத்தைக் கூறி அந்த எழுத்தில் ஆரம்பிக்கும் ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர், பொருள், இடம், படம் என்பவற்றை குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதவேண்டும் என்று கூறலாம். இதன் மூலம் பிள்ளைகள் விரைவாகத் தமிழில் எழுதத் தேர்ச்சி பெறுவதுடன் அதிகளவிலான தமிழ்ச்சொற்களையும் அறிந்து கொள்வார்கள். அண்மையில் கனடாவில் உள்ள தமிழ் வானொலியொன்றிலும் இவ்வாறான நேயர் போட்டியொன்றைக் கேட்க நேர்ந்தது. ஆயினும் தொலைபேசியூடான அந்நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களில் ஒருவர்கூட இளையதலைமுறையைச் சார்ந்தவர் இல்லை என்பது மனவருத்தத்தைத் தந்தது. சிறு பிள்ளைகளுக்கு ஆர்வமூட்டும் சில விளையாட்டான தமிழ்ப்பாடல்களைச் சொல்லிக் கொடுக்கலாம்.

"அக்கா வீட்ட போனேன். அரிசிப்பொதி தந்தா. வேண்டாமெண்டு வந்தேன். வழியெல்லாம் பாம்பு. பாம்படிக்கத் தடிக்குப் போனேன். தடியெல்லாம் தேன். தேன் எடுக்க சட்டிக்குப் போனேன். சட்டியெல்லாம் ஊத்தை. ஊத்தை கழுவத் தண்ணிக்குப் போனேன். தண்ணியெல்லாம் மீன். மீன் பிடிக்க வலைக்குப் போனேன். வலையெல்லாம் ஓட்டை. ஓட்டை தைக்க ஊசிக்குப் போனேன். ஊசியெல்லாம் வெள்ளி. வெள்ளியடி வெள்ளி. உன்ரை கையில கிள்ளி"

என்று சொல்லி இறுதியில் பிள்ளையின் கையில் மெதுவாகக் கிள்ளினால் அப்பிள்ளை ஆர்வமுடன் தானும் இதைத் தனது நண்பர்களுடன் விளையட ஆரம்பிக்கும்.

"என்ன வேணும்?" "பழம் வேணும்." "என்ன பழம்?" "வாழைப்பழம்." "என்ன வாழை?" "கப்பல் வாழை." "என்ன கப்பல்?" "பாய்க்கப்பல்." "என்ன பாய்?" "ஓலைப்பாய்." "என்ன ஓலை?" "பனையோலை." "என்ன பனை?" "கட்டைப் பனை." "என்ன கட்டை?" "மரக்கட்டை." "என்ன மரம்?" "பூமரம்" "என்ன பூ?" "மல்லிகைப் பூ" "என்ன மல்லிகை?" "கொடி மல்லிகை" "என்ன கொடி?"

என்றவாறு கேட்டுக்கொண்டே போகலாம். விரும்பினால் "என்ன கொடி?" என்று கேட்கையில் பழக்கொடி என்று சொல்லி மீண்டும் "என்ன பழம்?" என்று சுற்றிச்சுற்றி வரலாம். இல்லையேல் வேறேதாவது சொல்லி விளையாடலாம் என்று இந்த விளையாட்டுகளைச் சொல்லிக் கொடுத்தால் பிள்ளைகள் ஆர்வமுடன் விளையாடுவார்கள். கைக்கணினிகளில் நிமிடத்திற்கு நிமிடம் புதுப்புது விளையாட்டுகள் உலாவரும் இன்றைய வேகமான உலகில் பிள்ளைகள் ஒரே விளையாட்டைத் தொடர்ந்து நீண்ட நாட்களுக்கு வியைாட மாட்டார்கள். எனவே அதற்கு ஏற்றவாறு புதுப்புது தமிழ்மொழிமூல விளையாட்டுக்களை நாம் தேடியறிந்து அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

பிறந்தநாள்விழாக்களை மிகுந்த செலவில் கொண்டாடும் நாங்கள், பிறந்தநாள் வாழ்த்துப் பாடல்களைக்கூடத் தமிழில் பாடுவதில்லை. வாழ்த்துகளைக்கூடத் தமிமிற் சொல்வதில்லை. அங்கே குழந்தைகளுக்கு வைக்கப்படும் எந்தவொரு போட்டியிலும் தமிழ்மொழி பாவிக்கப்படுவதுமில்லை. இத்தவறு முற்றுமுழுதாக பெற்றோரையே சாரும். அவர்கள் நினைத்தால் குறைந்தபட்சம் தமிழிலும் பிறந்தநாள் வாழ்த்தைக் கூறச் செய்யலாம். ஓரிரு போட்டிகளிலாவது தமிழ்மொழியை இடம்பெறச் செய்யலாம். இளையோரிடையே தமிழ்மொழியை ஊக்குவிக்க விரும்புவோர், தனித்தமிழில் இலகுவான கேள்வி-பதில் போட்டியை, சிறப்புப்போட்டியாக வைத்து வெற்றிபெறுபவர்களுக்கு அவ்விழாவில் கொடுக்கப்படும் பரிசுகள் அனைத்திலும் பெறுமதி மிக்கதான சிறந்த பரிசினைக் கொடுக்கலாம். இதன் மூலம் பிள்ளைகளிடையேயும் அவர்களின் பெற்றோர்களிடையேயும் தமிழ் மீதான ஆர்வத்தை நிச்சயமாக அதிகரிக்கச் செய்யலாம். இப்படியான போட்டிகள் ஒவ்வொரு பிறந்தநாள்க் கொண்டாட்டங்களிலும் வைக்கப்படுமெனின், பெற்றோரும் பிள்ளைகளும் மிகவும் விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் தங்களை அப்போட்டிக்குத் தயார்ப்படுத்திக்கொண்டு வருவார்கள்.

தாயகத்தில் மட்டுமன்றி சங்ககால வசிப்பிடங்களில் ஒன்றெனக் கருதப்படும் கீழடி அகழாய்வு மையம், மற்றும் ஆதிச்சநல்லூர் தொல்லியல் களம் போன்றவற்றிலும் தமிழரின் வரலாறுகள் மறைக்கப்படுகின்றன, மாற்றப்படுகின்றன என்று புலம்பித் திரியாமல், எங்களுக்குத் தெரிந்த எங்கள் வரலாறுகளை, எம்மவரின் வரலாறுகளை எங்கள் குழந்தைகளுக்குச் சொல்லித்தரலாம். ஒவ்வொருவரும் அவரவர்களுடைய பிள்ளைகளுக்குத் தங்கள் தங்கள் வராலாறுகளை, தாங்கள் கடந்துவந்த பாதைகளைக் கூறலாம். தங்கள் குழந்தைகளுக்கு அவர்களின் மாமாக்களின், சித்திகளின், சித்தப்பாக்களின், பெரியப்பாக்களின் மற்றும் அத்தைகளின் கதைகளைக் கூறலாம்.

அதனூடாக சங்க இலக்கியங்களில் காணப்படும் புறநானூற்றுக்கதைகளை அறிவதற்கான ஆர்வத்தினைக்கூட அவர்களிடைய தூண்டலாம். அதன்மூலம் எதிர்காலத் தொழில்நுட்பங்களை அவர்கள் தங்கள் காலத்தில் பயன்படுத்தி வரலாறுகளை மீட்டெடுக்கக்கூடியதாக இருப்பதுடன் அவர்களுக்கும் தமிழினத்தின் உண்மை வரலாற்றை அறிவதில் ஆர்வத்தை ஏற்படுத்தலாம்.

இவற்றிற்கெல்லாம் பொறுமையும் நீண்டகால அர்ப்பணிப்பும் தேவை. வீட்டில் அதைச் செய்வதற்குத் தாயின் பங்கே மிகமிக அத்தியாவசியமானதாகும். தாய்மொழியென்றே நாம் அழைக்கின்றோம். தமிழரான எமக்குத் தமிழே தாய்மொழி. ஆரம்பத்திலிருந்து எம்மை மிக அணுக்கமாகப் பேணி வருபவர் அன்னையே. குழந்தையைத் தூங்க வைப்பதற்காகத் தமிழ்த் தாலாட்டுப் பாடல்களைப் பாடலாம் அல்லது தமிழ்த் தாலாட்டுப் பாடல்களை இசைக்கவிடலாம். குழந்தைகள் காரட்டூன் பார்க்க அடம் பிடிக்கையில் தமிழ்மொழி மூலமான கார்ட்டூன்களையும் பார்க்கச்சொல்லி ஊக்கப்படுத்தலாம். ஏராளமான தமிழ்மொழி மூலமான கார்ட்டூன்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட கார்ட்டூன்களும் இலவசமாக இணையத்தில் கிடைக்கின்றன.

இவ்வளவு முயற்சிகள் நாம் மேற்கொண்டாலும், எமது இன்றைய சூழ்நிலையை நாம் கருதினால், கனடாவில் இங்கிருக்கின்ற எமது இளம் தலைமுறையினருக்கு அவர்களிடையேயான தொடர்பாடல் மொழியாக ஆங்கிலமே அமையப்போகின்றது. அதையும் நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். ஏனெனில் அவர்கள் பாடசாலைகளில் பல்வேறு மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்டவர்களுடன் ஒன்றாகப் படிப்பதாலும், கற்பித்தல் மொழி ஆங்கிலமொழியாக இருப்பதாலும் பாடசாலைகளில் அவர்களின் தொடர்பாடல்கள் அனைத்துமே ஆங்கிலமொழியிலேயே அமைகின்றன. எனவே பழக்கதோசத்தில் இயல்பாகவே அவர்கள் ஏனைய தமிழ்ப்பிள்ளைகளுடனும் ஆங்கிலத்திலேயே தொடர்பாடலை மேற்கொள்வார்கள். அதுமட்டுமன்றி அவர்களுக்குத் தங்களை வளர்த்துக் கொள்வதற்கு ஆங்கில மொழியறிவு மிகவும் அத்தியாவசியமானதும் கூட. ஆங்கிலமொழியறிவு இல்லாமல் இங்கு வாழ்வது கடினம். எனவே அவர்களுக்கு அவர்களின் தாய்மொழியான தமிழ்மொழி இரண்டாம் மொழியாகத்தான் இருக்கப் போகின்றது. அந்த இரண்டாம் மொழியிலும் அவர்கள் தேர்ச்சியுடையவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் நாம் பாடுபடுகின்றோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மேலும், எமது உறவுகள் உலகின் பலபாகங்களிலும் பரந்து வாழ்கின்றார்கள். அவர்களின் பிள்ளைகள் அந்தந்த நாட்டு மொழிகளையே தமது முதல்மொழியாகக் கொண்டிருக்கின்றனர். எனவே இவ்வாறு பரந்து வாழும் எங்கள் உறவுகளின் பிள்ளைகளுக்கான பொதுமொழியாகத் தமிழ்மொழியே இருப்பதால் எமது பிள்ளைகளுக்குத் தமிழ்மொழி அவசியம் என்பதையும் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அதுமட்டுமன்றி கனடாவில் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலுள்ள அரச நிறுவனங்களும் அரசுசாரா நிறுவனங்களும் தங்கள் பணியாளர்களுக்குத் தமிழ்மொழி தெரிந்திருப்பதை விரும்புவதையும் காணக்கூடியதாக உள்ளது. எனவே கனடாவில் தமிழர் செறிந்து வாழும் இடங்களில் வேலைவாய்ப்பிலும் தமிழ்மொழியறிவு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதையும் நாங்கள் உணர்ந்து எங்கள் பிள்ளைகளுக்குப் புரியவைத்தல் வேண்டும்.

முப்பது நாப்பது ஆண்டுகளுக்கு முன்னர் கனடாவில் தமிழ்ப் பாடசாலைகள் அமையும் என்று கனவில்கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டோம். ஆனால் இன்றைய நிலை? இன்று கனடாவில் சில வைத்தியசாலைகளிலும், வைப்பகங்களிலும் கூட தமிழ்மொழியிலான அறிவுப்புகள் மற்றும் சேவைகள் வழங்கப்படுகின்றன. வருங்காலம் எப்படி அமையும் என்று யாருக்கும் தெரியாது. ஒரு மரத்தை நடுபவன் அந்த மரம் தனக்கு உபயோகப்படும் என்று நினைத்து நடுவதிலும் பார்க்க தன் சந்ததி, அந்த மரத்தால் அதிக பயனடையும் என்று நினைத்தே நடுகின்றான். எனவே நாமும் பலனை எதிர்பாராது எம் கடமையினைச் செய்வோம். எமது இளம் தலைமுறை விரும்பியேற்கும் வகையில் அவர்களுக்குத் தமிழ்மொழி அறிவை ஊட்டுவோம். அவர்கள் தங்களது இளம் சந்ததிக்கு ஏற்ற முறையில் தமிழ்மொழியறிவைக் கொடுப்பார்கள் என்று நம்புவோம். நம்பிக்கைதான் வாழ்க்கை. காலம் பதில் சொல்லட்டும்.




# PEACE:

Peace can exist only in the present moment. It is ridiculous to say "Wait until I finish this, then I will be free to live in peace. What is 'this? A diploma, a job, a house, a payment of a debt? If you think that way, peace will never come. There is always another this, hat will follow the present one. If you are not living in peace at this moment, you will never be able to. If you truly want to be at peace, you must be at peace right now. Otherwise, there is only "the hope of peace one day" Thich Nhat Hanh, The Sun My Heart
Be at peace today by acknowledging your wandering mind and stay with your breath.

***Reema Sarin***

# இறக்கின்ற போதெல்லாம் பிறக்கின்ற வரம் வேண்டும்!

மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா
தமிழ் முதுகலை, முதலாம் ஆண்டு



முன்னைமொழி யாவைக்கும் மூத்தமொழி யானதமிழ்
மூவேந்தர் வளர்த்தமங்கை
மின்னலொளி வீசுவாள் மன்னுபுகழ் சூடுவாள்
மாறாத இளமைகொண்டாள்!
வேங்கடம் குமரியென விரிந்த பேரெல்லையுள்
வீசுகின்ற காற்றாகினாள்
ஓங்குபுகழ் நூல்களைத் தாங்குமவள் தாள்களை
நீங்குமோ எனதுமனமே!

முத்தான இலக்கியம் சொத்தாகத் தந்தவள்
முப்பாலிற் தித்திப்பவள்
வித்தான மாவீரம் விளைகின்ற நிலமானாகி
விறல்வேங்கைத் திறல்கண்டவள்
தத்துவம் வித்தகம் ததும்புமோ ரிலக்கணம்
தரணிக்கு முதற்தந்தவள்
எத்தனை பெருமைகள் என்னன்னைத் தமிழுக்கு
எதையாள்வேன் சொல்லுமனமே!

வள்ளுவன் தந்தகுறள் வெள்ளத்தை உள்ளத்துள்
அள்ளியது போதவில்லையே!
கள்ளொழுகும் கம்பனின் கவிமலரைக் கரம்பற்றிக்
களித்ததும் முழுமையில்லையே!
நெஞ்சத்தை ஈர்க்கின்ற செஞ்சொற் சிலம்போடு
கொஞ்சியுது நிறையவில்லையே!
கொஞ்சமோ பெருநிதியம் வஞ்சிமகள் காலடியில்
வசமாக்க வழிசொல்மனமே!

பக்தியொடு சுவைசொட்டும் முத்தான கவிகொண்டு
முடிசூடிப் பார்க்கவில்லையே!
எத்திக்கும் ஏற்றுகின்ற எட்டுத் தொகைகற்க
என்காலம் போதவில்லையே!
பத்துப் பெரும்பாட்டும் சித்தர் திருப்பாட்டும்
பதிந்துவரக் கூடவில்லையே!
கொத்துக்கொத் தாகஅவள் குவித்துள்ள புதையல்களைக்
கொள்ளும்வழி கூறுமனமே!

களவியலும் கற்பியலும் கலந்துதரும் அகநூலிற்
களிப்பெய்தக் காலமில்லையே
நளவெண்பா நாலடியார் நாலாயிரம் பனுவல்
நயம்கண்டு தெளியவில்லையே
பழமுதிரும் சோலையாய் பரணியும் குறிஞ்சியும்
பள்ளு முலாவுமென்றே
வளம்பொங்கு மிலக்கியம் வலம்வந்து பார்க்கவே
வாழ்நாளும் போதவில்லையே!

ஒட்டக்கூத் தன்ஔவை உயர்காள மேகமென
ஒப்பற்ற புலவரோடும்
மெட்டோடு இசைப்பாக்கள் மட்டற்ற வகைதந்த
மெய்ஞானப் புலவரோடும்
சுட்டபொற் சுடர்போலச் சுந்தரக் கவிதந்த
தற்காலப் புலவரோடும்
வெட்டவெளி தனிற்கூடி விரல்கோர்த்து நடைபோட்டு
வியந்துள்ளம் நிறையவில்லையே!

வரல்வேண்டும் நானென்றும் பரவுகின்ற தெய்வமின்று
வரமாக வொன்றுகேட்பேன்
தரல்வேண்டும் பிறவாமை யெனவேண்டேன் பலபிறப்புத்
தந்தருள்க எனவேண்டுவேன்
இறக்கின்ற போதெல்லாம் பிறக்கின்ற வரம்கேட்பேன்
இனியதமிழ்த் தாய்மடியிலே
பிறந்துதமிழ்க் கருவூலம் திறந்துஒவ் வொன்றாய்மெய்
மறந்துள்ளம் அதிற்தோயவே!



# போரே மீண்டும் வாராதே!

-சபா. அருள்சுப்பிரமணியம் M.A.



நேரே கண்டோம் அழிவுகளை
நீண்ட காலம் பட்டறிந்தோம்
போரே மீண்டும் வாராதே!
பொல்லாக் கொடுமைகள் தாராதே!

பலவித மாகத் தாக்கிவிட்டாய்
பற்பல சிதைவுகள் செய்துவிட்டாய்!
உலகில் மீண்டும் தலைகாட்டி
ஊழித் தாண்டவம் ஆடாதே!!

உன்னால் தாழ்ந்தவர் ஒருபக்கம்!
உன்னால் வாழ்ந்தவர் மறுபக்கம்!!
கண்ணாற் கண்ட கொடுமைகளைக்
காவித் திரும்ப வாராதே!

நொண்டிச் சாட்டுடன் வருகின்றாய்!
நூறு தீமைகள் செய்கின்றாய்!!
குண்டு போட்டுக் கடைசியிலே
கொன்று குவித்தேன் மகிழ்கின்றாய்!!

வீட்டிற் தொடங்கி மெதுவாக
வீதியில் நடந்து ஊர்வந்து
நாட்டிற் புகுந்து அழிவுகளை
நடத்தும் போரே வாராதே!

வல்லமை தன்னை வெளிக்காட்ட
வலிந்து போரிடும் நாடுகளால்
அல்லற் படும்நாம் வேண்டுகிறோம்!
அமைதி கெடுக்க வாராதே!!

தனிக்குடை யின்கீழ்க் கோலோச்சத்
தந்திர மாகச் செயற்படுவோர்
மனிதப் பண்பை மதிக்கின்ற
மாண்பைக் கற்க வைப்பாயா?

நட்பைக் குலைக்கும் போரேபோ!
நாட்டை அழிக்கும் போரேபோ!!
உட்பகை வளர்க்கும் போரேபோ!
உலகைச் சிதைக்கும் போரேபோ!!


World Saiva Mission
அண்ணாமலைக் கனடா வளாகம்
ANNAMALAI CANADA CAMPUS

நன்றி

வணக்கம்

SRUTHI MUSIC ACADEMY
EXCELLENCE IN MUSIC

# SRUTHI MUSIC ACADEMY

இசைத்துறையில் பல வருட அனுபவம் வாய்ந்த
பிரபல பல்கலை வித்வான், இசையமைப்பாளர்,
இலங்கை, கனடா வானொலி-தொலைக்காட்சி புகழ் கலைஞர்

"சங்கீத கலாவித்தகர் / சங்கீத வித்வசிரோன்மணி"

**Shri T.N.BALAMURALI** MSc(Eng), MA(Music)

(Founder & Artistic Director)



- -VIOLIN
- -VEENA
- -FLUTE
- -VOCAL
- -KEYBOARD
- -GUITAR



**Locations:**

- -MARKHAM
- -SCARBOROUGH
- -BRAMPTON
- -MISSISSAUGA

**Tel : 647-402-0352**

Email: sruthimusic@yahoo.ca

www.SruthiMusicAcademy.com

# FIND YOUR REAL ESTATE AGENT FOR YOUR NEEDS

## About Shankar Manickam... Top 1% Sales Rep In Canada

- Highest award winner -Chairman 2011,12,13,14,15,16
- TD Bank Partnership Award Winner 2012
- Working 7 Days a Week 9am-9pm
- Top 1% Sales Rep. in Canada
- Former Mortgage Advisor
- Full Time Realtor
- Home Inspector

**SOLD IN 15 DAYS or FREE**



## குறைந்த முதலீட்டில் எப்படி இரண்டாவது வீடு வாங்குவது?

## வீடு என்றால் சங்கர் மாணிக்கம், சங்கர் மாணிக்கம் என்றால் வீடு

# சங்கர் மாணிக்கம்

வீடு விற்பனை முகவர்

# 416.453.6666



HomeLife/ Future Realty Inc., Brokerage
*Independently Owned And Operated*

205-7 Eastvale Dr, Markham ON, L3S 4N8
Office: 905.201.9977

brightsun print - 416-845-6565